# சக்தி



## குழந்தைகளின் வாரப் பத்திரிகை



# அணில்

ஆசிரியர்: **அணில் அண்ணன்**

★ தொடர்கதை, நீதிக்கதை, நவீனக்கதை, பாட்டிக்கதை — இன்னும் பல கதைகள்

★ விநோதம், விசித்திரம், அதிசயம்,

★ விடுகதை, பழமொழி, படித்துப்பார், எழுதிப்பார் கேள்வி-பதில், அன்றாடச் செய்தி, தெரியுமா?, தெரிந்து கொள்ளுங்கள்,

★ இத்தனைக்கும் நீங்கள் ஒவ்வொரு வாரமும் செலவு செய்ய வேண்டியது ஒரே ஒரு அணாதான்

வருட சந்தா ரூ. 3. இரண்டு வருடங்களுக்கு ரூ. 5.

**சக்தி காரியாலயம், சென்னை-14**

# பொருளடக்கம்

பிப்ரவரி, 1954 மலர் 18 இதழ் 4


| | | | |
|---|---|---|---|
| கும்பமேளா | | தலையங்கம் | 1 |
| இலக்கணம் கசப்பா ? | ... | சி. ந. வைத்தீஸ்வரன் | 3 |
| குட்டிக் கதைகள் | ... | அலெக்ஸி டால்ஸ்டாய் | 8 |
| கீரையோ கீரை | ... | வை. கோ. | 11 |
| அறிவு வளர்ச்சி | ... | சதானந்த் ஜி. பட்கால் | 14 |
| அட கடவுளே ! இந்தக் குழந்தைகள் | ... | யஷ்பால் | 15 |
| கௌடர் | ... | பிலோ இருதயநாத் | 19 |
| மனித சுபாவத்தை மாற்றமுடியுமா? | ... | ஜே. பி. எஸ். ஹால்டேன் | 23 |
| அமெரிக்க பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தம் | ... | எஸ். ராமகிருஷ்ணன் | 26 |
| தேசீய இனங்களின் ஒற்றுமை | ... | பேராசிரியர் ஜி. நாகராஜன் | 30 |
| காதல் கை கூடியும்...! | ... | அரபு நாட்டுக் கதை | 36 |
| காவடிச் சிந்து | ... | மு. சண்முகம் பிள்ளை | 40 |
| புரணி வகைத் தாவரங்கள் | ... | எஸ். சுந்தரம் | 45 |
| புத்தக உலகம் | ... | ஆர். கே. | 49 |
| கள்வனின் காதலி | ... | வி. ரோஹிணி | 51 |


அட்டைப்படம் : பி. ரங்கநாதன், சென்னை.

★

விஜய சக்தி தை

வருடசந்தா ரூ. மூன்று தனிப்பிரதி அணா நான்கு

## பெருமையுடன் அறிவிக்கிறேம்

தமிழ்நாட்டின் தலைசிறந்த தமிழறிஞரின் செந்தமிழ்க் கட்டுரைப் புத்தகம் ஒன்றையும், தமிழ் நாட்டின் காந்தியுகக் கவிஞரின் அற்புத நாடகம் ஒன்றையும் தற்போது நாங்கள் வெளியிட்டிருக்கிறேம். இதை உங்களுக்குப் பெருமையுடன் அறிவிக்கிறேம்.

சொல்லின் செல்வர் **ரா. பி. சேதுப்பிள்ளை**

எழுதிய

**வேலின் வெற்றி** விலை ரூ. 3—8—0

**நாமக்கல் கவிஞர்**

எழுதிய

**மாமன் மகள்** விலை ரூ. 7—0—0

**பழனியப்பா பிரதர்ஸ்**

திருச்சி. & சென்னை 5.

வெளி வந்துவிட்டது !

**தேசியப்பிரச்னை—விமர்சனக் குறிப்புகள்**

**(லெனின்)**

இனப்பிரச்னை, மொழிப்பிரச்னைபற்றி, பல்வேறு கருத்துக்கள் மோதிக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

★ **விலை அணு 10**

★ **தனிப்பிரதி வேண்டுவோர் 12 அணு ஸ்டாம்புகள் அனுப்பவேண்டும்.**

**நியூ செஞ்சரி புக் ஹவுஸ்**

199, மவுண்ட்ரோடு

**மதராஸ் 2.**

விஜய
தை

# சக்தி

மலர் 18
இதழ் 4

மெய்ப்பொருள் காண்பது அறிவு

○

## கும்பமேளாவில் கோரம்

●

கும்பமேளா உற்சவத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் இழக்க நேரிட்டிருக்கிறது. கூட்டத்தின் நெரிசலில் சிக்குண்டு பெண்களும், குழந்தைகளும்—சுமார் ஆயிரம் பேர் என்று மதிப்பிடப் படுகிறது—நசுங்கிச் செத்த பரிதாபம் இந்திய வரலாற்றிலேயே ஒரு சோக சம்பவமாகும்.

இந்த கோரத்துக்குக் காரணம் என்ன? நாகர் சாதுக்களின் ஊர்வலத்தில், மக்கள் அவர்களைக் கண்டு தரிசிக்கவும், அவர்களது கால் தூசியை எடுத்து சிரமேற் போட்டுக் கொள்ளவும் நெருக்கியடித்துக்கொண்டு முன்னேறினர்கள். நாக சாதுக்கள் ஆவேசம் கொண்டு மக்களை ஈட்டி கொண்டு தாக்கியிருக்கிறார்கள். இதன் காரணமாக மக்கள் மூலைக் கொன்றாய் பதறிஓட, நெரிசல் ஏற்பட்டு பலர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிறுக்கிறது.

இந்தக் கோரம் நடந்ததற்கு காரணங்கள் ஏதாக இருந்தாலும், முழுப் பொருப்பும் மாகாண அரசாங்கத்தையே சாரும். கும்பமேளா **144** ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் திருவிழா. அந்தமாகாண மக்கள் மட்டுமல்லாமல் இந்தியாவின் மூலைமுடுக்குகளிலெல்லாமிருந்தும் லட்சக்கணக்கான மக்கள் அங்கே குழுமுவதுஇயல்பு. கூட்டத்தைச் சமாளிக்க சகல ஏற்பாடுகளும் செய்திருக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அரசாங்கம் இந்தப் பொருப்பிலிருந்து தவறிவிட்டது என்றே நாம் நினைக்கிறோம்.

**இந்த கோர சம்பவத்தில் உயிர் துறந்தவர்களின் உற்றார் உறவினர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.**

## அரசாங்கமும் குழந்தைகளும்

குழந்தைகள் தான் நாட்டின் செல்வம். அவர்களை ஒழுங்கான முறையில் பேணி வளர்ப்பதின் மூலம் நாம் நமது சமுதாயத்தின் நலனை அபிவிருத்தி செய்தவர்களாகிறோம் என்று நமது உதவி ஜனுதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் அகில இந்திய குழந்தைகள் மகா நாட்டில் கூறியிருக்கிறார். நமது அர்த்தமற்ற கோட்பாடுகள், ஜாதிய வெறி, மத மாச்சர்யங்கள் குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் தூவப்பட்டு அவர்களின் எதிர்கால வாழ்வையே பாழடிக்கிறோம் என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறுகிறார். குழந்தைகளின் உள்ளங்களில் உயரிய கருத்துக்களைப் புகுத்தப் பெற்றோர்கள் பாடு பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார் அவர். உதவி ஜனுதிபதியுடன் சேர்ந்து நாமும் பெற்றோர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். ஆனுல் அதேநேரத்தில் அரசாங்கம் இந்தவகையில் என்ன உதவி செய்கிறார்கள் என்றும் அறிய ஆசைப்படுகிறோம்.

பொழுது விடிந்தால், பொழுது போனுல். நமது தலைவர்களின் பிரசங்கங்களுக்கும் உபதேசங்களுக்குமோ குறைச்சலேயில்லை. வெறும் உபதேசங்களாலும் பிரசங்கங்களாலும் மட்டும் பிரச்னையைத் தீர்த்து விடமுடியாது. அரசாங்கமும் அதற்காவன செய்ய வேண்டும்.

இன்று குழந்தை உள்ளங்களில் தீய எண்ணத்தை வளரவிடும் சக்தி வளர்ந்திருக்கின்றன. குழந்தைப் புத்தகங்கள் என்றும், பத்திரிகைகளென்றும் கணக்கற்ற குப்பைகள் அமெரிக்காவிலிருந்து இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டு தெருவெங்கும் விற்கப் படுகின்றன. இவைகள் நிச்சயம் குழந்தைகளை கொலைகாரர்களாகவும், கொள்ளையர்களாகவுமே மாற்றும். இது நாம் சொல்லுவது மட்டுமல்ல, பிரிட்டன் பிரான்ஸ் போன்ற நாட்டுக் கல்வி அதிகாரிகளும், பெற்றோர்களுமே கூறுகின்றனர். ஏன் அமெரிக்கப் பெற்றோர்களே இம்மாதிரிப் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் கண்டிக்கின்றனர். அமெரிக்கப் பெற்றோர்களே அபாயஅறிவிப்புச் செய்கின்றனர்.

இம்மாதிரிக்குப்பை இலக்கியத்தைத்தான் நமது அரசாங்கம் இங்கே தாராளமாக உலவ விடுகிறார்கள். இதை உடனடியாகத் தடை செய்ய வேண்டும். இதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா?

O

# இலக்கணம் கசப்பா?

# உஷாவைக் கேளுங்கள்

சி. ந. வைத்தீஸ்வரன்

●

"இந்த உஷாவைப் பாருங்கோன்னு; ஏதோ நியூஸ்பேப்பரைப் புரட்டிப் புரட்டிப் பார்த்திண்டிருக்கேளே" என்று படபடப்பாய்ப்பேசினாள் சரஸ்வதி. உடனே ஜானகிராமன் பேப்பரைக் கீழே போட்டுவிட்டு, "என்ன சரஸி என்ன?" என்று அருகில் வந்தார். "பாருங்கோ உஷா பண்ற ரூட்டியே. குழந்தைக்கு வைத்திருந்த பசும்பாலையெல்லாம் உங்களுக்கு கலக்கின காப்பியிலே கொட்டி விட்டாள். இவள் பண்ற சேஷ்டையை யாரால் பொறுக்க முடியும்? கையுங் காலும் வளர்ந்து போச்சு, வாயும் வளர்ந்து போச்சு. இவளைக் கொண்டுபோய் ஏதாவதுபள்ளிக்கூடத்திலேதள்ளிப்பிடுங்கோ. இல்லாப்போனா" என்று சொல்லி முடிப்பதற்குள் ஜானகிராம் "சரஸி! சரி அதற்கென்ன அப்படியே செய்தாப் போச்சு. அவளுடைய சித்தியுடன் அனுப்பிச்சிட்டாப் போறது" என்று சமாதானம் கூறினார்.

சர்க்கார் அடக்குமுறைச் சட்டங்களைப் பிரகடனம் செய்கிறது. இவை சுதந்திர தாகமுடையவனுக்குப் பொறுக்கமுடியாத வேதனையாகிறது. இதை எதிர்க்கிறான். பலன் என்ன? வாய்ப்பூட்டு, தடியடி ஊமைக்குத்து, சிறைவாசம். அதே போல் உஷா வீட்டில் அப்பா அம்மா ஏற்படுத்திய சட்ட திட்டங்களுக்குப் பங்கம் விளைத்துவிட்டாள். சரஸ்வதி வாதி, உஷா பிரதிவாதி. ஜானகிராமன் நீதிபதி. தீர்ப்பு விதித்தாகிவிட்டது. என்ன? சிறைவாசம்! பள்ளிவாசம்! யாருக்கு? மூன்று வயது மகள் உஷாவுக்கு. அடுத்த நாளே உஷா சித்தியுடன் புறப்பட்டு விட்டாள் தண்டனை அனுபவிக்க! சித்தியும் அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒரு ஆசிரியை. சுமார் எட்டரை மணியிருக்கும். குழந்தைகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றனர். எல்லாம் மொட்டும் முளையும். மூன்று வயதிலிருந்து ஐந்து வயதிருக்கும். சாதாரணப் பள்ளிக்கூடமாயிருந்தால் வரும்போதே உஷா நூற்றுக்கணக்கான பிள்ளைகளின் பெருங்கூட்டத்தைக் கண்டு பயந்தே இருப்பாள். ஆனால் இது ஒரு சிறு பள்ளிக்கூடம். சிறு தோட்டத்துக்குள் அமைந்த ஒரு பங்களா. சுமார் ஐம்பது குழந்தைகள் கூடிக் குலாவி வாழும் பள்ளிக்கூடம். இதற்குப் 'பள்ளிக்கூடம்' என்ற பெயரே பொருத்தமில்லை. முதலில் உஷா கொஞ்சம் வெட்கப்பட்டாள். சித்தியின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு உள்ளே வந்தாள். தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்து அசோகா "சித்தி! சித்தி! புறா ரெண்டு முட்டை வைத்திருக்கிறது. வந்து பாருங்கோ" என்றான். கையிலே

---

குழந்தைகளுக்குக்கல்விபோதிக்க எந்த முறையைக் கையாளுவது? இந்தக் கேள்விக்கு பலர் பலவிதமான விடைகளைக் கொடுக்கின்றனர். இந்தக் கட்டுரை ஒரு வழியைக் காட்டுகிறது கட்டுரையாளர் குழந்தைகளுக்கான பள்ளியில் குழந்தைகளோடு பழகுபவர்.

நவதானியங்களை வைத்துக்கொண்டு தீனி போட்டுக்கொண்டிருந்தான் கோவிந்தன். வேறு ஒரு பக்கம் வசந்தா முள்ளங்கி இலையை முயலுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தாள். உஷாவுக்கு வெள்ளை முயல் மேல் கண்ணோட்டம் சென்றது. சித்தி அதை உணர்ந்து மெதுவாக முயல் கூட்டண்டை அழைத்துக் கொண்டு போனாள். "சித்தி இந்த முயல் நாளைக்குக் கட்டாயம் குட்டி போடப் போகிறது. அடிவயிற்றிலிருந்து மயிரைப் பிய்த்துக் கொள்கிறது" என்றான் ரவி. இவ்வளவு ஞானம் நாலு வயதுக் குட்டிப்பயல் ரவிக்கு எப்படித் தெரிந்தது என்று சித்திக்கே ஆச்சரியம். வேதாவும், பார்த்தசாரதியும் சிறு சல்லிப்பானையிலே தண்ணீர் கொண்டு கனகாம்பரச் செடிக்கு நிதானமாக ஊற்றிக் கொண்டிருந்தனர். சந்துருவும் கீதாவும் கண்ணாடித் தொட்டியில் இருந்த மீன் குஞ்சுகளுக்கு பிஸ்கோத்து போட்டுக் கொண்டிருந்தனர். இத்தனை வேடிக்கைகளும் பார்த்துக்கொண்டே உஷா மற்றக் குழந்தைகளுடன் மெதுவாக பங்களா வராண்டாவுக்குள் அடிஎடுத்து வைத்தாள். இரண்டு குழந்தைகள் எதிரே உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் முன்னே சின்னஞ் சிறு மணை; அப்பளக் கோல்; இவர்கள் சப்பாத்தி மாவைப் பிசைந்து என்ன அருமையாக வட்ட வட்டமான சப்பாத்தி போட்டுக் கொண்டிருந்தனர்! வேறொரு பக்கம் ஒரு சிறு குழந்தை தட்டமும் மணியும் வைத்துக்கொண்டு என்ன கண்ணும் கருத்துமாக 'பிராசோ பாலிஷ்' போட்டுக் கொண்டிருந்தான்! வேறொருவன் ஒரு ஜோடி பூட்ஸை வைத்துக்கொண்டு பாலிஷ் போட்டுக்கொண்டிருந்தான். ஒருவன் தன் வட்டத் தகட்டைக் காகிதத்தின் மேல் வைத்து வட்டமிட்டு அதற்கு வர்ணம் தீட்டுகிறான். ஒருவன் வர்ண மணிகளைக் கோர்க்கிறான். வேறு ஒருவன் தன் கைகளைச் சோப்புப் போட்டுத் தேய்த்துத் தேய்த்து ஒரு பேசினில் கழுவுகிறான். ஒரு சொட்டுத் தண்ணீர் கீழே சிந்த வேண்டுமே! அப்படிச் சிந்தினாலும் உடனே ஒரு துணிகொண்டு அதைத் துடைத்துவிடுகிறான். ஹாலில் ஒரு குழந்தை சிறு துணியால் தானே தன் கண்களைக் கட்டிக்கொள்கிறது. ஏதோ சில உருளைகளை எடுக்கவும் முன்னே இருக்கும் பள்ளங்களில் அவைகளைப் பொருத்திக்கொண்டும் இருந்தது. இந்தக் கண்கட்டி விளையாட்டிலும் அந்த உருளைகளின் மேலும் உஷாவுக்கு ஆசை. தானும் போய் செய்யலாமா என்று நினைத்தாள். இதற்குள் அத்தை மெல்லிய குரலில் "ஒளிபடைத்த கண்ணினாய் வா வா" என்று பாட ஆரம்பித்தாள். அத்தை தான் குழந்தைகளின் ஆசிரியை. இந்தப் பள்ளிக்கூடத்தில் 'சார்' என்றோ 'டீச்சர்' என்றோ கூப்பிடுவதில்லை. அத்தை, மாமா, சித்தி, அக்கா, அண்ணா, மன்னி, தாத்தா என்றுதான் ஆசிரியர்களை அழைக்கின்றனர் குழந்தைகள். இது ஒரு பெரிய குடும்பம் என்றேனே அப்படித்தான். அத்தை பாடினவுடன் குழந்தைகள் அவரவர் செய்து கொண்டிருந்ததை அப்படி அப்படியே போட்டுவிட்டு வராமல் அவரவர் வேலையைப் பூர்த்தி செய்து சாமான்களை அதனதன் இருப்பிடத்தில் ஒழுங்காக வைத்துவிட்டு ஆளுக்கு ஒரு வர்ணக் கொடியை ஏந்திக்கொண்டு ஹாலின் மத்தியில் தீட்டப்பட்ட வட்டக்கோட்டின் மேல் ஒழுங்காக நின்றனர். உஷாவுக்கும் ஒரு கொடியைக் கொடுத்தாள் ஒரு குழந்தை. உஷாவும் குறிப்பறிந்து ரொம்ப நாள் பழகினவள் போல் எல்லோருடனும் கலந்து கோட்டின்மேல் நின்றாள். எல்லாக் குழந்தைகளும் "ஒளி படைத்த கண்ணினாய் வா வா" என்று பாடிக்கொண்டே கோட்டின்மேல் அடிமேல் அடி எடுத்துவைத்துச் சென்றனர். கோட்டை விட்டுப் பாதங்கள் வெளியே போகாமல் நடப்பதிலே ஓர் தனி இன்பம் பெற்றனர். இப்

சக்தி

படி முதல் நாள் அனுபவம் உஷாவுக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சு என்றே நினைத்துக் கொண்டாள். அடுத்த நாள் வரும்போது கையிலே ஒரு பிஸ்கெட்டும் முள்ளங்கி இலையும் கொண்டு வந்தாள். முயலுடனும் மீனுடனும் தன் பாஷையிலே பேசிக் கொஞ்ச ஆரம்பித்து விட்டாள். ரொம்பநாள் பழகின பேர்வழிபோல தினமும் உஷா மற்ற குழந்தைகளுடன் கூடிப் பழகினாள். சதா ஏதோ செய்துகொண்டிருந்தாள். இங்கே "அதைத் தொடாதே இதைத் தொடாதே" என்று அத்தை சொல்ல மாட்டாள் என்று தெரிந்து கொண்டாள். அது மாத்திரமா? அத்தையே "இதைத் தொட்டுப் பார், இதைக் கோர்த்துப் பார், இதைத் தடவிப்பார், இதை நிறுத்துப்பார்" என்றெல்லாம் சொல்லியும் செய்தும் காட்டுவாள். உஷா நாளுக்கு நாள் தன் விரல்களைப் பற்பல இன்பம் தரும் பணிகளில் உபயோகித்து ஒரு நயத்தைப் பெற்று வந்தாள்.

உஷாவைப் பள்ளிக்கூடத்திலே "தள்ளி" ஆறு மாதங்களாயின. ரகளை எல்லாம் இப்பொழுது இல்லை. ரூட்டி இல்லை. வைத்த சாமான்களைக் கலைக்கிறதில்லை. அப்பா அம்மா ஒழுங்கில்லாமல் வைத்தாலும் உஷா எல்லாவற்றையும் ஒழுங்காக வைத்து விடுவாள். இதெல்லாம் பார்த்து சரஸ்வதிக்கு மனசிலே திருப்திதான். பாட்டிக்கு ஒரு சந்தேகம். "என்ன சரஸி உஷாவை ஆறு மாசமாப் பள்ளிக்கூடம் அனுப்பிச்சாச்சு. இன்னும் "அ ஆ" கூடத் தெரிந்து கொள்ளலையே! என்ன பள்ளிக்கூடம்! சிலேட்டா, பென்சிலா, புத்தகமா, ஒன்றுமில்லே. ஏதோ போரா, வாரா, என்ன பண்ராளோ போய்ப் பார்த்துட்டு வர்லாமின்னிருக்கிறேன் இன்றைக்கு" என்றாள். உஷாவுடன் பள்ளிக்கூடம் வந்தாள். குழந்தைகளின் போக்கைக் கவனித்தாள். அத்தையையும் உஷாவைப் பற்றிக் கேட்டே விட்டாள். அத்தையும், "அம்மா நீங்கள் அவசரப்பட வேண்டாம். இங்கு கட்டாயம் இல்லை; பயமுறுத்தல் இல்லை; தண்டனை இல்லை; வசவு இல்லை. குழந்தைகள் தாமே கற்று வருகின்றனர். நீங்களும் பொறுமையாகக் கவனித்து வாருங்கள்" என்று சமாதானம் சொன்னாள். பாட்டிக்கு அது நியாயமாகவே புலப்பட்டது. குழந்தைகளின் சுயேச்சை விளையாட்டுப் போக்கு முறைப் படிப்பை கவனித்தாள். தானும் உஷாவைப் போல் இருந்தால் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும் என்று மனக்கோட்டையும் கட்டிக் கொண்டே அன்று வீடு திரும்பினாள் உஷாவுடன்.

அத்தை சொன்ன நாள் வந்தது. உஷாவின் விரல் பக்குவமும், உளப் பக்குவமும் வந்தது. அத்தை ஒரு சிறு பெட்டியிலிருந்து நீல அட்டைகள் இரண்டை எடுத்தாள். ஒவ்வொரு அட்டையும் 8 அங்குல நீளமும் 4 அங்குல அகலமும் இருந்தது. அதன் மேல் சுமார் 3½ அங்குல உயரமுள்ள உப்புக் காகித எழுத்து ஒட்டப்பட்டிருந்தது. ஒன்று 'அ' மற்றொன்று 'உ' இவைகளை உஷா முன் வைத்து முதல் இரு விரல்களால் மெதுவாக அதன் மேல் விளம்பி 'அ', 'உ' என்று ஸ்பஷ்டமாக உச்சரித்துக் காட்டினாள். உடனே உஷாவும் அப்படியே தானும் உச்சரித்துக் கொண்டே 'அ', 'உ' இரண்டையும் விளம்பினாள். பிறகு 'இ', 'எ', 'ஒ' இவைகளையும் விளம்பிக் காட்டி உச்சரிக்கவும் செய்தாள் அத்தை. உஷாவும் அப்படியே செய்தாள். இந்த ஐந்து எழுத்துக்களில் எதைக் கேட்டாலும் எடுத்து உச்சரித்து விளம்பிக் காட்டி விடுவாள். உஷா குழந்தையின் விருப்பத்தையும் அதன் சலிப்பையும் ஒட்டியே அத்தை எழுத்துக்களை அறிமுகப்படுத்தி வைத்தாள். அடுத்த நாள் வந்தவுடன் உஷா வேறு ஒரு எழுத்துப்

பெட்டியைப் பார்த்தாள். அதில் சிவப்பு அட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. அவைகளில் புள்ளி போட்ட எழுத்துக்கள் உப்புக் காகிதத்தில் வெட்டப்பட்டு ஒட்டி இருந்தன. "இவை என்ன?" என்று கேட்டாள் உஷா. அத்தை இது தான் சமயம் என்று 'ம்' என்ற எழுத்தை எடுத்தாள். நிதானமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் அதிக ஒலி வெளியே வராதபடியும் 'ம்' என்று ஒலித்துக் காட்டினாள். விளம்பியும் காட்டினாள். இந்த 'ம்' அம்மாவில் வருகிறதே அந்த 'ம்' தான். அம்மியிலே வருகிறதே அந்த 'ம்' தான் என்று சொன்னாள். இதைக் கேட்ட உஷாவும் தானே 'அம்மா, அம்மி' என்று உச்சரித்துப் பார்த்து 'ம்' 'ன்' ஒலியை நன்கு உணர்ந்து கொள்கிறாள். வடிவத்தையும் விளம்பி விளம்பித் தெரிந்து கொள்கிறாள். இப்படி இரண்டாம் நாளில் 'ல், ர், ட், வ், ண்,' ஆகிய எழுத்துக்களை உச்சரித்து உருவங்களையும் தெரிந்து கொள்கிறாள். இவ்வாறு இந்த வரி வடிவங்களைத் தெரிந்து கொண்ட பிறகு மற்ற எல்லா எழுத்துக்களையும் வரிசைக் கிரமமாக அறிமுகப் படுத்தவில்லை. நாமெல்லாம் கற்றுக் கொண்டோமே 'அ ஆ இ ஈ' என்று இருநூற்றுப்பதினாறு எழுத்துக்களையும், அப்படியில்லை. இந்தச் சில எழுத்துக்களைக் கொண்டே எப்படி சொற்களை அமைக்கலாம் என்று அத்தை ஆரம்பித்து விடுகிறாள். முதலில் ஒரு மணியை உஷாவுக்குக் காட்டுகிறாள். "இந்த மணியை வைக்கலாமா? மணி என்பதை, ம் அ ண் இ" என்று அழுத்தமாக உச்சரித்து தனி எழுத்துக்களை வேறு ஒரு பெட்டியில் இருந்து எடுத்துக் கொள்கிறாள். இந்த எழுத்துக்கள் பலகையில் வெட்டப்பட்டவை. ஒவ்வொன்றும் 3½ அங்குலம் உயரமிருக்கும். மெல் எழுத்துக்கள் சிவப்பு நிறம். சிவப்புப் புள்ளிகள் வேறு தனியாக இருக்கும். உயிர் எழுத்துக்கள் நீல நிறம். உஷாவுக்கு இது மெய், இது உயிர் என்ற பெயர் என்னமோ தெரியாது. அத்தை இந்த எழுத்துக்களை மணியின் ஓரத்தில் இப்படி அடுக்குகிறாள்.

 **ம்அ ண்இ**

இதற்கடுத்தது "கண்" வைக்கலாமா என்று இடது புறம் கண்ணின் படத்தை வைக்கிறாள். வாயால் கண் என்பதைத் திருத்தமாக நிறுத்தி உச்சரிக்கிறாள். அப்பொழுது க்அ ண் என்று ஒலிக்கும்படி செய்து பக்கத்தில்

 **க்அ ண்**

என்று எழுத்துக்களை அடுக்குகிறாள். இப்படியே "பூனை" வைக்கலாமா, "குடை" வைக்கலாமா, "கொடி" வைக்கலாமா? என்று அவைகளுக்கு வேண்டிய எழுத்துக்களையும் படங்களையோ சாமான்களையோ வைத்துக் காட்டுகிறாள். இவைகளை உஷா உற்றுக் கேட்டுக் கொண்டே வருகிறாள். ஒவ்வொரு எழுத்தின் ஒலி பின்மேல் அவள் கவனம் செல்கிறது. மனதுக்குள்ளே சொல்லிப் பார்த்துக் கொள்கிறாள். உதடும் உச்சரித்துப் பார்த்துக் கொள்கிறது. இப்படி ஒருவாரம் நடந்துகொண்டே வருகிறது. சுமார் பத்து நாட்களுக்குள் உஷாவுக்கு வார்த்தைகளை வைக்க வேண்டும் என்று ஏதோ உள்ளிருந்து உந்துகிறது. "அத்தை! அத்தை! கோழி வைக்கலாமா, நாய் வைக்கலாமா, மரம் வைக்கலாமா" என்று ஊக்கத்துடன் கேட்கிறாள். எழுத்துப் பெட்டிக்குமுன் உட்காருகிறாள். உதட்டால் உச்சரித்துக் கொள்கிறாள். க்ஓ ழ்இ; ந்ஆ ய்; ம்அ ர்அ ம் என்று வைக்கிறாள். ஒவ்வொன்றுக்கும் நேர் இடது பக்கம் அந்தந்த பொம்

மைகளையும் வைத்து மகிழ்கிறாள். ஏதோ சில எழுத்துக்களைத் தான் கற்றுக்கொண்டவுடனே வார்த்தைகளை அடுக்க ஆரம்பித்து விடுகிறாள். அவளுக்கு உண்டாகும் ஆனந்தத்துக்கு அளவில்லை அத்தைக்கு உண்டாகும் ஆனந்தத்துக்கோ கேட்க வேண்டாம். மடை திறந்து விட்டாய் விட்டது. உஷா எந்த வார்த்தையும் வைத்து விடுகிறாள். எங்கு சென்றாலும் சரி, வீட்டிலும், தெருவிலும் எங்கும் மனதுக்குள் வார்த்தைகளின் ஒலியைச் சொல்லிச் சொல்லிப் பார்த்துக் கொள்கிறாள். இப்படி இருக்க ஒரு நாள் மாடு என்றே வைத்துவிடுகிறாள். ம்ஆட்உ என்று வைக்கவில்லை. எப்படி? மற்ற குழந்தைகள் வைப்பதைக் கவனித்து வந்திருக்கிறாள். மேலும் "ஆ" என்ற எழுத்துள்ள பெட்டி அறையின் அடியில் "ா" என்ற உருவம் எழுதப்பட்டிருக்கிறது. இதென்ன என்று அத்தையைக் கேட்டபோது இது "ஆ" என்கிற குறிக்கு பதிலாக வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறாள். வேறு ஒரு சமயம் "ம்" ன் புள்ளியை எடுத்து விட்டால் "ம" ஆகும் என்றும் காட்டியிருக்கிறாள். அப்படியே மற்ற எழுத்துக்களுக்கும் காட்டியிருக்கிறாள். இது மனதில் ஊறியிருக்கிறது. முதலில் அரை மணி நேரம் கூட சலிக்காமல் "ம்அண்இ" என்றெல்லாம் இருபது வார்த்தைகள் வைத்தவள். இப்பொழுது "மணி" என்றே வைக்க ஆரம்பித்து விட்டாள்.

எப்படி இவள் இம்மாதிரி ஒரு முறையிலிருந்து இன்னொரு முறைக்கு வந்தாள் என்பது கண்ணால் கண்டவர்தான் நம்புவார்கள். ஒரு சிரமமும் இல்லை. இது எல்லாம் மூன்று வாரத்துக்குள் அதாவது எழுத்தை, முதல் முதல் அறிமுகப் படுத்தியதிலிருந்து ஒரு மாதத்துக்குள் எந்த வார்த்தை வேண்டுமானாலும் பிழையின்றிக் கோர்த்து விடுகிறாள். "சின்னவாளா இருக்கப் போத்தான் "ம்அண்இ" என்று வைக்கணும். இப்பெல்லாம் "மணி" என்றுதானே வைக்கணும்" என்று உஷா தனக்குள்ளே வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டாள். ஒரு மாதத்துக்குள் ரொம்பப் பெரியவளாய் விட்டாள்! ஒருநாள் அத்தை இந்தச் சின்னக் குழந்தைகள் என்ன அற்புதக் காட்சிகளைக் காட்டவல்லவர்கள் என்று சித்தியிடம் எடுத்துக் கூறி இருவரும் மகிழ்ந்து கொள்கின்றனர். மெதுவாக உஷா வார்த்தைகளை வாசிக்க ஆரம்பிக்கிறாள். "அ" வரிசை "ஆ" வரிசை "இ" வரிசை என்று சிறு சிறு புத்தகங்களை எடுத்து வாசிக்கிறாள். சுமார் இரண்டரை மாதங்கள் ஆயின. எழுத்துக்களை அறிமுகப்படுத்தி. இப்பொழுது எந்த வார்த்தையும் கோர்த்து விடுவாள். படித்தும் விடுவாள். எழுதியும் விடுவாள். இவள் கைவிரல்கள் எழுத்துக்களை விளம்பி விளம்பியும், சித்திரம் வரைந்து வரைந்தும், நன்றாகப் பழகிவிட்டன. அச்சுப்போல் எழுதுகிறாள். காப்பி எழுதினவள் கூட அவ்வளவு நன்றாக எழுத முடியாது.

நாமெல்லாம் மேல் வகுப்பிலே க்+அ=க; ம்+ஐ=மை என்றெல்லாம் மண்டையை உடைத்துக் கொள்கிறோம். தொல்காப்பியரையும், பவணந்தி முனிவரையும் வெறுக்கிறோம். இலக்கணம் கசப்பென்று முகத்தைச் சுழிக்கிறோம். இலக்கணம் கசப்பா? உஷாவைக் கேளுங்கள். ★

---

## பேச்சுக்கலை

பேசுவதற்கு விஷயமில்லாவிட்டால் பேச மேடை ஏறாதே; சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்ததும் உடனே உட்கார்ந்துவிடு.

—விதர்ஸ்பூன்




அலெக்ஸி டால்ஸ்டாய்

## ஆடு, நரி, ஓநாய்

ஒரு ஆடு அதை வளர்த்து வந்த குடியானவனிடமிருந்து தப்பி ஓடிச் சென்றது. போகும் வழியில் அது ஒரு நரியைச் சந்தித்தது.

நரி ஆட்டைப் பார்த்து 'எங்கே கிளம்பிவிட்டாய் ஆட்டுக்குட்டியே?' என்று கேட்டது.

ஆடு சொல்லியது: 'ஓ! நரியாரே, எனது அருமைத் தங்கையே, நான் ஒரு குடியானவனிடம் வசித்து வந்தேன். வாழ்க்கையே அங்கே சகிக்க முடியவில்லை. ஒரு தறுதலை ஆடு இருக்கிறது. அது ஏதாவது குறும்பு செய்து கொண்டிருக்கும். அது செய்யும் குறும்புகளுக்கெல்லாம் என் மேல் பழி வந்து சேரும். ஆதலால் நான் வீட்டைவிட்டுக் கிளம்பி விடுவதென்று முடிவு செய்து, அப்படியே விதி விட்டவழி செல்லுகிறேன்.'

இதைக் கேட்ட நரி, 'என் நிலையும் இதே மாதிரிதான். கழுகோ, பருந்தோ கோழிக்குஞ்சை அடித்துக் கொண்டுபோய் விட்டால் என் மேலேயே எப்பப் பார்த்தாலும் பழி சுமத்துகிறார்கள். ஆகவே நாம் இருவருமே ஒன்றாக ஓடிவிடுவோம்!' என்று சொல்லியது.

நரியும், ஆடும் ஒன்றாகச் சென்றன.

கொஞ்ச நேரத்தில் அவை ஒரு பசி எடுத்த ஓநாய் ஒன்றைச் சந்தித்தன.

ஓநாய் இவைகளைப் பார்த்து, 'என்ன இருவரும் எங்கே போகிறீர்கள்' என்று கேட்டது.

நரி: 'நாங்க எங்கள் விதிவிட்ட வழி செல்லுகிறோம்'

ஓநாய்: 'அப்படியானால் நாம் எல்லோருமே ஒன்றாகச் செல்லுவோம்'

ஆடு, நரி, ஓநாய் மூன்றும் ஒன்றாகச் சென்றன. திடீரென்று ஓநாய் ஆட்டைப் பார்த்துக் கேட்டது.

'என்ன ஆட்டுக்குட்டியே, என்னுடைய கம்பளிக் கோட்டை நீ எடுத்துப் போட்டுக்கொண்டாய்.'

ஓநாயின் இந்தக் கேள்வியைக் கேட்ட நரி குறுக்கிட்டு,

'என்ன தம்பி, இது உண்மையில் உன்னுடைய கோட்டா' என்று ஓநாயைக் கேட்டது.

ஓநாய்: நிச்சயமாக இது என்னுடைய கம்பளிக் கோட்டேதான்.'

ருஷ்யாவின் நாடோடிக் கதைகள் இவைகள். இவைகளை அழகிய உருவில் **அலெக்ஸி டால்ஸ்டாய்** எழுதியுள்ளார். இந்த எழுத்தாளர் நவ ருஷ்யாவின் சிறந்த இலக்கிய கர்த்தாக்களில் ஒருவர். இவர் சமீபத்தில் தான் (1945ம் வருஷம்) காலமானார். இந்தக் கதைகளைத் தமிழில் சொல்லுபவர் **வி. ரோஹிணி**

நரி: 'உன்னுடையதுதான் என்று பூமியை முத்தமிட்டு சத்தியம்செய்து கொடுக்கிறாயா?'

ஓநாய்: 'ஆஹா அதற்கென்ன, அப்படியே செய்து தருகிறேன்.'

நரி: 'சரி, பூமியை முத்தமிட்டு சத்தியம் செய்.'

நரிக்கு அந்தப் பாதையிலே சிறிது தூரத்தில் ஒரு வேடன் கண்ணி வைத்திருப்பது தெரியும். அந்த இடத்திற்கு ஓநாயைக் கூட்டிச் சென்று 'இந்தா இந்த இடத்தில் சத்தியம் செய்' என்றது.

ஓநாய் முட்டாள் தனமாக மூக்கை பூமியில் வைத்தது. கண்ணியில் மூக்கு சிக்கிக்கொண்டது.

இப்படித்தான் நரியும், ஆடும் தங்கள் தோல்களைக் காப்பாற்றிக் கொண்டன.

## உழவனும் கரடியும்

ஒரு நாள் ஒரு உழவன் காட்டுக்குள் டர்னிப் கிழங்கு விதைக்கச் சென்றான். அங்கே அவன் காலையிலிருந்து மாலை வரையில் பூமியை உழுதுகொண்டிருந்தான். கடைசியில் அங்கே ஒரு கரடி வந்து சேர்ந்தது.

கரடி உழவனைப் பார்த்து 'நான் உன்னைக்கசக்கிச் சாகடிக்கப்போகிறேன் என்றது.

இதைக் கேட்ட உழவன் கரடியிடம் 'ஐய்யய்யோ அப்படியெல்லாம் செய்துவிடாதே! நாம் இருவருமே டர்னிப் கிழங்கு விதைக்கலாம். டர்னிப் விளைந்ததும் நான் அடிப்பாகத்தைமட்டும் எடுத்துக்கொள்ளுகிறேன். நீ மேல் பாகத்தை எடுத்துக்கொள். என் யோசனை எப்படி? உனக்குச் சம்மதம்தானே?' என்று பதில் சொன்னான்.

உழவனது இந்தப் பதிலைக் கேட்ட கரடி 'சரி, அப்படியே செய்வோம். ஆனால் ஜாக்கிரதை! நீ என்னை ஏமாற்றுகிறாய் என்று தெரிந்தால் நான் சும்மா விடமாட்டேன். என் காட்டுப் பக்கமே தலைகாட்டாதே' என்றது.

கரடி டர்னிப் கிழங்கை விதைப்பதில் உழவனுக்கு உதவி செய்தது. விதைப்பு முடிந்ததும் மீண்டும் ஓக் மரக் காடுகளுக்குள் சென்று மறைந்து விட்டது.

செடிகள் வளர்ந்தன. மிகப் பெரிதாக வளர்ந்தன. இலையுதிர் காலம் வந்தது. உழவன் டர்னிப் கிழங்குகளைத் தோண்டியெடுக்க காட்டுக்குள் வந்தான். கரடியும் மரச் செறிவுக்குள்ளிருந்து இறங்கி வந்தது.

உழவனைப் பார்த்துக் கரடி 'என்ன! நம் பங்கைப் பிரித்துக் கொள்ளலாமல்லவா? எங்கே என்னுடைய பங்கை எனக்குப் பிரித்துக் கொடுத்துவிடு' என்று சொல்லியது.

உழவன்: 'ஆஹா அதற்கென்ன அப்படியே பிரித்துவிடுவோம். உனக்கு மேல்பாகம். எனக்கு வேர்' என்று பதிலளித்தான்.

உழவன் அப்படியே பிரித்து டர்னிப் இலை தழைகளைக் கரடிக்குக் கொடுத்துவிட்டான். விற்பதற்காக சந்தைக்குக் கிழங்குகளைக் கொண்டு சென்றான்.

இந்த சமயம் கரடி அவனை வழியில் சந்தித்தது.

'என்ன! எங்கே கிளம்பிவிட்டாய்' என்று கரடி உழவனைக் கேட்டது.

உழவன்: 'நான் பட்டணத்திற்குப் போகிறேன். என் அருமை கரடியாரே. வேரையெல்லாம் அங்கே விற்கப் போகிறேன்.'

கரடி: அப்படியா! எங்கே அந்த வேர் எப்படியிருக்கிறது. நான் ஒன்றைத் தின்று பார்க்கிறேன்'.

உழவன் கரடியிடம் டர்னிப் கிழங்கொன்றைக் கொடுத்தான். கரடி கிழங்கைத் தின்றது. கிழங்கு வெகு ருசியாக இருந்தது.

கரடி உடனே உழவனைப் பார்த்து 'ஓ! என்னை நீ ஏமாற்றி விட்டாய்! உன்னுடைய வேர் ரொம்ப ரொம்ப ருசியாக இருக்கிறது. இந்தா பார், இனிமேல் என் காட்டுப்பக்கம் விற குக்காக வராதே, வந்தால் உன்னை நசுக்கிக் கொன்றுவிடுவேன்' என்றது.

அடுத்த வருஷம் அதே இடத்தில் உழவன் ரை தானியம் விதைத்தான். ரை தானியம் நன்றாக வளர்ந்து தானியம் முற்றிக் குலுங்கிக் கொண்டிருந்தது. தானியத்தை அறுவடை செய்வதற்காக உழவன் வந்தான். அவனுக்கு முன்னாலேயே கரடி அங்கே வந்து காத்திருந்தது.

உழவனைப் பார்த்தவுடன் கரடி 'இந்தா உன்னைத்தான். இந்தத் தடவை என்னை ஏமாற்ற முடியாது. ஒழுங்காய் என் பங்கைக் கொடுத்து விடு' என்று சொல்லியது.

இதைக் கேட்ட உழவன், 'அது சரி, நீயே வேரையெல்லாம் எடுத்துக்கொள். நான் மேல்பாகத்தையே எடுத்துக் கொள்கிறேன். அதனால் பாதகமில்லை' என்றான்.

உழவன் தானியத்தை மட்டும் சேகரித்துக் கொண்டான். கரடியை வேர் முழுமையையும் எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு தானியங்களை வண்டியில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டான்.

கரடி வேர்களை வைத்துக் கொண்டு போராட்டம் நடத்தியது. வேரைத் தின்ன முடியவில்லை. கடைசியில் அலுத்துப்போய் வேர்களை அப்படியே போட்டுவிட்டு காட்டுக்குள் ஓடிவிட்டது. கரடிக்கோ ஒரே ஆத்திரம்.

அன்றையிலிருந்துதான் கரடிக்கும், மனிதனுக்கும் தீராத பகை.

## நரி பறக்கப் பழகிய கதை

முன் ஒரு காலத்தில் ஒரு நாரை நரி ஒன்றைச் சந்தித்தது.

'வணக்கம் நரியாரே, உனக்குப் பறக்கத் தெரியுமா?' என்று நரியை நாரை கேட்டது.

நரி: 'எனக்கு பறக்க வராதே' என்று பதிலளித்தது.

நாரை: 'அப்ப, என் முதுகில் ஏறிக்கொள். நான் உனக்குப் பறக்கப் பழக்கி விடுகிறேன்.'

நரி அப்படியே நாரையின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டது. நாரை நரியைத் தூக்கிக்கொண்டு உயர உயரப் பறந்து சென்றது.

'என்ன நரியாரே, பூமியை உன்னால் பார்க்க முடிகிறதா?'

'சரியாகப் பார்க்க முடியவில்லை. ஏதோ ஓரளவுதான் தெரிகிறது. ஆட்டுத்தோல் மாதிரி எனக்குத் தெரிகிறது.'

நாரை ஒரு குலுக்குக் குலுக்கி நரியைக் கீழே தள்ளிவிட்டது.

அதிர்ஷ்டவசமாக நரி ஒரு வைக்கோல்போர் மேலே விழுந்தது.

நாரை பறந்து நரிக்குப் பக்கத்தில் வந்தது.

'என்ன, இப்பொழுது உன்னால் பறக்க முடியுமா? நரியாரே.'

'மேலே பறப்பதென்ன, அது சுலபம்தான். ஆனால் கீழே வருவது தான் கஷ்டம்.'

'சரி, என் முதுகின்மேலே ஏறிக் கொள். நான் உனக்குச் சொல்லித் தருகிறேன்.'

நாரை நரியை முதுகின் மேலே ஏற்றிக்கொண்டு மேலே மேலே, முன்னைவிட மிக உயரமாகப் பறந்து சென்றது. அங்கிருந்து நரியைத் தள்ளிவிட்டது.

இந்த முறை நரி சேறும் சகதியுமாக இருந்த ஒரு குட்டையில் விழுந்தது. சேற்றிலும் சகதியிலும் நன்றாக அமிழ்ந்திவிட்டது,

இப்படியாகத்தான் நரி பறக்கப் பழகியது.

★

# கீரையோ கீரை

வை. கோ

கீரை என்றாலே ஏழைகளின் விலை இல்லாத உணவு என்று பலர் எண்ணுகிறார்கள். ஆதலால் நம்மில் பலருக்குக் கீரை பிடிக்காது. அப்படிப் பிடித்தாலும் சீமைக் கீரைகளான லெட்டூஸ், செலரி, காபேஜ் இவை போன்ற நமக்கு விளங்காத பெயர்களை உடைய பல கீரைகள் தான் நமக்குப் பிடிக்கும். விளங்காத பெயர் மட்டுமல்ல —கிடைக்காதவையும் கூட. கிடைத்தால் அநியாய விலை கொடுக்க வேண்டும். அதிக விலை கொடுத்து வாங்கப்படும் சாமான்கள் தான் மதிப்புடையன அல்லவா?

சுமார் 15 வருஷங்களாக இந்தக் கீரை வகைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகப் பல புத்தகங்களைப்புரட்டினேன். புரட்டினது மட்டுமல்ல, கீரைகளையும் தின்றேன். ஆதலால் கீரை வகைகளைப் பற்றி எனக்கு ஓரளவு விஷயம் தெரியுமென்ற நம்பிக்கை உண்டு.

சரி, விஷயம் இப்படியா? இப்படி இருக்கும்பொழுது தமிழ்ப் புத்தகம் ஒன்றைச் சமீப காலத்தில் படித்தேன். அது உணவு பற்றிய நூல். இதுவரை அந்தப் புத்தகம் நாலு பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. சுமார் எட்டாயிரம் புத்தகங்கள் விற்பனையாகி இருக்கலாம். விலை மூன்றே ரூபாய்தான். ஆசிரியரோ மக்களின் நடுவே மிக உயர்ந்த நிலை அடைந்திருக்கிறார். அவரே சொந்தமாகக் குறள், கீதை, கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிறார். யோகாசனம், யோக சிகிச்சை, உடல் வனப்பு இவை பற்றி நூல்களும் எழுதியிருக்கிறார். பேரும் புகழும் பெற்றவர். இவ்வளவு பெருமை வாய்ந்த ஒருவர் எழுதிய புத்தகத்தைத் தான் நான் படித்தேன். அந்தப் புத்தகத்திலே "வைடமின் 'ஏ' கீரைகளில் நிறையக் கிடைக்கிறது. வைடமின் 'ஏ'க்காக கீரைகளைச் சாப்பிடுங்கள்" என்று எழுதியிருந்தார். எந்தெந்தக் கீரைகளில் வைடமின் 'ஏ' இருக்கிறது என்று எழுதியிருக்கிறார் என்று படித்துப் பார்த்தேன். 'ஏ' வைடமின் உள்ள கீரைகளில் ஒன்று 'அமரந்த கீரை' என்று எழுதப்பட்டிருந்தது. (ஆரோக்கிய உணவு பக்கம் 82) இதென்னடா அமரந்த கீரை நமக்கு தெரியாதது என்று ஆலோசனை செய்தேன். முளைக் கீரையாய் இருக்குமோ? முளைக்கீரைப்பற்றித் தான் வேறொரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறாரே. 'அமரந்த கீரை' முளைக் கீரை இல்லை. சிறு கீரை, அரைக்கீரையாக இருக்குமோ என்று யோசித்தேன். சிறு கீரை அரைக்கீரை பற்றியும் அந்தப் புத்தகத்திலே எழுதப்பெற்றிருந்தது. இவைகளெல்லாம் அமரந்த கீரை அல்ல என்று முடிவு செய்தேன். லெட்டூஸ், செலரி போன்ற நம் நாட்டில் வெகுவாகக்கிடைக்காத கீரை வகையோ என்று மயங்கினேன். பிறகு கண்டு பிடித்தேன்

---

'க்ளோரபில்' இந்த வார்த்தை இன்று சர்வ சாதாரணமாக அடிபடுகிறது. சர்வ வியாபகமான இந்தப் பொருள் கலக்காத பொருளே இன்று இல்லையென்னலாம். இயற்கையிலேயே இந்த 'க்ளோரபில்' கிடைக்கிறது கீரைகளில்; கொஞ்ச நஞ்சமல்ல ஏராளமாக இருக்கிறது.

அமரந்த கீரைதான் முளைக்கீரை என்று. முளைக்கீரை, அரைக்கீரை, சிறு கீரை மூன்றுக்குமே 'அமரந்த்' என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள். புத்தகத்தின் ஆசிரியர் முளைக்கிரை என்று எழுதியிருந்தால் நான் இத்தனை தொல்லைப்படாமலே முளைக் கீரையை வாங்கிச் சாப்பிட்டிருப்பேன். ஆசிரியர் எதையோ ஆங்கிலப் புத்தகத்தைப் படித்து விட்டு கீரையின் பெயர் தெரியாமலே தமிழ்ப் படுத்தி விட்டார். சரி, போகட்டும்.

முளைக் கீரையை (Amrantus Bilitum) என்றும், அரைக்கீரையை (Amrantus Tristus) என்றும், சிறு கீரையை (Amrantus Ampestris) என்றும், தண்டுக் கீரையை (Amrantus Gangesticus) என்றும் ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது.

மேலே கண்ட கீரை வகைகள் இளசாக இருக்கும்பொழுது அதாவது முளை கிளம்பிய சில நாட்களில்—எல்லாவற்றிற்குமே முளைக்கீரை என்று சொல்லும் வழக்கமுண்டு.

இந்த முளைக்கீரையில் உடல் வளர்ச்சிக்கு வேண்டிய சத்துவகை அனைத்தும் வேண்டிய அளவு இருக்கிறது.

இந்த முளைக்கீரை சாப்பிடுவதை விட்டு நம் 'நாகரீக மனிதர்' மார்க்கெட்டில் நாலு நாள் முன் பங்களூரிலிருந்து வந்த (சத்தெல்லாம் செத்திருக்கும்) முட்டைக்கோஸை விலை விசாரிப்பார்.

'ஐயா வீசை மூன்றே கால் ரூபாய்'

'சரி போடு ஒண்ணரை வீசை'

சத்துச் செத்த முட்டைக் கோஸை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போவார். நம் 'நாகரிக மனிதர்'. வழியிலே ஒரு கீரைக்காரியின் கடையில் கண்ணைப் பறிக்கும் பசுமையான முளைக்கீரை இருக்கும், காலையில் பிடுங்கியது. அன்று வாங்கிய முட்டைக்கோஸை காட்டிலும் பல வகையிலும் அதிகச் சத்துடையது.

'சாமி முளைக்கீரை வேணுங்களா? கட்டு ஒரணாதானுங்க,'

'சரி; சரி, வேண்டாம்போ' என்று நம் 'நாகரிக புருஷர்' சொல்லிவிட்டுப் போய்விடுவார்.

சரி, நல்லவேளையாக முளைக் கீரையை ஏழை மக்களாவது சாப்பிடுகிறார்களே. ஆதலால் தானோ என்னவோ ஏழைகள் வீட்டுப் பிள்ளைகள் கண்ணுக்கு லகான் மாட்டிக் கொள்ளவில்லை போலும். வைடமின் 'ஏ', சாப்பிடும் உணவில் குறைந்தால் கண்கெட்டு விடும். கீரை சாப்பிடும் பழக்க மில்லாத நாகரிக புருஷர்களின் குழந்தைகள் பிறந்த ஆறாவது வருஷத்திலே கண்களை நான்காக ஆக்கிக் கொள்கின்றன. டாக்டரிடம் போவார்கள். மீன் எண்ணை குடியுங்கள் என்பார் அவர். கண்ணாடியும் மாட்டிவிடுவார். நம் பணம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகிவிடும்.

முளைக்கீரை வகைகளிலே 2500 முதல் 11,000 யூனிட்டுகள் வரை வைடமின் 'ஏ' இருக்கிறது. முட்டைக் கோஸில் 2000 யூனிட்டுகள் தான். உடம்பில் ரத்தம் உற்பத்தியாவதற்காக உணவுப் பொருளில் இரும்பு சத்து இருக்கவேண்டும். சோனியாகப்போய் டாக்டரிடம் நின்றால் 'உடம்பில் ரத்தமில்லை. ஹேமோகுளோபின் நாலு பாட்டில் சாப்பிடு' என்று சொல்கிறார். தினம் கீரை தின்றால் ஹேமோகுளோபினும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். முளைக்கீரையில் 21·40 மில்லிகிராம் சதவீதம் இரும்பு சத்து இருக்கிறது. முட்டைக்கோஸில் 0·76 தான் இருக்கிறது. சிரிப்பு வருகிறதோ? தோல்களில் உண்டாகும் சொரி கரப்பானுக்கு சரியான விரோதி வைடமின் 'சி'. இந்த 'சி' யும் முளைக்கீரையிலே அதிகம். முளைக்கீரையில் 172·99 முட்டைக் கோஸிலே 124·2 தான். புரோட்டின் உடல் வளர்ச்சிக்கும், தேய்ந்து போன தசைநார்களை சீர்படுத்து

வதற்கும்வேண்டியசத்துப் பொருளை உதவுகிறது. இந்த புரோட்டின் சத்தும் முட்டைகோஸைக் காட்டிலும் முளைக்கீரையில் அதிகமாக இருக்கிறது. முளைக்கீரையில் 4·90, முட்டைக்கோஸில் 1·75. எல்லா வகையிலும் முட்டைக் கோஸைக் காட்டிலும் முளைக்கீரையில் தான் சத்துப்பொருள் அதிகமாக இருக்கிறது.

முளைக்கீரைக்காக முட்டைக் கோஸ் சாப்பிட வேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லை. முளைக் கீரை, அரைக்கீரை, சிறுகீரை, பசலைக்கீரை, கொத்துமல்லுக் கீரை கறிவேப்பிலை, புதினு, பொன்னுங் காணி, கையாந்தகரை, கலவாங்கிரை சரசமாகவும், புதிதாகவும் கிடைத்தால் லெட்டூஸ், செலரி, முட்டைக் கோஸ் இவைகளைத்தினம் ஒரு கீரையாகச் சாப்பிடத்தான் சொல்கிறேன்.

கீரை சாப்பிடுவதை பழக்கப் படுத்தி கொள்ளுங்கள். பிறகு சிறு வயதிலே கண்ணுடிபோட வேண்டாம், நரைமயிர் கறுக்கும் தைலம் தேடவேண்டாம். உடல் அரிப்புக்கு மருந்து விளம்பரங்களைப் படித்து ஏமாற்றம் அடையவும் வேண்டாம். கீரை விலை ஏறினல் அதற்கு நான் ஜவாப்தாரி அல்ல.

★

## மனைவி பேச்சைக் கேட்காதவர்கள்

ஒரு ஊரில் ஒரு ராஜா. அவருக்குக் கல்யாணம் ஆகவில்லை. ஒரு நாள் அவருக்கும் மந்திரிக்கும் பெரிய தர்க்கம் நடந்தது. மந்திரி 'பெண்களின் யோசனையைக் கேட்காத மனிதர்களே இந்தப் பூவுலகத்தில் இல்லை' என்ருர். 'அப்படியிருக்கவே முடியாது. முட்டாள்கள் தான் பெண்களின் யோசனையைக் கேட்பார்கள். வேண்டுமென்ருல் பரிசோதித்தே பார்த்துவிடுவோம். நம் நாட்டில் உள்ள கல்யாணம் ஆன அத்தனை பேரையும் இன்றையிலிருந்து பத்தாம் நாளில் அரண்மனைக்குவரும்படி உத்திரவு இடவும்' என்ருர் அரசர். அரசர் உத்திரவுப்படி மந்திரியும் உத்திரவிட்டார். பத்தாவது நாள் அரண்மனையில் கல்யாணம் ஆனவர்கள் அத்தனை பேரும் கூடிவிட்டனர்.

அரசர் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார். கூடியிருந்த ஜனங்களைப் பார்த்து 'பெண்களின் யோசனையைக் கேட்டு நடப்பவர்கள் அத்தனை பேரும் இடது பக்கமாக நில்லுங்கள்' என்று உத்திரவிட்டார். கூடியிருந்தவர்கள் அனைவரும் இடது பக்கமாக ஒதுங்கி நின்றனர். ஒருவன் மட்டும் வலது பக்கமே நின்று கொண்டிருந்தான். அரசனுக்கு அந்த ஒருவனைக் கண்டதும் மட்டிலாத மகிழ்ச்சி. 'ஏ செம்மறியாட்டுக் கூட்டங்களா, பெண்கள் யோசனைப்படி நடப்பவர்களே, உங்களுக்கு வெட்கமில்லை? இதோ பாருங்கள் இவனை, இவனல்லவா ஆண் பிள்ளை. பெண் பேச்சைக் கேட்காத சூரன்' என்ருர். கூட்டத்தில் கூடி நின்றவர்கள் வெட்கித் தலை குனிந்தனர்.

உடனே வலது பக்கமாக நின்று கொண்டிருந்தவன் அரசனை நோக்கி, 'அரசே மன்னிக்கவேண்டும். நான் வரும்போது கூட்டத்தோடு நிற்காதே என்று சொல்லியனுப்பினுள் என் பெண்சாதி' என்ருன்.

# அறிவு வளர்ச்சிக்கு வரியா?

சதானந்த். ஜி. பட்கால்

●

புஸ்தகப் பார்சல்களுக்கு சமீபத்தில் தபால் கட்டணங்களை உயர்த்தியதானது கல்வியையும் அறிவு வளர்ச்சியையும் அழுத்துவதாக இருக்கின்றது. இந்தியாவில் புஸ்தக விற்பனையாளர்கள் மிகவும் சொற்பம். அவர்களே புஸ்தக அடக்கச் செலவில் 15-லிருந்து 20 சத விகிதம் வரை தபால் கட்டணமாக தரவேண்டியுள்ளது. இப்போதைய புது தபால் கட்டணங்களால், புஸ்தகம் வாங்குகிறவர்கள், புஸ்தகத்துக்குக் கொடுக்கும் அளவு பணம், தபால் கட்டணத்துக்கும் கொடுக்கவேண்டியிருக்கிறது. புஸ்தகங்கள் பெரும்பாலும் வி. பி. பி-யில் வாங்கப்படுகின்றன. அதில் கீழ் கண்ட செலவுகள் சேருகின்றன.

1. ஒரு பவுண்டுக்கு தபால் கட்டணம் 8 அணா.
2. ரிஜிஸ்ட்ரேஷனுக்கு 6 அணா
3. வி. பி. கட்டணம், 25 ரூ. பார்சலுக்குள் இருக்குமானல் 1 அணா. அதற்கு மேற்பட்டால் 2 அணா.
4. பார்சலின் மதிப்புக்கு ஏற்ப மணியார்டர் கமிஷன் கட்டணம்.

பாக்கிங் செலவு முதலியன இதில் சேரவில்லை.

மொத்த புஸ்தக விற்பனையில் 80 சத விகிதம் தபால் மூலம் போவதாக மதிப்பிடலாம். 7 லட்சம் கிராமங்கள் உள்ள இந்தியாவில், தபால்மூலம் தான் புஸ்தகங்கள் வருங்காலத்திலும் போயாக வேண்டியிருக்கும். இதை அனுசரித்தே, புஸ்தகங்களுக்கு தபால் கட்டணங்களைக் குறைக்கவேண்டுமென்று வற்புறுத்த இந்திய புஸ்தக வியாபாரிகள், பிரசுரகர்த்தர்கள் சங்கம் முயற்சி செய்துகொண்டிருந்தது. அந்த சமயத்தில் கட்டண உயர்வு செய்தி வந்ததானது எல்லோருக்கும் அதிர்ச்சியை அளித்திருக்கிறது.

இந்த புது கட்டண விகிதம் காரணமாக, ஒரு ரூபாய் விலை உள்ள ஒரு புஸ்தகத்துக்கு, தபால் கட்டணமாக சுமார் 12 அணா செலவாகிறது.

நூற்றுக்கு 82 பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கும் நாட்டில் அதிகமான அளவில் மலிவான விலையில் கல்வி சாதனங்களைப் பரவச் செய்வதற்கு வசதி செய்வதே அவசியமானதும் முறையானதுமாகும். அதை விட்டு அதிகமான கட்டணங்கள் போடுவது முறையல்ல.

கல்வி அறிவு என்பது மூளைக்கு உணவளிப்பதேயாகும். சர்க்கார் இவ்விஷயத்தை தன் முதல் கடமையாகக்கொண்டு, ஜனங்களின் அறிவுப் பசியை தணிக்க முயலவேண்டும். நம் சர்க்காரோ அதில் கவனம் செலுத்தாமல், புஸ்தக தபால் கட்டணத்தை உயர்த்தி, அதன் மூலம் ரூ. 2·30 கோடி புது வருமானம் எதிர்பார்க்கிறார்கள். ஜனங்களுக்கு இது பெரும் சுமையல்லவா? அறிவு வளர்ச்சிக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த வரியை நீக்கச் செய்ய வற்புறுத்துவதில் பொது மக்களும் ஈடுபட வேண்டும். ★

# அட கடவுளே!

# இந்தக் குழந்தைகள்

யஷ்பால்

ஸ்ரீமான் ஜோஷியும், டாக்டர் கானும் பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்து வந்தனர். இருவருமே வசதியுடையவர்கள். அவர்கள் உறவும் சுமுகமாகவே இருந்தது. பிராமண சமூகத்தில் ஜோஷிக்கள் உயர்ந்தவர்கள். அதே போல முஸ்லீம் சமூகத்தில் சையத்துக்கள் உயர்ந்தவர்கள்.

ஸ்ரீமான் ஜோஷி செல்வாக்குள்ள வக்கீல். டாக்டர் கான் ஜில்லா சிவில் சர்ஜன். இருவரும் காலத்திற் கேற்ற கொள்கையும் கண்ணோட்டமும் உடையவர்கள். ஜாதிக் கட்டுப்பாடுகளைச் சமையல் கட்டோடு கட்டிவைக்கும் அளவுக்கு பொருமை உடையவர்கள். ஆனல் ஒன்று மட்டும் அவர்களுக்குப் பிடிக்காது. தங்கள் குழந்தைகள் கேவலம் தெருவில் ஓடியாடும் அசுத்தமான ஏழைக் குழந்தைகளோடு மட்டும் கலப்பது அவர்களுக்குக் கட்டோடு பிடிக்காது.

அந்த ஊரில் ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும், ஹிந்துக் குழந்தைகளுக்கென்றும் முஸ்லிம் குழந்தைகளுக்கென்றும் தனித் தனிப் பள்ளிகள் இருந்தன. ஆனல் செல்வமும் செல்வாக்கும் உடையவர்கள் தங்கள் குழந்தைகளை இந்தப் பள்ளிகளுக்கு அனுப்புவதில்லை. அதே ஊரில் இருந்த கிருஸ்துவ மிஷன் பள்ளிக்குத் தான் அனுப்புவார்கள். அங்கே தான் சுத்தமும் ஒழுக்கமும் குடிகொண்டிருப்பதாக அவர்கள் நினைப்பு. நம்மை நாகரீகப்படுத்த வந்த பிரிட்டிஷார் வெளியேறும்போது சுகாதாரத்தையும் உயர்ந்த கலாச்சாரத்தையும் தங்கள் மதஸ்தர்களான கிருஸ்துவர்களிடம் தானே விட்டுச் சென்றனர்!

நமது வக்கீலுக்கும் டாக்டருக்கும் நமது முன்னோர்களைப் பற்றியும், ஆண்டவர்களின் தூதர்களைப் பற்றியும் பெருமை உண்டு. அவர்களது நாரிகத்தையும் கலாச்சாரத்தையும் தான் தாங்கள் வழி வழியாகப் பின்பற்றி வருகிருர்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனலும் மேற்கத்திய நாகரீகத்தின்மேல் தனி மோகம். ஆகவே தான் அவர்கள் தங்கள் குழந்தைகளை ஒரே பள்ளியில் படிக்க வைத்தனர். ஸ்ரீமான் ஜோஷிக்கு, நீலு, உஷா என்ற இரண்டு பெண்கள். டாக்டர் கானுக்கும் இரண்டு குழந்தைகள். மூத்தவள் நஷீமுக்கு ஏழு வயது. இளையவன் பானேக்கு ஐந்து வயது. நீலுவுக்கும் நஷீமுக்கும் ஒரே வயது. ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தனர். இருவரும் நெருங்கிய சிநேகிதிகள்.

மற்ற பெண் குழந்தைகளைப் போலவே இவர்கள் இருவரும்

---

இந்த உள்ளமுறுக்கும் கதையை எழுதியவர் உலகப் புகழ் பெற்ற ஹிந்தி எழுத்தாளர் யஷ்பால். இவரது சிறு கதைகள் வெளி நாட்டு மொழிகளில் ஏராளமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்தக் கதையைத் தமிழ்ப்படுத்தியவர் **ஸ்ரீ. வ. விஜய பாஸ்கரன்**

பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுவார்கள். பொம்மைகளுக்கு வீடுகட்டிக் குடியமர்த்தி கல்யாணம் காட்சியெல்லாம் செய்து விளையாடி மகிழ்வார்கள். விதவிதமான பொம்மைகள் அவர்களிடத்தில் இருந்தன. ஆண் பொம்மைகளுக்கெல்லாம் ஒரே மாதிரி உடுப்பு. ஐரோப்பிய டிரஸ்தான். பெண் பொம்மைகளுக்கு மட்டும் வித்தியாசமான உடைகள். நீலுவின் ஒரு பொம்மை சேலை கட்டியிருந்தது. மற்றொன்றுக்கு ஹிந்துப் பெண்போல தொளதொளவென்று பாவாடை சட்டை. மூன்றுவது பொம்மைக்கு கவுன். இந்த மாதிரி நீலு தன்னுடைய பொம்மைப் பெண்களை அலங்கரித்திருந்தாள். நஷீமோ ஒரு பொம்மைக்கு சால்வாரும், மற்றொன்றுக்கு முஸ்லீம் பெண்களைப் போல சராராவும், மூன்றுவதற்கு ஐரோப்பிய மோஸ்தரில் கவுனும் தைத்துப் போட்டிருந்தாள். இந்தச் சின்னச் சின்ன ஜாதி வித்யாசங்கள் அவர்கள் மத்தியில் சண்டையையோசச்சரவையோ உண்டாக்கவில்லை.

குழந்தைகள் சந்தோஷமாக ஆடிப்பாடி விளையாடிக் கொண்டிருந்தன. கூச்சலும் கும்மாளமும் வீட்டை நிர்த்துளி செய்யும். டாக்டர் கான், வீட்டில் மாலை நேரத்தில் டீ சாப்பிடும்போது நீலுவும் உஷாவும் அவர்கள் வீட்டில் இருந்தால் அவர்களுக்கும் அன்பாக பிஸ்கட்டுகளும் மிட்டாய்களும் கொடுப்பார். அவர்களது பொம்மைகளின் உடல் நிலையைப் பற்றி ரொம்ப அக்கரையாக விசாரிப்பார். பொம்மைகளுக்கு அடுத்த நாள் சாக்லட்டுகள் வாங்கி வருவதாகத் தினசரி சொல்லி மறந்தும் விடுவார்.

நஷீமின் தாயாருக்கு, தன்னுடைய குழந்தைகளுக்குத் திண்பண்டங்கள் கொடுக்கும்போது உஷாவுக்கும் நீலுவுக்கும் கூடக் கொடுக்க வேண்டுமென்று கொள்ளை ஆசை. ஆனால்பிராமணக்குழந்தைகளுக்குத்



தன் வீட்டில் செய்த பலகாரத்தை எப்படிக் கொடுப்பது? அவளுக்கு சங்கோஜம், பயம். ஆதலால் மனிதர்களால் செய்யப்படாத, ஆண்டவன் கைகளால் தயாரிக்கப்பட்ட பண்டங்களைத் தருவாள். கடவுள் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பொதுவல்லவா? பழம், அல்லது மெஷினால் செய்த பிஸ்கோத்துகள், மிட்டாய்கள் இவைகளைக் கொடுத்துத் தனது ஆசையைத் தீர்த்துக் கொள்வாள்.

ஸ்ரீமான் ஜோஷியின் வீட்டில் இந்தத் தகராறே கிடையாது. நஷீமும் பானேயும் அவர்கள் தரும் எதையும் சாப்பிடலாம். பிராமணர்கள் கைகளால் பெறுவதற்கு புண்ணியம் செய்திருக்க வேண்டாமா என்ன? மனித ஜாதியிலேயே உயர்ந்தவர்கள் அவர்கள்; புண்ணிய புருஷர்கள். ஆனால் இங்கே ஒரே ஒரு சங்கடம். பாத்திரங்களின் தகராறு தான் இங்கே. நீலுவின் அம்மாவும் பாட்டியும் தங்கள் குழந்தைகளுக்குத் தின்பண்டங்களைப் பித்தளைப் பாத்திரத்தில் கொடுப்பார்கள். அதே நேரத்தில் கண்ணாடி

அல்லது பீங்கான் பாத்திரங்களைத் தேடி எடுத்துத்தான் நஷீமுக்கும் பானுக்கும் எதையும் தருவார்கள். பித்தளைப் பாத்திரம் புண்ணியமானதல்லவா? அதில் அசுத்தம் படக்கூடாது. கண்ணாடி, பீங்கான் அருவையயானது என்பது பெரிய ஜாதிக்காரர்களின் எண்ணம். தங்கள் உபயோகத்துக் கென்றால் பித்தளைப் பாத்திரங்கள். மற்றவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் எவ்வளவு சுத்தமாகவும் நாகரீகமாகவும் இருந்தாலும் அவர்களுக்கு கண்ணாடி, பீங்கான் பாத்திரங்கள் தான்.

தப்பித்தவறி ஒரு முஸ்லீமோ, திண்டாதவரோ பிராமணர்களின் பாத்திரத்தைத் தொட்டுவிட்டால் போதும், உடனே அதை நெருப்பில் போட்டு சுத்தப்படுத்தித் தான் மறுபடியும் உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஜோஷியின் தாயாரும் மனைவியும்சாப்பிட உட்காரும்போது சாக்குப் போக்குசொல்லி நஷீமையும் பானேயையும்வெளியே அனுப்பிவிடுவார்கள். உயர்ந்த ஜாதியாருடைய சாப்பாட்டை ஒரு முஸ்லீம் பார்த்துவிட்டால் என்ன ஆவது. திட்டுப்பட்டுவிடுமே; பிறகு குப்பையில் கொட்டவேண்டியது தான். சமையல் கட்டில் வந்து விளையாடக் கூடாது என்று தினசரி நீலுவின் பாட்டியும் அம்மாவும் கண்டிப்பார்கள். சமையல் அறை, பூஜை அறை இங்கெல்லாம் நஷீமைக் கூட்டி வரக் கூடாது என்று நீலுவுக்கு எச்சரிக்கை செய்வார்கள். குழந்தைகளுக்கு பல விஷயங்கள் புரியாது. ஆனால் இந்த வித்தியாசத்தை மட்டும் சுலபத்தில் புரிந்து கொண்டன. பானேயுக்கு ஐந்து வயது தானே. அவனுக்கு இந்தப் பெரிய விஷயங்கள் விளங்குவதில்லை. ஆனால் நஷீம் விஷயம் வேறு. அவள் இதைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்துவிடுவாள்.

நீலுவின் பொம்மைகளுக்கு கணக்கற்ற தடவை கல்யாணம் நடந்துவிட்டது. எவ்வளவு நாள் தான் ஒரே பொம்மைகளுக்குள் கல்யாணம் நடத்துவது. அவளுக்கு சலிப்பு தட்டிவிட்டது. அவள் ஒரு புது ஏற்பாடு செய்தாள். நஷீமின் மாப்பிள்ளைப் பொம்மைக்கும் தனது பெண் பொம்மைக்கும் திருமணம் செய்து வைக்க நிச்சயித்தாள். கல்யாண ஏற்பாடெல்லாம் முடிந்துவிட்டன. நீலுவின் வீட்டுத் திண்ணையில் தான் கல்யாணம். தாலிகட்ட வேண்டியதுதான் பாக்கி. அந்த சமயம் பார்த்து அவர்களுக்கு ஏதோ ஒன்றை மறந்துவிட்டது ஞாபகத்துக்கு வந்தது. விழுந்தடித்துக்கொண்டு நீலுவும் நஷீமும் வீட்டுக்குள் ஓடினார்கள்.

நீலுவின் தாயாரும் பாட்டியும் அப்பொழுதுதான் ஸ்ரீமான் ஜோஷிக்கு டீ அனுப்பிவிட்டு அவர்கள் டீ சாப்பிட ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். பளபளவென்று விளக்கிய பித்தளை லோட்டாவில் டீ எடுத்து வைத்திருந்தனர். அந்த நேரம் பார்த்து நீலுவும் நஷீமும் சமையல் கட்டுக்குள் ஓடிவந்தனர். ஓடிவந்த நஷீமையும் நீலுவையும் கண்டதும் அவர்களுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. மிகுந்த பிரயாசைப்பட்டு அவர்களுக்கு வேண்டிய சாமான்களைத் திண்ணைக்கு அனுப்புவதாகக் கூறி வெளியே அனுப்பினார்கள். இந்த மாதிரி சம்பவங்கள் புதிதல்ல. பல தடவை இதே மாதிரி நடந்திருக்கின்றன. ஆனால் இந்த முறை நஷீமுக்கு ஏனோ சுருக்கென்றது. திண்ணைக்கு வந்ததும் நீலுவை நஷீம் கேட்டாள்.

"இதோ பார். ஏன் உங்க அம்மாவும் பாட்டியும் என்னை சமையல் வீட்டுக்குள் விடமாட்டேன் என்கிறார்கள்? என் முன்னாலே ஏன் சாப்பிடுவதில்லை? என்ன காரணம்? சொல்ல மாட்டாயா?"

நீலு புருவத்தை லேசாக உயர்த்திக் கொண்டாள். நஷீமை நெருங்கி

அவள் காதுக்குள் ரகசியமாக "உனக்குத் தெரியாதா! நீ ஒரு முஸ்லீமாச்சே" என்றாள்.

நஷீம் இந்தப் பதிலைக் கேட்டதும் சும்மா விட்டு விடவில்லை.; யோசித்தாள். "ஏன் நீயும் ஒரு முஸ்லீம் இல்லையா?" என்று நீலுவைத் திருப்பிக் கேட்டாள்.

"ஓ.! நானா? நான் ஒரு ஜோஷியாக்கும்." என்று நீலு விளக்கினாள்.

"உங்க அம்மா சாரா ரா கட்டிக்கிறா. அவள் ஒரு முஸ்லீம். எங்க அம்மா சேலை கட்டிக்கிறா. அவள் ஒரு ஜோஷி. இது கூடத் தெரியலையே உனக்கு" என்றாள் நீலு.

"நீ சேலை கட்டிக்கலையே! நீயும் பாவாடை தான் கட்டிருக்கிறே. நானும் பாவாடைதான் கட்டியிருக்கேன், நமக்குள்ளே என்ன வித்தியாசம்" என்று விவாதித்தாள் நஷீம்.

நீலு ஆழ்ந்த யோசனைக்குப் பின்னர் பதில் சொன்னாள்.

"இந்தா பார், நாமெல்லாம் குழந்தைகள். நாம் பெரியவர்கள் ஆனதும் நான் என் அம்மாவைப் போல சேலை கட்டிக்கிட்டு ஹிந்துவாகிவிடுவேன். நீ உங்க அம்மாவைப்போல சாரரா கட்டிக்குவே; முஸ்லீம் ஆகிவிடுவாய். அப்புறம் உன்கையிலிருந்து நான் வாங்கிச் சாப்பிடமாட்டேன், தெரியுமா? அதெல்லாம் இப்ப எதற்கு. இப்ப நம்ம விளையாடலாம்."

"அப்போ, நீ நான் தொட்டதைச் சாப்பிடமாட்டேன்னால் நானும் நீ தொட்டதைச் சாப்பிடமாட்டேன். பெரியவங்க ஆயிட்டம்னா ஹிந்து முஸ்லீம்களுக்குள்ளே சண்டை நடக்கும்.நாமும்வேண்டிய அளவுசண்டை பிடிக்கலாம். ஒரே தமாஷ்தான். இல்லையா நீலு" என்றாள் நஷீம்.

"அப்படியானால் நான் எப்படி என் பொம்மைக்கு உன்பொம்மையைக் கல்யாணம் செய்யறது. விளையாடறது எப்படி பின்னே?" என்று நீலு தனது ஆதுரத்தைத்தெரிவித்தாள்.

"சரி அப்படியானால் நம்ம பொம்மைகளுக்குள் கல்யாணம் செய்ய வேண்டாம் அதுக சண்டையாவது புடிக்கட்டும்." என்று புத்திசாலித்தனமாக நஷீம் ஆலோசனை கூறினாள்." நீ என் பொம்மையைக் குத்து! நான் உன் பொம்மையைக் குத்தறேன்! பொம்மை வீடுகளுக்கு நெருப்பு வெச்சுக் கொழுத்துவோம். ரொம்ப ரொம்ப தமாஷாக இருக்கும்" என்றாள் நஷீம்.

நீலுவுக்கும் இது சரி யென்றே பட்டது. நஷீம் நீலுவிடம் சமையல் அறைக்குப் போய் காய்கறி நறுக்கும் கத்தியை எடுத்து வரும்படி ஆலோசனை கூறினாள்.

நீலுவும் ஒரே ஓட்டமாக சமையல் அறைக்கு ஓடினாள். பாட்டியிடம் பெரிய கத்தியைக் கேட்டு நச்சரித்தாள். பாட்டிக்கு ஒரே ஆச்சரியம்.

"என்ன கத்தியா?...கத்தி உனக்கெதற்கு...? இந்தா நீ கையைக் காலை வெட்டிக்குவே... போ போ சும்மா போய் விளையாடு" என்று பாட்டி கூறினாள்.

"இங்கே பார் பாட்டி, நான் ஒன்னும் கையைக் காலை வெட்டிக்க மாட்டேன். சும்மா நாங்க ஹிந்து முஸ்லீம் சண்டை விளையாட்டு விளையாடப் போகிறோம். அதுக்குத் தான் கத்தி வேணும். நீ பேசாமல் கத்தியைக் கொடு. கொஞ்சம் சல்தி" என்று நீலுபாட்டியை நச்சரித்தாள்.

பாட்டிக்கு ஒன்றுமே புரியவில்லை அவள் கண்களை அகல விரித்துப் பார்த்தாள். தன் தலையை இரண்டு கைகளாலும் இறுக்கிப் பிடித்துக் கொண்டாள். நீலுவின் தாயாரைத் தன் அடிக்குரலிருந்து கூப்பிட்டாள் அவளது குரல் சில்லிட்டது.

'கொஞ்சம் இங்கே வந்து பாரேன் ...அட கடவுளே... இந்தக் குழந்தைகள்......'

★

சக்தி

# கௌடர்

பிலோ இருதயநாத்



ஆதியில் மனிதன் மலையில் தான் தோன்றினான். அங்கிருந்தே மற்றப் பாகங்களுக்குச் சென்றான் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. புழுதியும், நோய்க் கிருமிகளும் அதிகமாக மலைவாசிகளைப் பாதிப்பதில்லை. காற்று, ஒளி, நீர், நீர் வீழ்ச்சி முதலிய நல்ல வசதிகளுடன் வாழும் மலைவாசிகள் திடகாத்திரராய் வாழ்கிறார்கள். இவ்விதமான மலைவாசிகளைக் காண சமீபத்தில் நீலகிரிக்குச் சென்றிருந்தேன். இங்கே உள்ள பழங்குடிகள் தொதுவர், குறும்பர், கோத்தர். இவர்களைத் தவிர படுகர், படகர். வடுகர், கௌடர் என்று பலவாராக அழைக்கப்படும் வடகரும் உண்டு.

இங்கு வாழும் மக்களில் பெரும்பான்மையோர் படகர் எனப்படும் பழங்குடிகளாவர்.

நீலகிரிக்கு வடக்கே மைசூரிலிருந்து இவர்கள் வந்ததால், அதைக் காரணமாகக் கொண்டு இவர்களை "வடகர்" என்று அழைக்கப்பட்டனர்.

பதினேழாவது நூற்றாண்டில் மைசூரை அரசாண்ட திப்பு சுல்தானின் ஆட்சியின் போது இவர்கள் மைசூரிலிருந்து பாண்டிபூர் காட்டின் வழியாக, நீலகிரிக்கு வந்து சேர்ந்தார்கள். ஒரு நாள் கன்னடியப் பெண்மணி கொல்லையில் பசுவை, பால் கறந்து கொண்டிருந்தாள். அவள் அழகைக் கண்டு சுல்தான் மணம் செய்ய அழைத்தான், அப்பொழுதுதான் அப்பெண்ணின் சகோதரன் எங்கிருந்தோ வர, இருவருக்கும் பேச்சு நடந்ததாம். தனிமையாக வந்த சேவகன் மற்ற அரண்மனை ஆட்களைத் துணைக்கு அழைக்கச் சென்றான். அச்சமயம் அந்தக் குடும்பம் வீட்டை விட்டு காட்டை நோக்கி ஓடியதால், தொட்டிலிலிருக்கும் குழந்தையை அவசரத்தில் எடுக்காமல் விட்டு விட்டுப் பதறித் துடித்துக் கொண்டு காடு மலையும் கடந்து ஓடி வந்தார்கள். திப்புவின் ஆட்களோ விடாப் பிடியாகத் தொடர்ந்தனர்.

அல்லிமாயாறு எனப்படும் நீலகிரியின் சாரலுக்கு வந்ததும், அங்கு வசித்த குறும்பர், அவர்களை ஆதரித்ததோடு, திப்புவின் ஆட்களால் தொல்லை வராமலிருக்க அவர்களது ஆடையையும் தங்களைப் போல் மாற்றி விட்டனர். புடவை உடுத்தியிருந்த கன்னடியப் பெண்ணுக்கு இடையில் அதாவது மார்பிலிருந்து கீழே வரை ஒரே துண்டைக் கட்டி, மார்புக்கு மேல் ஒன்றும், இடுப்பில் ஒன்றுமாக



படக ஆண்களும் பெண்களும்.

கச்சைகளைக் கட்டி, தலையில் ஒரு வெண் துண்டைப் போர்த்திக் கட்டி விட்டனர். நெற்றியில் பச்சை வேறு குத்தப்படவே அடையாளமே மாறி விட்டது.

ஓடி வந்த அவசரத்தில் தொட்டி லில் தூங்கிய குழந்தையை விட்டு விட்டு வந்ததால் இன்றும் படுகர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தொட்டில் கட்டுவதில்லை. அப்படிக் கட்டுவது தங்களுக்குச் சாபமாகும் என்பது அவர்கள் கொள்கை.

பண்டைக் காலத்தில் இவர்களுக் குக் கல்வி அறிவே கிடையாது. தற் காலத்தில் பட்டம் பெற்ற படகர் களும் இருக்கிறார்கள். இவர்கள் நம்மைப் போல் திருமணம் செய்வ தில்லை. இவர்களின் மாப்பிள்ளை வீட்டார் முதலில் பெண்ணைத் தங்களுடைய இல்லத்திற்கு இரவில் முதல் அல்லது இரண்டாவது ஜாமத்தில் அழைத்து வருவார்கள். மறுநாள் காலையில் மாப்பிள்ளை வீட்டில் பெண் வீட்டாருக்குப் பெரிய ஊர் விருந்தோ அல்லது குடும்ப விருந்தோ அவர்களின் அந்தஸ்துகளுக்குத் தக்கவாறு நடை பெறும். அப்பொழுது பெண்ணும், மாப்பிள்ளையும் கலந்து பேசித் தனிமையாக ஒரு வீட்டில் வாழ் வார்கள்.

இச்சடங்குக்கு " எண்ணுகூட்டி பந்தார " என்று படுக பாஷையில் கூறுகிறார்கள்.

பெண் மாப்பிள்ளை வீட்டுக்கு வந்து சுமார் இரண்டு மூன்று ஆண்டுகள் வரையில் அவளுக்கு குழந்தைஉண்டாகிறதா எனப்பார்ப் பார்களாம். இல்லை என்று தெரிந் தால் உடனே அவளைத் தன் தாயகம் அனுப்பி விடுவார்களாம்.

மாப்பிள்ளையிடம் ஒப்புவித்து அவள் ஐந்து, ஆறுமாத கர்ப்பவதி யாக இருக்கும்போது தான் திருமணம் செய்வார்கள். இவ்விதத் திருமணச் சடங்குக்கு, "கண்ணி கட்டி மதுவை" அல்லது, " அரக் கோல் மதுவை " என்று கூறுகிறார் கள். அன்று சக்திக்குத் தகுந்தாற் போல ஊர் விருந்து நடக்கும்.

அப்படி மூன்று நான்கு ஆண்டு கள் கழித்தும், கர்ப்பவதியாகாவிட்

டால் தாயகத்திற்கு அவளை அனுப்பி விட்டு, இதைப்போலவே மீண்டும் சடங்குகள் செய்து, மற்றொரு பெண்ணை அழைத்து வந்து விடுவார்களாம்.

குழந்தை பிறக்கவில்லை என்று தாயகம் சென்றவள், மறுபடியும், மறுவிவாகம் செய்து கொள்ளுவாள். மறுவிவாகம் செய்து கொள்ள அவர்களுக்குப் பூரண சுதந்திரமுண்டு. சில சமயங்களில் இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்த பின்னும் இருவரில் யாருக்காவது அபிப்பிராய பேதமேற்பட்டாலும் சரி, உடனே பெண்ணோ அல்லது ஆணோ சண்டை சச்சரவு இன்றிப் பெருந்தன்மையாக விலகி விடுவார்கள். இது ஒரு விதம்; மற்றொன்று அந்தக் குடும்பத்தில் ஆண் மகவு இல்லாத குறை ஏற்பட்டால் இரண்டு மூன்று பெண் குழந்தைகள் பிறந்த பிறகும் மனைவியை வேண்டாமென்றோ



பள்ளத்திலிருந்து தங்களுக்கு வேண்டிய நீரைக் கொண்டு வருகிறான் ஒரு பள்ளி மாணவன்.

இரண்டாந்தாரமோ செய்து கொள்வார்கள். விதவைகளை உடனே மற்ற ஆண்கள் மணம் செய்து கொள்ளுவதால் இச்சமூகத்திலே விதவைகளைக் காண்பது கஷ்டம்.

நம்மைப்போலவே, இவர்களும் சீதனம் கொடுக்கிறார்கள். ஆனால் முறம், உலக்கை, உரல், தடப்பம் முதலியவைகளும், கூடுமானால் பசு, எருமை முதலியவைகளும் பெண் வீட்டார் கொடுப்பது வழக்கம். மாப்பிள்ளை பெண்ணுக்குக் குறைந்தது திருமணத்திற்கு முன் ரூபாய் நூறு கொடுக்க வேண்டும். பெண்ணின் பெற்றோர்கள், அந்த ரூபாய்க்கு வெள்ளி நகைகளாக வாங்கிப் பூட்டி விடுவார்கள். பொன் நகைகளைவிட வெள்ளி நகைகள் தான் படகர்கள் அதிகமாக அணிந்து கொள்ளுகிறார்கள்.

சாதாரணமாக அவர்கள் பெரிய காப்பு, மோதிரம், தொங்கும் கம்மல், தட்டை மூக்குத்தி, இன்னும் பழைய காலத்து நகைகள் போன்றவைகளை அணிகிறார்கள்.

எவ்விதமான விலையுயர்ந்த செருப்பாக இருந்தாலும் சரி, இரவிலும் பகலிலும் தெருவிலேயே வைத்து விடுவார்கள்.

இவர்கள் சமுதாயத்தில் ஆண்களோ அல்லது பெண்களோ அன்னிய ஜாதியார் வீட்டில் சாப்பிட்டால் மறுபடியும் அவர்களுடைய நாக்கில் சூடு போட்ட பின்தான் வீட்டிற்குள் சேர்ப்பார்கள்.

இவர்களிடம் ஜாதிக் கட்டுப்பாடும், ஜாதி ஒற்றுமையும், குடும்ப ஒற்றுமையும், புருஷன் மனைவி விசுவாசமும் மிக அதிகம். இவர்கள் வீட்டில் வெண்கலப் பாத்திரங்கள் அதிகம். "வட்டுலு" என்று சொல்லப்படும் நல்ல வெண்கலப் பாத்திரத்திலே சாப்பிடுகிறார்கள். சுமார் நான்கு ஐந்து பெண்கள் ஒற்றுமையுடன் ஒரே தட்டில் சாப்



படகரும் மலையாளிகளும் சேர்ந்து வேலை செய்கின்றனர். மாடுகளைக் கட்டி சாமைக் கதிரடிக்கிறார்கள்.

பிடுவார்கள். அவரவர் வீடுகளிலிருக்கும் சமைத்த பதார்த்தங்களை ஒன்றாக வைத்துக்கொண்டு சாப்பிடுவார்கள்.

இவர்களின் தெய்வங்கள், "மாகாளி," "எத்தையம்மன்," "ஜடசாமி" என்பவைகள். இதற்கென்று கோவில்கள் கட்டியிருக்கிறார்கள்.

இவர்கள் வசிக்குமிடத்திற்கு, "ஹட்டி" என்று பெயர். இவர்கள் குடும்பத்தில் எல்லோருமே சாதாரணமாய் ஒரு சிறிய பொன் துண்டு ஒன்று வைத்திருக்கிறார்கள். தங்கள குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால் உயிர்போகும் போது அந்தப் பொன் துண்டை வெண்ணெயில் வைத்து வாயில் போடுவார்கள். பிறகுதான் பால் ஊற்றுவார்கள். சிலர் இந்தப் பொன் துண்டோடு, "சாமை" அல்லது அரிசி சேர்த்தும் வாயில் போடுவதுண்டு. புருஷன் இறந்துவிட்டால், மனைவி புதிய வர்ணமிட்ட குடையைப் பிடித்துக் கொண்டு பிணத்தைச் சுற்றுவாள்.

பொதுவாக இவர்கள் பயிர்த் தொழில் செய்கிறார்கள். காப்பி தேயிலை, சின்கோனா, இயூகலிப்டஸ், கோதுமை, பார்லி, சாமை, ராகி, பழவகைகள் முதலியவைகளும், காய்கறிகள், கிழங்கு வகைகள் முதலியவைகளும் பயிர் செய்கிறார்கள்.

இவர்களின் தொகை சென்ஸஸ் கணக்குப்படி மற்ற எல்லா மலைவாசிகளையும் விட அதிகம். இவர்கள் கன்னடமும், தமிழும் கலந்து ஒரு மாதிரியான கன்னடம் பேசுகிறார்கள். இன்பம் கலந்த சூழ்நிலை, அமைதியான வாழ்க்கை, தொடர் மலைகளின் நீலக்காட்சி, சலசலக்கும் நீரோடை, வற்றாத வளமையை வளரவிடும் காட்சி முதலியவைகள் நிறைந்த இடம் நீலகிரி.

செல்வந்தர்களின் உல்லாச உறைவிடமாயும், சென்னை நகரின் கோடை வாசஸ்தலமாயும் விளங்கும் நீலகிரி, நம் தென்னாட்டில் இருப்பதைக் குறித்துப் பெருமைப்பட வேண்டுமல்லவா? ★

# மனித சுபாவத்தை மாற்ற முடியுமா?

**ஜே. பி. எஸ். ஹால்டேன்**



"மனித சுபாவத்தை மாற்ற முடியுமா?" என்று சிலர் கேட்கிறார்கள். மனித சுபாவம் எது என்பதை என்றால் வரையறுக்க முடியாது. ஆனால், கேள்வியை மாற்றிக் கேட்கலாம். அதாவது, மனிதர்கள் சில செயல்களைச் செய்ய விரும்புகிறார்கள். இவ்விருப்பங்களை மாற்ற முடியுமா?" "நிச்சயமாக முடியும்" என்று பதிலளிக்க முடியும்.

நாம் வாழும் சமூக அமைப்பில் ஒருவரையொருவர் மிஞ்ச வேண்டும் என்ற போட்டி மனப்பான்மையே செயல்களுக்குத் தூண்டுகோலாக இருக்கிறது. இந்தப் போட்டிக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒரு சிலர் பணம் திரட்டுவதற்காகப் போட்டியிடுகிறார்கள். வேறு சிலர் நன்மதிப்புக்காகப் போட்டி போட்டு செயலாற்றுகிறார்கள். மற்றும் சிலர் நரகத்தில் போய் அவதியுறக் கூடாதே என்ற அச்சத்தால் சில செய்கைகளைச் செய்கிறார்கள்! அவர்கள் அனைவரும் பிறருக்காக உழைக்கிறார்கள். தங்களைப் போல வேலை செய்யும் பிறரோடு சேர்ந்து உழைக்கிறார்கள். ஆனால், பிறரை விட நன்றாக உழைக்க வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு இல்லை. இலட்சிய வாழ்க்கையில் பிறருக்காக உழைக்க வேண்டும் என்ற ஆசையும், பிறரை விட நன்றாக வேலை செய்ய வேண்டும் என்ற ஆசையும் இருக்க வேண்டும். மனிதன் பிறருக்குப் பயன்படும் முறையில் செயலாற்ற வேண்டும். பிறரைவிட தான் உலகிற்குப் பயனுள்ள வகையில் செயலாற்றினால் அதற்காக மகிழ்ச்சியடைய வேண்டும்.

மனிதனுக் கென்று இயற்கையிலேயே ஏதாவது குணங்கள் இருக்கின்றனவா? இந்தக் கேள்வி இன்று விஞ்ஞான உலகத்தையே கலக்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்டுரையில் பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி ஜே. பி. எஸ். ஹால்டேன் இந்தப் பிரச்னையைப்பற்றிய தமது அபிப்பிராயங்களைக் கூறுகிறார். மொழிபெயர்ப்பு **ஸ்ரீ. நா. வானமாமலை.**

விஞ்ஞானிகள் "மனித இயற்கையை மாற்ற முடியுமா?" என்ற வினவிற்கு விடையளிக்க முடியும். அந்த விடையை அளிக்க பிராணிகளைப்பற்றிய சோதனைகளின் விவரங்களும், முடிவுகளும் பெரிதும் உதவும். ஏனென்றால், பிராணிகள் எளிதில் சோதனைக்குட்படுகின்றன. பிறரைத் தாஜா செய்வதற்காக அவை செயல்புரிவதில்லை. அவற்றின் பிறவிப் பண்பை மாற்ற முடியுமா என்பதைச் சோதனை செய்து அறிவது எளிது.

இத்தகைய சோதனைக்கு பூனையைப் பயன் படுத்துகிறார்கள்.

காயைப் பார்க்கிலும் பூனையைப் பழக்குவது கடினம். பயத்தாலும் நயத்தாலும் அதன் போக்கை அதிகமாக மாற்ற முடியாது. நான் கீழே விவரிக்கப் போகும் சோதனை சிங் யாங்குவோ என்ற சீன விஞ்ஞானியால் நடத்தப்பட்டது. "எலிகளையும், சுண்டெலிகளையும் கொல்லுவது பூனையின் இயற்கையா?" என்ற கேள்விக்கு அவர் விடை காண முயன்றார். ஐம்பத்தொன்பது பூனைக் குட்டிகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார். இவற்றில் சில பிறந்த ஏழாவது நாளிலிருந்து ஒரு எலி அல்லது சுண்டெலியோடு சேர்த்து வளர்க்கப்பட்டன. பதினன்கு நாட்களுக்குப் பின் தாய்ப் பால் நிறுத்தப்பட்டு தாயிடமிருந்து அவை பிரித்து வைக்கப்பட்டன. இவற்றை A பிரிவு என்று அழைக்கலாம். இன்னும் சில பூனைக் குட்டிகள் தனியாகக் கூண்டுகளில் அடைத்து வைக்கப்பட்டன. இவற்றிற்கும் பதினன்கு நாட்களில் தாய்ப் பால் நிறுத்தப்பட்டது. இவற்றை B பிரிவுகள் என்று அழைக்கலாம். A அல்லது B பிரிவைச்சேர்ந்தபூனைக் குட்டிகள், எலியையோ, சுண்டெலியையோ தாய்ப் பூனை கொல்லுவதைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. தவிர இன்னும் சில பூனைக் குட்டிகள் தாய்ப் பூனைகளோடேயே வசித்தன. நான்கு நாட்களுக்கு ஒரு முறை எலியையோ சுண்டெலியையோ தாய்ப் பூனை கொல்லுவதை அவை பார்த்தன. தாய்ப் பூனை கொன்ற எலியைத் தின்ன அனுமதிக்கப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட தாய்ப் பூனை, எலியை மட்டுமோ அல்லது சுண்டெலியை மட்டுமோ தான் கொல்ல அனுமதிக்கப்பட்டது. இப் பிரிவை C என்று அழைக்கலாம்.

இந்த மூன்று வகையான பூனைக் குட்டிகளையும் பிறந்த ஒரு வாரத்திலிருந்து கீழ்க்கண்ட சோதனை செய்யப்பட்டது: நான்கு நாட்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு பூனைக் குட்டியும் ஒரு வெள்ளை எலியோடு அரை மணி நேரம் ஒரு கூண்டில் அடைக்கப்படும். பின்னர் ஒரு சுண்டெலியோடு அடைக்கப்படும். இச் சோதனைகள் பூனைக் குட்டி, எலியையோ சுண்டெலியையோ கொல்லும் வரைக்கோ அல்லது அவற்றிற்கு நான்கு மாத வயது முடியும் வரைக்கோ நடத்தப்படும்.

இந்தச் சோதனைகளால் நாம் காணும் முடிவு என்ன? A பிரிவைச் சேர்ந்த பதினெட்டுப் பூனைக் குட்டிகளில் மூன்று தான் பிற பிராணியைக் கொன்றன. அதிலும் தம்மோடு சேர்ந்து வளர்ந்திருக்கும் பிராணியைக் கொல்லவில்லை. அத்தகைய பிராணிகளை அவை நேசித்தன. B பிரிவைச் சேர்ந்த இருபது பூனைக் குட்டிகளில் ஒன்பது, எலியையோ சுண்டெலியையோ கொன்றன. அவை சுண்டெலிகளைத்தான் அதிகமாகக் கொன்றன.

முடிவாக C பிரிவைச் சேர்ந்த இருபத்தொரு பூனைக் குட்டிகளில் பதினெட்டு, பிராணிகளைக் கொன்றன. அவை முதலில் கொன்ற பிராணி அவற்றின் தாய்ப் பூனை கொன்ற வகையைச் சார்ந்தது.

இச் சோதனையில் உணவினல் மாறுதல் எதுவுமில்லை. ஒவ்வொரு பிரிவிலும் உள்ள பூனைக் குட்டிகளில் பாதிக்கு மாமிசமும், பாதிக்கு இதர உணவும் அளிக்கப்பட்டது. மாமிசம் உட்கொண்ட காரணத்தால் எல்லாப் பூனைக் குட்டிகளும் எலியைக் கொல்லத் தூண்டப் படவில்லை. ஆனல், பிராணிகளைக் கொன்ருல், அவற்றை அவை புசித்தன. பசித்து இருத்தலோ அல்லது வயிறு நிரம்பியிருத்தலோ பூனைக் குட்டிகளின் போக்கை மாற்றவில்லை. முன் அனுபவம் இல்லாதபோது, பூனைக் குட்டியை பசி மட்டும் மூர்க்கத்தனமாக ஆக்கவில்லை.

சோதனைகள் தொடர்ந்து நடந்தன. சாத்விகப் பூனைக் குட்டிகள் (A, B பிரிவுகளைச் சேர்ந்தவை) மேலும் இரண்டு மாத காலத்திற்குள்

வேறு பூனைகள் எலியையோ சுண்டெலியையோ கொல்வதை நேரில் பார்க்க அனுமதிக்கப்பட்டன. B பிரிவைச் சேர்ந்த பதினொரு பூனைக் குட்டிகளில் ஒன்பது இந்தத் தூண்டுதலால் பிராணிகளைக் கொல்ல ஆரம்பித்தன. A பிரிவைச் சேர்ந்த பூனைகளில் பதினைந்துக்கு ஒன்று தான் எலியையோ சுண்டெலியையோ கொன்றது.

இச்சோதனையில் வரும் பூனைக் குட்டிகளுக்கு இடையே பிறப்பிலேயே சில வேறுபாடுகள் இருந்திருக்க வேண்டும் என்பது உண்மையே. C பிரிவில் பிராணிகளைக் கொல்லாத பூனைக் குட்டிகளிலிருந்து, கொல்லாத பூனைக் குட்டி பரம்பரையைப் பெற்றிருக்க முடியும். A பிரிவிலுள்ள கொல்லும் பூனைக் குட்டிகளின் வம்சமாக, கொடூரமான பலாத்காரப் பூனைகளைப் பெற்றிருக்கவும் முடியும். அவ்வாறு பெற பத்துத் தலைமுறை ஆகுமா அல்லது ஆயிரம் தலைமுறை ஆகுமா என்று என்னால் சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட பக்கம் வாசல் உள்ள எலிப் பொறியை எடுத்துக் கொள்வோம். அதில் வழி காணும் சக்தியில் எலிகள் மாறுபடுகின்றன. இச்சக்தியில் சிறந்த எலிகளைச் சேரவிட்டு அவற்றின் பரம்பரையாக மூளைக் கூர்மை வாய்ந்த எலிகளைப் பெற முடியும் என்று சோதனைகள் முடிவு கட்டுகின்றன.

பிறவிக் குணத்தில் பூனைக் குட்டிகளுக்கு இடையே இருக்கும் வேறுபாடுகளைவிட, அவற்றின் பயிற்சியிலுள்ள வேறுபாடுதான் முக்கியமாக அவற்றின் செய்கையைப் பாதிக்கிறதென்பது தெளிவாகிறது. இந்த உண்மை மனிதன் விஷயத்திலும் சரிதான் என்று மக்கள் வளர்ச்சி நூல் சான்று கூறுகிறது. மனிதன் விஷயத்தில் முன் மாதிரியோடு கொள்கைகளும் அவனது செய்கைகளைப் பாதிக்கின்றன. ஆனால், முன் மாதிரியைப் போல பேச்சு அளவில் நிற்கும் கொள்கை, செய்கையைப் பாதிக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்ததல்ல. உதாரணமாக, சில பெற்றோர்கள் தாமே உதாரணமாக நின்று குழந்தைகளுக்கு நற்பழக்கங்களை ஏற்படுத்துகின்றனர். வேறு சிலரோ குழந்தைகளுக்கு உதாரணமாகத் திகழாமல் வாய் உபதேசம் செய்கிறார்கள். இந்த உபதேசம் பயன் படுவதில்லை. இது என் சொந்த அபிப்பிராயமே தவிர இதை நிரூபிக்க என்னிடம் புள்ளி விவரங்கள் இல்லை.

“மனித இயற்கை, போர், சமூகம்” என்ற நூலை நான் வாசித்தேன். அதன் ஆசிரியர் ஜான் கோஹன். அந்தப் புத்தகத்தில் சொல்லப் பட்டிருக்கும் கருத்துக்களை நான் ஒப்புக் கொள்ளவில்லை, ஆரம்பம் நன்றாயிருந்த போதிலும், போருக்கு இழுத்துச் செல்லும் சமூக அமைப்புக்கள் எவை?” என்ற அடிப்படையான கேள்விக்கு அந்த நூலில் விடை காண முடியவில்லை; விடை காண ஆசிரியர் முயலவும் இல்லை. இந்தக் கேள்விக்கு மார்க்ஸிஸ்டுகளின் விடை தவறென்று கோஹன் கருதலாம். ஆனால் அதைப் பற்றிச் சிந்திக்க மறுப்பதால் மார்க்ஸிஸ்டுகளைத் தன் கொள்கைக்கு அவர் மாற்றிவிட முடியாது. “போர் மனித இயற்கையின் தவிர்க்க முடியாத பண்பு” என்று சொல்லுகிறவர்களுக்கு சிங் யாங்கு வோவின் பூனைக் குட்டிகளின் வரலாறு சரியான பாடம் கற்பிக்கிறது. அதைத் தொடர்ந்து மதத்தின் பெயராலும், வருண, இனத்தின் பெயராலும் (Race) நடத்தப்படும் போர்கள்கூட பொருளாதாரக் காரணங்களால் தான் உண்டாகின்றன என்று காட்ட வேண்டும். போருக்கு அடிப்படையான பொருளாதார காரணங்களை அகற்றுவதற்கு நம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும். போர் வெறி மனிதனோடு உடன் பிறந்தது என்று சொல்வது நிரூபிக்க முடியாத கூற்று.

# அமெரிக்க பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தம்

**எஸ். ராமகிருஷ்ணன்**

**க**ராச்சியில் கோலோச்சும் மகமது அலியை நம்பவேண்டுமானால், அமெரிக்க அளகாபுரி அரசர்களுக்கு பாகிஸ்தான் மக்கள் பால் அலாதியான அன்பு சுரக்கத் தொடங்கிவிட்டதென்றே கூற வேண்டும். அமெரிக்க வள்ளல்கள், தன்னலங் கருதாமல் தளவாட தர்மம் செய்வதாக அவர் கூறுகிறார்.

எத்தகைய தளவாடங்கள்? யந்திரப் பொறிகளும் கன ரசாயன வகைகளும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூல யந்திர சாதனங்களா? பாகிஸ்தான் மக்களின் நல்வாழ்வுக்கு வகை செய்யக் கூடிய பொருளாதார உதவியா? அல்ல, அல்ல. பாகிஸ்தான் பாதுகாப்பை முன்னிட்டு, ஒன்பது லட்சம் துருப்புகளைக் கொண்ட சேனையாக பாகிஸ்தான் படை பலம் பெருகுவதற்காக, அமெரிக்க சர்க்கார் 2 கோடி 20 லட்சம் டாலர்கள் (ரூ. 11 கோடி) பெறுமானமுள்ள ஆயுத தளவாடங்களை அளிக்கப் போகிறது. தவிர, 400 டாங்கிகளும் 150 ஜெட் விமானங்களும் 550 இதர வகைப் போர் விமானங்களும், பாகிஸ்தானுக்கு இனாமாகக் கிடைக்குமென்று பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன.

**அமெரிக்க, பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தம் ஆசிய மக்களுக்கே ஒரு பெரும் ஆபத்து என்கின்றார் பிரதமர் நேரு. இந்தியாவைச் சுற்றி ராணுவ தளங்களை அமைக்க அமெரிக்கா முயல்கிறது; ஆகவே நாம் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; நம்மைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சர்வ கட்சிகளும் கூறுகின்றன. இந்த ஒப்பந்தம் தான் என்ன? நம்முடைய கடமை என்ன என்பதை விளக்குகிறது இந்தக் கட்டுரை.**

இந்த ராணுவ உதவிக்கு எத்தகைய நிபந்தனையும் கிடையாதென்று பாகிஸ்தான் பிரதமர் அறிவிக்கிறார். பாகிஸ்தானில், அமெரிக்கா ராணுவ தளங்களை நிறுவப் போகிறதென்று மியான் இப்திகாருதீன், சுராவர்தி போன்ற எதிர்க்கட்சித் தலைவர்களும், கம்யூனிஸ்ட்களும் அபாயச் சங்கு ஊதுவது அபாண்டமான அவதூறுப் பிரசாரம் என்று மகமது அலி அறிவிக்கிறார். ஆனால் அவசியம் ஏற்படும்பொழுது, பாகிஸ்தான் தன்னிச்சையாகவே அமெரிக்காவுக்கு ராணுவ தளங்கள் கொடுக்கலாமென்றும் அவர் விளக்கம் கொடுத்துவிட்டார். எனவே, மகமது அலியின் கூற்றுப்படியே அமெரிக்காவுடன் பாகிஸ்தான் சர்க்கார் ராணுவ உறவு கொள்கிறதென்பது உண்மை; அமெரிக்க உதவியுடன் பாகிஸ்தான் சர்க்கார் படைப் பெருக்கத்தில் ஈடுபடப் போகிறதென்பதும் உண்மை; அவசியம் ஏற்படும்பொழுது, அமெரிக்காவுக்கு போர்த் தளங்களைக் கொடுப்பதற்கு மகமது அலி சர்க்கார் தயாராயிருக்கிறதென்பதும் உண்மை.

பாகிஸ்தானைவிட பலம் வாய்ந்த நாடுகள் அமெரிக்க ராணுவ உதவியை நாடி அவை அடைந்த கதியை நாம் அறிவோம். யுத்த பிற்காலத்தில், அமெரிக்க சம்மதமில்லாமல் எந்த முக்கியமான முடிவையும் பிரிட்டன் எடுக்க முடியவில்லை! பிரிட்டனும், பிரான்சும், இத்தாலியும் அரசியல், ராணுவ, பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொள்ளும் உரிமையை இழந்துவிட்டு நிற்கும் பொழுது, பாகிஸ்தானுக்கு என்ன கதி ஏற்படும்? அமெரிக்க நிபுணர்கள் பாகிஸ்தான் பட்ஜட்டை வகுப்பார்கள்; அமெரிக்கத் தேவைக்காக

விமான தளங்களை நிறுவவேண்டும். பாகிஸ்தான் மக்கள் அரசுரிமையை இழப்பார்கள்; அவர்களுடைய வறுமை அதிகரிக்கும்; அமெரிக்காவின் பீரங்கித் தீனியாகும் பாக்கியமே அவர்களுக்குக் கிட்டும்.

அமெரிக்க குபேரர்கள் ஒரு டாலர் காசைக்கூட விரயம் செய்யமாட்டார்கள். அவர்கள் பாகிஸ்தான் சர்க்காருக்கு அளிக்கும் உதவிக்கு உள்நோக்கம் உண்டு. அதை அவர்களே தெளிவு படுத்திவிட்டார்கள். துருக்கியிலிருந்து பிலிப்பைன் தீவுகள் வரையுள்ள பகுதியில் அமெரிக்காவுக்கு தளங்கள் கிடையாதென்றும், பாகிஸ்தானில் தளங்கள் கிடைத்தால், சோவியத் ஆசியா மீது அமெரிக்க விமானங்கள் பாய்ந்து குண்டு வீசுவதற்கும் பயன்படுமென்றும் அமெரிக்கப் பத்திரிகைகள் எழுதுகின்றன. உலக யுத்தத் தயாரிப்பில் ஒருபகுதியே இந்த ராணுவ ஒப்பந்தம்.

கொரியாவில் அவர்கள் தோற்று விட்டார்கள். ஒரு கோடி மக்கள் வாழும் வட கொரியாவின் மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் தன் முழு வலுவுடன் தாக்குதலைத் தொடுத்தது. பிரிட்டன், பிரான்ஸ் ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, கிரீஸ், துருக்கி முதலிய நாடுகளிலிருந்து படைகள் வந்தன. இந்த அசுர பலத்தின் கூட்டு முயற்சியை எதிர்த்து சின்னஞ் சிறு கொரியா, சீனத் தொண்டர்களின் துணையுடன் வீரஞ் செறிந்த போராட்டம் நடத்தி வெற்றி கண்டது. உலக சமாதான இயக்கத்தின் உதவியுடன் 38-வது அட்ச ரேகைக்கு அருகிலேயே போர் நிறுத்தம் ஏற்பட்டது. அதனால் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வெறி பிடித்து அலைகின்றனர். ராணுவ தளவாட உற்பத்தியிலும், போர் நடத்துவதிலும் அதிகபட்ச லாபம் தேட விரும்பும் டாலர் முதலாளிகள் சமாதானத்தைக் கண்டு அச்சம் அடைகின்றனர். எப்பாடுபட்டாவது கொரியோவில் சமாதானம் ஏற்படுவதைக் குலைக்க முயல்கின்றனர்; புதிய பிரதேசங்களில் யுத்தத் தீயை மூட்டுவதற்கும் பிரயத்தனம் செய்கின்றனர்.

இந்திய மக்களின் சமாதான ஆர்வத்தையும் சுதந்திர உணர்ச்சியையும் கண்டு அவர்கள் ஆத்திரப்படுகிறார்கள். ஆசியர்களுக்கு எதிராக ஆசியர்களையே பீரங்கித் தீனியாகப் பயன்படுத்தி, உலகாதிக்கம் பெற விரும்பும் அமெரிக்கக் கொள்கைக்கு இந்தியா பலியாக மறுக்கிறது. இந்திய சர்க்கார் கொரியாவில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்கு உதவியாக சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதனால் இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா சதி செய்து வருகிறது.

பொருளாதார உதவி அளிப்பதாகக் கூறி, தூண்டிற் புழுவைக் கொண்டு மீன் பிடிப்பதைப் போல இந்தியாவை மடக்க அமெரிக்கா முயன்றது. பாம்புக்கு பால் வார்ப்பதைப் போல, இந்திய சர்க்கார் அமெரிக்கா ஊடுருவலுக்கு இடம் கொடுத்த போதிலும், இந்திய சர்க்கார் அமெரிக்காவின் தலையாட்டித் தம்பிரானாக முடியவில்லை. இந்த நிலையில்தான், காஷ்மீரில் ஷேக் அப்துல்லா சர்க்காரை வசப்படுத்திக்கொண்டு இந்தியாவை மிரட்ட அமெரிக்கா முயன்றது. ருஷ்யா, சீனா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் சந்திக்கும் இடமான காஷ்மீரில் 'தனியரசு' அமைத்து அமெரிக்கத் தளங்களை ஏற்படுத்த, அப்துல்லா மூலம் சதி நடந்தது. ஆனால் காஷ்மீர ஜனநாயக சக்திகள் உஷாராகச் செயலாற்றி, இந்த சூழ்ச்சியைத் தோற்கடித்தன. எனவே, பாகிஸ்தான் ஆட்சியாளரை வசப்படுத்திக் கொண்டு, அந்த நாட்டில் ராணுவ தளங்களை அமைக்க அமெரிக்கா பாடுபடுகிறது.

அமெரிக்க பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தத்தின் மூலம், இந்திய சர்க்காரைப் பயமுறுத்தி, அமெரிக்க ராணுவ ஒப்பந்தத்துக்கு இசையும்

படி கட்டாயப்படுத்துவது அமெரிக்க நோக்கம். இந்த நோக்கம் ஈடேற வில்லையென்றால், இந்திய சர்க்கார் அமெரிக்க யுத்தத் திட்டங்களில் சிக்க மறுத்தால், காஷ்மீர் தகராறைப் பயன்படுத்தி, இதர இந்திய-பாகிஸ்தான் தகராறுகளுக்கு தூபம் போட்டு, இந்தியாமீது ஆக்கிரமிப்பது சாத்தியமென்று அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் எண்ணுகிறார்கள்.

அரபு நாடுகளின் ராணுவக் கூட்டணியை நிறுவுவதிலும் அமெரிக்கா முயற்சி தோற்றுவிட்டது. இப்பொழுது பாகிஸ்தானையும் துருக்கியையும் இணைப்பதன் மூலம், பாகிஸ்தானுக்கும் இதர முஸ்லிம் நாடுகளுக்குமிடையே சிண்டு முடிந்து விடவும், அந்த முஸ்லிம் நாடுகளைப் பயமுறுத்திபணிய வைக்கவும் அமெரிக்கா முயல்கிறது.

எனவே அமெரிக்க - பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தம் அரபு நாடுகளுக்கு ஆபத்து உண்டாக்குகிறது; இந்திய பர்மா ஆகிய நாடுகளின் பந்தோபஸ்த்தை அச்சுறுத்துகிறது. சோவியத் யூனியன், சீனவுக்கு எதிரான ஆக்கிரமிப்புத் திட்டத்துக்கு உதவுகிறது.

கிழக்கு பாகிஸ்தான் இந்தியாவின் வடகிழக்கிலும், மேற்கு பாகிஸ்தான் இந்தியாவின் வடமேற்கிலும் இருக்கின்றன. எனவே, இந்தியாவுக்கு இருபுறங்களிலிருந்தும் அபாயம் ஏற்படும்; அத்துடன் போர்ச்சுக்கிசியர் பிடிப்பிலுள்ள கோவாவிலும், இலங்கையிலுள்ள திரிகோண மலையிலும் அமெரிக்கா ராணுவ தளங்களை நிறுவ முயல்வதையும், பிரஞ்சுக் காலடியில் பதறும் புதுச்சேரியும் அமெரிக்கத் திருவிளையாடலுக்கு பயன்படுமென்பதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், இந்தியா எத்தகைய அரசியல், ராணுவ முற்றுகைக்கு உட்பட இருக்கிறதென்பதை எண்ணிப் பார்க்க முடியும்.

ஆறு மாதங்களுக்குமுன்தான், இந்திய-பாகிஸ்தான் பிரதமர்கள் டெல்லியிலும் கராச்சியிலும் கூடிப் பேசினார்கள்; காஷ்மீர் பிரச்னையிலும் இதர பிரச்னைகளிலும் முடிவு காண விவாதித்தார்கள். இந்த நல்லுறவு வளரக் கூடாதென்பதற்காக அமெரிக்கா சூழ்ச்சி செய்தது. ராணுவ ஒப்பந்தம் மூலம் இந்திய-பாகிஸ்தான் விரோதத்துக்கு தூபம் போடுகிறது.

இந்த சூழ்ச்சி வெற்றியடைந்தால், இந்தியாவும் பாகிஸ்தானும் பேராபத்தில் சிக்கும். அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக, இந்திய—பாகிஸ்தான் மக்கள் கூட்டணி வகுத்து நிற்பதே முன்னேற்றப் பாதை. இரு நாடுகளுக்கிடையேயுள்ள விவகாரங்களைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொண்டு, நல்லுறவுகளை வளர்ப்பதே நமது வளர்ச்சிக்கு வழி. அதுவே ஆசியாவில் சமாதானத்தைப் பாதுகாக்கும் பாதை.

இந்தியாவிலுள்ள வகுப்புவாத பிற்போக்காளர்கள், குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க விரும்புகிறார்கள். அமெரிக்க எதிர்ப்புணர்ச்சியைப் பாகிஸ்தான் மக்களுக்குஎதிராகத் திருப்பிவிட முயல்கிறார்கள். இந்திய-பாகிஸ்தான் மக்களுக்கிடையேயும் இந்து—முஸ்லிம் மக்களுக்கிடையேயும் கலகத்தை தூண்டிவிடும் தீய சக்திகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. அந்த சக்திகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பாகவே இந்தக் கைங்கரியத்தைச் செய்கின்றன.

தற்காலிகமாக பாகிஸ்தானில் அரசுபுரியும் கூட்டம், பாகிஸ்தான் மக்களின் நிகழ்கால நலன்களையும் எதிர்கால நலன்களையும் டாலருக்காக விலைபேசுகிறது. அந்தக் கூட்டத்தின் குற்றத்துக்காக பாகிஸ்தான் மக்களை நாம் பகைத்துக்கொள்ளக் கூடாது. பாகிஸ்தான் மக்களும், இந்திய மக்களும் இணைந்து நின்றே அமெரிக்க ஆக்

கிரமிப்புத் திட்டங்களை முறியடிக்க வேண்டும்.

இந்திய சர்க்கார், அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டுமென்று கூறுவதை நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள். ஆனால் சர்க்கார் தன் சொல்லைச் செயலில் காட்ட வேண்டும். இன்னும், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் கூட்டுறவை நாடும் கொள்கை முறியவில்லை. கல்யாணி நகரத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபை, அமெரிக்க பாகிஸ்தான் ஒப்பந்தத்தைக் கண்டிக்கும்பொழுதே, அமெரிக்க அதிபர்களை சுதந்திர ரட்சகர்களென்றும் ஜனநாயக ஜோதிகளென்றும் புகழ்கிறது! அமெரிக்க உளவாளிகள் பரிபூர்ண சுதந்திரத்துடன் நாட்டில் நடமாடுகின்றனர். அமெரிக்க முதலாளிகள், எண்ணெய் சுத்திகரிப்பு போன்ற கேந்திரமான தொழில்களில் பேராதிக்கம் வகிக்கின்றனர். அரசாங்க இலாக்காக்களிலும் அரசாங்கத்தின் மின்சார பாசன திட்டங்களிலும் அமெரிக்க அதிகாரிகள் சட்டாம் பிள்ளைகளாக இருக்கின்றனர். இந்த நிலைமை நீடிக்கும்வரை தேசத்தின் பாதுகாப்புக்கு உறுதி ஏற்பட முடியாது. ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்க்க இன்னொரு ஏகாதிபத்தியத்தின் துணையை நாட முடியாது. எதிரிக்குஎதிரி நண்பன் என்ற தத்துவத்தை விடுதலை இயக்கம் என்றுமே ஏற்றுக்கொண்டதில்லை. ஜப்பானை எதிர்ப்பதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குப் பின் பலமாகத் திரள வேண்டுமென்று எம். என். ராய் கூறிய பொழுது, அதை நாம் ஏறெடுத்துப் பார்க்க மறுத்தோம். பிரிட்டனுக்கு எதிராக ஜப்பானுடன் சேரவேண்டுமென்ற போக்கையும் நாம் எதிர்த்தோம். ஆனால் இன்று இந்திய சர்க்கார், காமன்வெல்த் இணைப்பின் உதவியால் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்க்க முடியுமென்று நம்புகிறது. பிரிட்டிஷ் சர்க்காரே அமெரிக்காவுக்குக் கட்டுப்பட்டிருப்பதை அது கணக்கில் எடுக்கவில்லை; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் யுத்த முகாமில் சேர்ந்திருப்பதையும், ஆப்பிரிக்காவிலும் மற்ற இடங்களிலும் விடுதலை இயக்கங்களை அடக்கி வருவதையும் அது மறைக்கிறது. இந்தப் போக்கு ஆபத்தானது. காமன்வெல்த் பிடிப்பு உள்ளவரை, பிரிட்டிஷ் முதலாளிகள் நம் தேசப் பொருளாதார சிகரங்களில் அதிகாரம் நடத்தும் வரை, உருவான எதிர்ப்பு வெற்றிகரமான பாதுகாப்பு கடினமாகும்.

சர்க்கார் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றால் தான், நாட்டைப் பாதுகாக்க முடியும். உள் நாட்டில் ஜனநாயகத்தை மறுத்துவிட்டு, வெளிநாட்டு ஆக்கிரமிப்பைப் எதிர்க்க முடியாது. பொருளாதார நெருக்கடிக்கு மக்களைப் பலியாக்கி விட்டு, அரசுரிமையைப் பாதுகாக்க முடியாது. எனவே நாட்டின் பந்தோபஸ்த்தை உறுதி செய்வதற்கே, ஜனநாய சீர்திருத்தங்கள் அவசர அவசியமாகிவிட்டது; இதை மறப்பது பாதுகாப்புக்கே குந்தகம் செய்வதாகும். பாதுகாப்பின் பெயரால் கொள்ளை லாப வெறியர்களும் நிலப்பிரபுக்களும் இஷ்டப்படிச் சுரண்டுவதற்கு பச்சை விளக்கு காட்டுவதாகும். நெருக்கடியில் கஷ்டப்படும் மக்களை அமெரிக்க ஏஜண்டுகள் தவறான வழியில் இட்டுச் செல்வதற்கு உதவுவதாகும்.

எனவே, அமெரிக்க ஆக்கிரமிப்பு அபாயத்தை எதிர்த்து ஒன்றுபட்டெழும் பொழுதே, ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான இயக்கங்களையும் ஆதரிப்பது தேசபக்தக் கடமையாகும்.

ஏகாதிபத்திய யுத்த வெறியர்களை எதிர்த்து வெற்றிகரமாகப் போராடவேண்டுமானால், கம்யூனிஸ்ட் பூச்சாண்டியைப் பற்றி நாம் உஷாராயிருக்க வேண்டும். கம்யூனிஸ்ட் பூச்சாண்டியைக் காட்டியே ஹிட்லர் ஐரோப்பாவை அடிமைப் படுத்தினான் என்பதை நாம் மறக்கலாகாது. ★

மொழிவாரியாக மாகாணங்கள் பிரிப்பது தேச நலத்திற்கே ஆபத்து என்கின்றனர் நமது தேசீயத் தலைவர்கள். இந்தக் கூற்று உண்மையா? நடைமுறையில் சோவியத் யூனியன் இந்தக் கூற்றைப் பொய்ப்பிக்கிறது.

# சோவியத் யூனியனில் தேசீய இனங்களின் ஒற்றுமை

**பேராசிரியர் ஜி. நாகராஜன்**

ருஷ்ய சாம்ராஜ்யத்தில் நிலப் பிரபுக்களும், முதலாளிகளும் ஆட்சி செய்தனர். ஜார் அரசாங்கம் அவர்களது ஆட்சி யந்திரமாக இருந்தது. இந்த அரசாங்கம் எல்லா மக்களையும், குறிப்பாக ருஷ்யாவில் வாழ்ந்த ருஷ்யர் அல்லாத மக்களைக் கொடுமைப்படுத்தியது. ஜார் அரசாங்கம் நாட்டை இஷ்டம்போல் கூறுபோட்டுக் கொண்டது. பலவேறு தேசிய இனங்களின் உரிமைகளை அது மதிக்கவில்லை. ருஷ்யரல்லாத மக்கள் கலை, கலாச்சாரம் அற்றவர் என்றும், சுய ஆட்சிக்குத் தகுதியற்றவர் என்றும் கூறி வந்தது. ருஷ்யக் கம்யூனிஸ்டு கட்சி எல்லா தேசிய இனங்களும் தங்களது அரசியல் உரிமைகளைப் பெற வேண்டும் எனவும், குறிப்பாக ஒவ்வொரு தேசிய இனமும் அதன் இஷ்டம்போல் அதனது அரசியல், பொருளாதார, சமுதாய அமைப்பை அமைத்துக்கொள்ளும் அடிப்படை உரிமையைப் பெறவேண்டும் என்றும் கருதியது. அதோடு விடுதலை பெற்ற தேசிய இனங்கள் தாமாகவே, இஷ்டபூர்வமாக, தங்களது உரிமைகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்கும் கம்யூனிஸ்டு கட்சி முயன்றது.

இதன் விளைவாக இன்று சோவியத் யூனியனில் நான்கு வித தேசிய அரசாங்க அமைப்புகள் ஏற்பட்டுள்ளன. அவை:

1. **யூனியன் குடியரசுகள்**
2. **சுய ஆட்சி குடியரசுகள்**
3. **சுய ஆட்சி பிரதேசங்கள்**
4. **தேசீய பிரதேசங்கள்**

எதற்காக இம்மாதிரி நான்கு வகை தேசிய அரசாங்க அமைப்புகள்? சோவியத் யூனியனில் சுமார் அறுபது தேசீய இனங்கள் இருக்கின்றன. மொழி, பழக்க வழக்கங்கள், கலை, கலாசாரம் இவற்றில் இத் தேசிய இனங்கள் வேறுபட்டவை. இவற்றில் ருஷ்யர், உக்ரேயினர், ஜியார்ஜியர் போன்ற தேசிய இனங்கள் வெகு காலமாக தமக்கென தேசிய அரசாங்கங்கள் பெற்றிருந்தவை. மாரி, கோமி, எவங்கி போன்ற இனத்தைச் சார்ந்தவர்கள் புரட்சிக்குப் பின்னரே, தமக்கென தேசிய அரசாங்கங்கள் அமைத்துக்கொண்டு தனித்த வளர்ச்சியைத் துவங்கியவை. சில தேசிய இனங்கள் அவைகளது ஜனத்தொகை லட்சக் கணக்கிலும், பத்தாயிரக் கணக்கிலுமே இருக்குமளவிற்கு சிறுத்துள்ளன. இவ்வளவு வேறுபாடுகளும், வேற்றுமைகளும் இருக்க, எல்லா தேசிய இனங்களும், தங்களது தேசிய அரசாங்கங்களை



துருக்கியர்



ஆஸ்டியாக்



கிர்கியர்

கிறுவி வளர்ப்பதில் ஒரே வழிமுறையைப் பின்பற்ற முடியாது. ஒவ்வொரு இனமக்களின் விசேஷ குணும்சங்கள, வளர்ச்சி நிலை, இவற்றைப் புறக்கணிக்க முடியாது. ஒவ்வொரு சோவியத் தேசிய இனத்தாரும் தங்களுக்கெனவே, ஒரு அரசாங்கத்தை அமைத்துக்கொண்டு, தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்டு ஆட்சி செய்து கொள்கின்றனர். அதே சமயத்தில் சோவியத் யூனியன் முழுமையும் பற்றிய பிரச்னைகளை ஆராய வேறு பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்புகின்றனர்.

ஏன் எல்லா தேசிய இனங்களையும் இணைத்து ஒரு யூனியன் அமைக்க வேண்டும்? சோவியத் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பே ஓரளவிற்கு நாட்டின் பல்பாகங்களுக்கிடையே தொழிற் பிரிவினை காலப் போக்கில் ஏறபட்டிருந்தது. உதாரணமாக நாட்டின் வடக்கு, மத்தியில் உள்ள பிரதேசங்கள் தெற்கிலிருந்து உணவுத் தானியங்களைப் பெற்று வந்தன. வடக்கிலுள்ள பகுதிகள் தெற்கிலும், கிழக்கிலும் உள்ள பிரதேசங்களுக்கு பருத்தி சாமான்கள் அனுப்பி வந்தன. தெற்கு, கிழக்கு பிரதேசங்களிலிருந்தே மற்ற பிரதேசங்கள் அவைகளுக்கு தேவையான எண்ணெய், நிலக்கரி இவற்றைப் பெற்று வந்தன. இம்மாதிரி காலப் போக்கில் பலவேறு பிரதேசங்களுக்கிடையே ஏற்பட்ட தொழிற் பிரிவினை எந்த பிரதேசமும், மற்ற பிரதேசங்களோடு நெருங்கி ஒத்துழைக்காமல் வளர்ச்சியடைய முடியாதென்பதையும், எல்லா பிரதேசங்களது பொருளாதாரங்களும் ஒன்றிணைக்கப்பட்ட அளவிற்கு எல்லா பிரதேசங்களின் வளர்ச்சியும் துரிதப்படும் என்று எடுத்துக்காட்டியது. அதே சமயத்தில் புரட்சிக்குப் பின்னர் ருஷ்யாவிற்குள் பிரவேசித்த அன்னிய துருப்புகளையும், புரட்சி எதிர்ப்பாளர்களையும் முறியடிப்பதில் ருஷ்ய மக்கள், எல்லா தேசிய இனங்களும் ஒன்றுபட்டு, தங்களது ராணுவங்களை இணைப்பதன் மூலம் நாட்டின் பாதுகாப்பு பலப்படுகிறது என்ற உண்மையை தெரிந்துகொண்டனர். மேலும் மக்கள் கையில் ஆட்சி இருக்கும்பொழுது தேசிய இனங்களிடை சண்டை சச்சரவுகளுக்கு இடமில்லை. மக்கள் கைக்கு ஆட்சி செல்லும்போது அது எல்லா தேசிய இனங்களையும் மக்களையும் ஒற்றுமைப்படுத்துகிறது. முதலாளிகள் ஆட்சி செய்யும்போதுதான் தேசிய இனங்களிடை பகைமை, குரோதம், பரஸ்பர நம்பிக்கையின்மை வளருகிறது. சோவியத் யூனியனிலுள்ள பல்வேறு தேசிய இனங்கள் ஒன்றுபட்டு ஒன்றுபட்ட ராணுவம், ஒன்றுபட்ட பொருளாதாரத்தை ஏற்படுத்திக்கொண்டிராவிடில் நாஜி ஜெர்மனியின் தாக்குதலை சமாளிப்பதில் அகற்கு மிகுந்த கஷ்டம் இருந்திருக்கும்.

சோவியத் யூனியனில் தேசிய இனங்களின் ஒற்றுமை இஷ்டபூர்வ


புரியாத்


வெள்ளை ருஷ்யர்


ஜார்ஜியர்

மாக, ஜனநாயக முறையில் அமைந்தது என்பது முக்கியமான விஷயம். இல்லாவிட்டால் ஐக்கியத்தால் சோவியத் யூனியன் பலமடைந்திருக்க முடியாது.

இந்த ஐக்கியத்தை முதலாளித்துவ நாடுகளில் ஏற்படும் "ஐக்கியத்தோடு" ஒத்திட்டுப் பார்ப்பது நல்லது. முதலாளித்துவ நாடுகளிடை யூனியன் (இணைப்பு) பலாத்காரத்தால், ஒரு இனம் மற்றொரு இனத்தை அடிமைப்படுத்தும் முறையில் ஏற்படுகிறது. உதாரணமாக யு. எஸ். ஏ. (அமெரிக்கா) 1803-ல் லூசியானாவை பிரான்சிடமிருந்து விலைகொடுத்து வாங்கியது. 1819-ல் பிளாரிடாவை ஸ்பெயினிடமிருந்து விலை கொடுத்து வாங்கியது. 1845-ல் டெக்சாசை மெக்சிகோவிடமிருந்து பிடுங்கியது. இதுவன்றி கொடூர முறையில் அமெரிக்கா கண்டத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த சிவப்பு இந்தியர்களை பூண்டோடு அழித்து ஒழித்தது. இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் பலவேறு தேசிய இனங்களை பலவந்தமாக இணைத்து, நாட்டை இஷ்டம்போல் கூறு போட்டு தேசிய இனங்களின் வளர்ச்சியையும், ஒற்றுமையையும் தடை செய்தது. ஆனால் சோவியத் யூனியன் ஏற்பட்ட விதமே வேறு. 1922-ல் நான்கே நான்கு குடியரசுகள் இஷ்டபூர்வமாகச் சேர்ந்து யூனியனை அமைத்தன. பிறகு பல குடியரசுகள் ஒவ்வொன்றாகச் சேர்ந்து, இன்று யூனியனில் பதினாறு குடியரசுகள் உள்ளன. சோவியத் யூனியனில் உள்ள குடியரசுகள் சம அந்தஸ்தில் உள்ளன. சம உரிமைகளைப் பெற்றுள்ளன. யூனியனில் உள்ள எல்லாக் குடியரசுகளிலும் மிகவும்பெரியதான, மிகவும்வளர்ச்சி பெற்ற, நாஜி எதிர்ப்பு போரில் மிகப் பெரும் தியாகங்களைச் செய்த ருஷ்யக் குடியரசு எந்த விதத்திலும் மற்ற குடியரசுகளைவிட அதிக உரிமைகளைப் பெற்றிருக்கவில்லை.

இஷ்டபூர்வமான இணைப்பினால் எந்த தேசிய இனத்தின் முன்னேற்றமோ, எந்தக் குடியரசின் வளர்ச்சியோ, சிறிதளவும் பாதிக்கப்படவில்லை. மாறாக, பின்தங்கிய தேசிய இனங்களும், குடியரசுகளும் குறுகிய காலத்திலே பெருத்த முன்னேற்றம் கண்டுள்ளன. உதாரணமாக ஜார் ஆட்சிக் காலத்தில் காஷக் இன மக்கள் மிகவும் பிற்பட்டு இருந்தனர். இன்று அவர்கள் வாழும் பிரதேசம் தொழில் மயமாக்கப்பட்டுவிட்டது. அப்பிரதேசத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கங்கள் யூனியனில் மூன்றாவது ஸ்தானம் பெறுகின்றன. அப்பிரதேசத்திலுள்ள செப்பு, ஈய, துத்திநாகத் தொழிற்சாலைகள் யூனியனிலே மிகப் பெரியவை. முன்பு நூற்றுக்கு இரண்டு பேரே எழுதப் படிக்கத் தெரிந்த அப்பிரதேசத்தில் இன்று (1948 கணக்குப்படி) இருபத்து மூன்று உயர்தரக் கல்வி நிலையங்கள் உள்ளன. நாற்பத்திரண்டு ஆராய்வு நிலையங்களைக் கொண்ட ஒரு விஞ்ஞானக்கழகம் உள்ளது. யூனியனில் உள்ள எந்தக் குடியரசை, எந்த தேசிய இனத்தை எடுத்துக்கொண்டாலும் இதே போன்ற முன்னேற்



ஜெர்மானியர்



மகாருஷ்யர்



உக்ரேனியர்

றத்தைப் பார்க்கலாம். தேசிய இனங்கள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டால், அது எந்த அளவிற்கு மக்களின் ஆக்க சக்திகளைக் கட்டவிழ்த்துவிடும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

யூனியனில் இணைவதால் ஒரு குடியரசின் சுதந்திரத் தன்மை எள்ளளவும் பாதிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு குடியரசு அரசாங்கமும் தனது குடியரசில் சுயேச்சையான ஆட்சி நடத்துகிறது. யூனியன் அரசாங்கத்தைச் சார்ந்தவை என்று குடியரசு அரசாங்கங்களே இஷ்டப்பட்டு விட்டுவிட்ட விஷயங்களைத் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் குடியரசு அரசாங்கமே முழு அதிகாரம் பெற்றிருக்கிறது. குடியரசுக்குள் எல்லா அரசாங்க அலுவல்களும் குடியரசுத் தாய் மொழியிலே நடைபெறுகின்றன. குடியரசிற்கு யூனியனைவிட்டு பிரிந்து செல்ல எந்த நேரமும் உரிமை உண்டு. இந்த உரிமையை எந்த முதலாளித்துவ அரசாங்கமும் தன்னுடனிணைந்துள்ள மற்றொரு அரசாங்கத்திற்கு அளிக்க முன்வராது. ஒவ்வொரு குடியரசும் அதன் வளர்ச்சி, அதன் மக்களது விசேஷ கலாசாரப் பண்பாடுகளைப் பிரதிபலிக்கக்கூடிய தனியான அரசியல் சட்டத்தைக்கொண்டுள்ளது. ஆனால் ஒரு நிபந்தனை, எந்த குடியரசின் அரசியல் சட்டமும் யூனியனது அரசியல் சட்டத்திற்கு முரணாக இல்லாமல், பொருந்தியதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குடியரசும் அதற்கென ராணுவத்தை அமைத்துக்கொள்ளலாம். குடியரசுகள் அமைத்துக்கொள்ளும் ராணுவங்கள் யூனியனது ராணுவத்தின் பிரிவுகள். ஒவ்வொரு குடியரசு அரசாங்கமும் யூனியன் பிறப்பித்துள்ள பொதுப்படையான வரம்புகளுக்குப் பொருந்தி எந்த அந்நிய நாட்டோடும் உறவுகள் ஏற்படுத்திக்கொள்ளலாம். இவ்விரு உரிமைகளும் குடியரசு அரசாங்கங்களின் சுதந்திரத் தன்மையை மிகவும் விரிவுபடுத்துகின்றன. நாஜி ஜெர்மனியை முறியடித்ததில் பெரும் பங்கு கொண்ட உக்ரெயின், பைலோ ருஷ்யன் குடியரசுகள் ஐக்கிய நாடுகள் சபையில் தனி ஸ்தானங்கள் பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு குடியரசும் தனிக்கொடியும், அரசாங்கச் சின்னமும் கொண்டுள்ளது. ஒவ்வொரு குடியரசு அரசாங்கமும் அதற்கேற்ற சட்டதிட்டங்களை இயற்றுகிறது. யூனியனைப் பொருத்த சில விஷயங்களில் மாத்திரம் குடியரசு அரசாங்கங்கள் சட்டங்களை இயற்ற முடியாது.

சில குடியரசுகளின் சில பாகங்களில் அவ்வக்குடியரசுகளில் வாழும் பெரும்பான்மை மக்களது இனத்தைச் சாராத வேறு இன மக்கள் வாழுகின்றனர். குறிப்பிட்ட இடங்களில் பெரும்பான்மையினராக, ஆனால் குடியரசுக்குள் சிறுபான்மையினராக உள்ள இன மக்கள் குடியரசுக்குள்ளே சுயாட்சி குடியரசுகள் ஏற்படுத்திக்கொண்டுள்ளன. ருஷ்யாவின் வடகிழக்கு ஓரத்தில் கோமி என்னும் இனத்தைச் சார்ந்த மக்கள் வாழுகின்றனர்.



டாட்ஜிக் யூதர் சாம்

ஜார் காலத்தில் இந்த இன மக்கள் செத்து மடிந்துகொண்டிருந்தனர். இன்று இவ்வினத்தார் ஒரு சுயாட்சி குடியரசு அமைத்துக்கொண்டு அதன் காரணமாக வெகு முன்னேறியுள்ளனர். இன்று அம்மக்களில் நூற்றுக்கு தொண்ணூற்றேழு பேருக்கு எழுதப் படிக்கத் தெரியும். அவர்கள் பல தொழில்களை அபிவிருத்தி செய்துகொண்டுள்ளனர். அவர்களது தேசிய இலக்கியம் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. ஒரு சுயாட்சி குடியரசு ஒரு யூனியன் குடியரசின் ஒரு பகுதியாக இருந்தபோதிலும் அதனது உள்நாட்டு அலுவல்களைப் பிரதேச மொழியில் அதுவே நிர்வகித்துக் கொள்கிறது. அது அதற்கெனவே ஒரு அரசியல் திட்டத்தையும் அமைத்துக்கொண்டு உள்நாட்டு விஷயங்களைப் பொறுத்த சட்ட திட்டங்களை இயற்றுகிறது. பின் தங்கிய சுயாட்சி குடியரசுகளுக்கு யூனியன் அரசாங்கம் விசேஷ உதவி புரிகிறது.

சுயாட்சிக் குடியரசுகளைத் தவிர ஒரு குடியரசில் மிகச் சிறுபான்மையினராக வாழக் கூடிய மக்க சுயாட்சி பிரதேசங்களையும், தேபிரதேசங்களையும் அமைத்துக் கொண்டு அவர்களது விசேஷ பண்பாடுகள், வளர்ச்சி நிலைக்கேற்றவாறு முன்னேற சுயாட்சி ஸ்தாபனங்கள் அமைத்துக்கொண்டுள்ளனர். இவ்வாறு சோவியத் யூனியனிலுள்ள ஒவ்வொரு இனமும், அது எவ்வளவு சிறுபான்மை இனமாக இருந்தபோதிலும், சுய நிர்ணய உரிமை பெற்றிருப்பதாலும், மிகச் சிறுபான்மை இனங்களும் யூனியன் அரசாங்கத்திலிருந்து பெரும் உதவி பெறுவதாலும், ஜார் காலத்தில் துரிதமாக மறைந்தே போகும் நிலையிலிருந்த இனங்களும் வளர்ச்சி அடைந்து, அவற்றின் கலை, இலக்கியங்களால், யூனியனையே செழுமைப்படுத்தியும், வளப்படுத்தியும் வருகின்றன. முன்பு நாடோடிகளாய்த் திரிந்த இனங்கள் எல்லாம் இன்று இருக்க இடமும், நிலையான தொழிலும் பெற்று முன்னேறுகின்றன. கல்வி, மருத்துவம், விஞ்ஞானம் ஒன்றுமறியாது தூந்திர பிரதேசத்தில் வாழ்ந்துவந்த மக்கள் இன்று இவற்றின் அருமைபெருமைகளை அறிந்துகொண்டு இவற்றை வளர்க்கின்றனர். ஏன், பனி நிறைந்த தூந்திர பிரதேசங்களிலும் விவசாயம் அல்லவா தோன்றி விட்டது?



உஸ்பெக் காலமிக் பெலுட்ஜிஸ்டேனியர்

உலகத்திலே முதன் முதலாக "தேசிய இனங்களின் பிரச்னை" சம்பந்தப்பட்ட எல்லா இனங்களுக்கும் நியாயமான முறையில் தீர்க்கப்பட்டது சோவியத் யூனியனிலே தான். இதை சோவியத் அரசாங்கத்தின் தலை சிறந்த சாதனைகளில் ஒன்று என்று கருத வேண்டும், மேலும் சோவியத் யூனியன் உலகுக்கே ஒரு பேருண்மையை எடுத்துக் காட்டுகிறது. மனித வர்க்கத்தில் ஹிட்லர் கூறியதுபோன்ற உயர்ந்த இனங்களும் தாழ்ந்த இனங்களும் கிடையாது. எல்லா இனங்களும் முதலாளித்துவ அடிமைத் தளையிலிருந்து மீட்கப்பட்டால் மிக உயர்ந்த நிலைக்கு வளர்ச்சியடைய முடியும்; சோஷலிச அமைப்பில் வாழக்கூடிய பல வேறு இன மக்கள் தங்களிடை பகைமை, பரஸ்பர நம்பிக்கையின்மை இவற்றை வளர்க்காது, ஒற்றுமை, பரஸ்பர உதவி இவற்றை வளர்ப்பதன் மூலமே முன்னேற்றம் காண முற்படுவர் என்பதுதான் அப் பேருண்மை.

★

## சீன ராஜகுமாரனின் பதில்

சீன தேசத்திலிருந்து ஒரு ராஜகுமாரன் அமெரிக்காவுக்குப் போயிருந்தானாம். அப்போது ஒரு பிரபுவின் மனைவி சீனத்து விருந்தாளியுடன் பேசிக் கொண்டிருக்கையில், அவள் 'உங்களுடைய சீன தேசத்தில் கலியாணம் ஆகும்வரை மணப்பெண் தனது புருஷன் முகத்தைப் பார்ப்பது வழக்கமில்லையாமே! மெய்தானா?' என்று கேட்டாள். அதற்கு ராஜகுமாரன்: 'உங்கள் தேசத்தில் சில பெண்கள் கலியாணமான பிறகு தனது புருஷன் முகத்தைப் பார்ப்பதில்லை யென்று கேள்விப்படுகிறேன் அது மெய்தானா?' என்று கேட்டான்.

—பாரதியார்

# காதல் கை கூடியும்.....!

## அரபு நாட்டுக் கதை

"இந்தக் கடிதத்தைக் கண்டதும் நீர் மிகவும் அழகிய அயல்நாட்டுப் பெண் அடிமைகள் மூன்று பேரை அனுப்பிவைக்கவேண்டும். என்னிடம் இருக்கும் அடிமைகள் எல்லோரைக் காட்டிலும் அவர்கள் கட்டழகிகளாக இருக்கவேண்டும். ஒவ்வொரு பெண்ணைப்பற்றியும் முழுவிவரங்களையும் விலையையும் தனித்தனியாக எழுதியும் அனுப்பவேண்டும்' என்று அப்துல்மாலிக் தன் சர்தாரான அல்ஹஜாஜுக்கு உத்திரவு அனுப்பினான். உத்திரவைக் கண்டதும், அல்ஹஜாஜ் அந்நகரத்தில் அடிமை வியாபாரம் செய்து வந்த நக்காசினை அழைத்து அவனிடம் காட்டினான். "இதோபார், நம் பாதுஷாவின் அந்தரங்க சேனாதிபதியான அப்துல் மாலிக்கின் உத்திரவு. உலகிலேயே ஒப்பற்ற அழகிகளான மூன்று அடிமைப் பெண்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும். நீ இந்த உத்திரவை உடனடியாக நிறைவேற்றுவாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு" என்று சொல்லி நக்காசினுக்குவிடைகொடுத்தனுப்பினான் அல்ஹஜாஜ்.

தன் வீட்டிற்கு வந்த நக்காசின் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. பாதுஷாவின் உத்திரவாயிற்றே. தன்னிடம் இருந்த வேலையாட்களை எல்லோரையும் அனுப்பி அழகே உருவான பெண்களைத் தேடிவர அனுப்பினான்.

இந்த அரபு நாட்டுக் கதை உலகப் பிரசித்திபெற்றது. கதையின் **முடிவு** நம்மை சிந்திக்கவைக்கிறது காதலரின் முடிவுக்குக் காரணம் யார்?...இந்தக் கதையைத் தமிழில் தருபவர் **ஸ்ரீ ஜி. நாகராஜன்.**

பல நாட்கள் அவர்கள் தேடினர் கடைசியில் அழகிய பெண்களைக் கண்டு பிடித்து விட்டனர். இதற்காக அவர்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல. கடைசியில் அவர்களை அழைத்து வந்து நக்காசினுடைய வீட்டில் விட்டுப் போய் விட்டார்கள்.

மூன்று பெண்களும் கைப்படாத தளிர்கள். இவர்களைவிட அழகிகள் அரபுநாடுகளிலேயே கிடைப்பது துர்லபம். அல்ஹஜாஜ இந்த அழகிகளைப் பார்த்துப் பரவசமடைந்தான். நக்காசினை மிகவும் புகழ்ந்தான். அழகிகளைத் தனித்தனியாகச் சோதித்தான். அவர்களுக்குத் தனித்தனியாக விலையையும் தோராயமாக நிர்ணயித்தான்.

இந்த வேலை முடிந்ததும் அல்ஹஜாஜ் பாதுஷாவின் நம்பிக்கையுள்ள சர்தாருக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதினான்.

"பாதுஷாவின் நம்பிக்கையுள்ள சர்தார்! அல்லா உங்களுடைய ஆயுளுக்கு முடிவு நாளே இல்லாமல் செய்யட்டும், உங்கள் கடிதம் கிடைத்தது. நான் இன்றைத்தினம் மூன்று ஒப்பற்ற அழகிகளை அனுப்பி வைத்திருக்கிறேன். யாரும் நுகராத அரும்புகள். தங்களுடைய சமூகத்துக்கு வருகிறார்கள். அவர்களுடைய விவரமும் விலையும் கீழே தருகிறேன்.

"எல்லாம் வல்ல அல்லா உங்களது ஆயுளை அதிகரிக்கட்டும். முதல் அடிமையின் கழுத்து நீளமாகவும், இடை சிறுத்தும் துடைகள் பருத்தும் இருக்கக் காண்பீர்கள். வண்டுகளைப் போலக் கருத்த கண்கள். ரோஜா மலர்போன்ற சிவந்த கன்னங்கள். தங்கத்தாலானசங்கிலியைப்

போன்ற மணிக்கட்டுகள். பருத்த, வழுவழுப்பான துடைகள். இவள் அழகுக்கு ஈடே கிடையாது. சர்தார், இவளுடைய விலை மூன்று ஆயிரம் மொகராக்கள்.

"இரண்டாவது அடிமைப் பெண் நல்ல பால் வெண்மை நிறம் உள்ளவள். உயரமும் அல்ல; குட்டையானவள் என்றும் சொல்லவும் முடியாது. உடலில் மருவு, மச்சம் என்ற மாசு எதுவும் கிடையாது. இவளது குரல் 'புல்புல்' பேசுவது போன்றிருக்கும். இவள் நோயாளியின் அருகில் பேசிக் கொண்டிருந்தால், நோயாளியும் குணமடைந்து விடுவான். இவளது மதிப்பு முப்பதாயிரம் மொகராக்கள்.

'மூன்ருவது அடிமைப் பெண்ணின் பார்வை விழுந்தாலே கள் குடித்தவனுக்கு உண்டாகும்போதை உண்டாகி விடும். கோப்பை நிறைய வழிந்தோடும்படி இருக்கும் மது போன்று பூரண வாலிபத்துடன் திகழ்கிருள். மது நிறைந்த பாத்திரத்தை பார்த்து விட்டால், மதுபானம் செய்கிற வழக்கமுள்ள யாரால் தான் சும்மா இருக்க முடியும்? இவள் நடப்பதைப் பார்த்தால் யாரோ ஒரு ராணி நடப்பதாகத் தான் தோற்றமளிக்கிறது சர்தார். இவளது மதிப்பு எண்பது ஆயிரம் மொகராக்கள்......';

அல்ஹஜாஜ் இவ்வாறு கடிதம் எழுதி விட்டு, நக்காசினை அழைத்து சொன்னன். "நீயே இந்த மூன்று அழகிகளையும் அழைத்துச் சென்று பாதுஷாவின் நம்பிக்கையுள்ள சர்தாரிடம் சேர்த்து வா."

நக்காசின் சொன்னன்: "அல்லா உங்களைச் சந்தோஷத்துடன் வைக்கட்டும். நான் வயதானவன். நீண்ட தூரம் பிரயாணம் செய்ய முடியாதவனுகி விட்டேன். ஆனல் என் மகன் எனக்கு உதவி செய்கிருன். நீங்கள் உத்திரவிட்டால், என்மகனை எனக்கு உதவியாக அழைத்துச் செல்லுகிறேன். தனியாகச் சென்ருல்......"

அல்ஹஜாஜ் இதை ஆட்சேபிக்கவில்லை.

"சரி, உன் விருப்பப்படியே அழைத்துச் செல்"

உத்தரவு கிடைத்ததும் நக்காசின் மகன் பிரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தம் செய்தான். மூன்று அழகிகளையும், மற்றும் சில வேலையாட்களையும் அழைத்துக்கொண்டு பிரயாணமானுன். அல்ஹஜாஜ் தற்காப்புக்காகச் சில சிப்பாய்களையும் அனுப்பி வைத்தான்.

வழியில் களைப்பு உண்டாகும் இடங்களில் தங்கி இளைப்பாறி விட்டு அவர்கள் மறுபடியும் பிரயாணமாவார்கள்

ஒருநாள் இரவு. அவர்கள் ஒரு இடத்தில் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தார்கள். மூன்று அழகிகளும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்கள். நக்காசினுடைய மகன் தவிர மற்றவர் எல்லோரும் தூங்கிவிட்டார்கள்.

ஒரு பெரிய காற்று வீசவே ஓர் அழகியின் உடலினின்றும் துணி விலகி விட்டது. நிலவின் ஒளியில் அவளுடைய உருவமும், மதிமயக்கும் அழகும் நக்காசின் மகனுடைய கண்களை அவள் பக்கம் இழுத்தன. தன்னை இழந்து பரவசமானுன் நக்காசினது மகன்.

அந்த அழகியின் பெயர் மக்தும். அவளது மதிப்பு எண்பதாயிரம் மொகரா என்று முடிவாகியிருந்தது.

நக்காசின் மகன் நல்ல உடல் கட்டுடைய வாலிபன்; அழகானவன். சிப்பாய்களும், தோழர்களும் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதை அறிந்து அவன் மக்துமின் அருகேசென்ருன். "உயிருக் குயிரான மக்தும், உன் பார்வை என்மீது விழுந்ததும் அம்பு தைத்ததைப் போலத் துடிக்கிறேன். அழுது அழுது என் கண்கள் வீங்கி விட்டன. காதல் நோய் கண்டு இது போல் எண்ணற்ற வாலிபர்கள் நாசமடைந்திருக்கிருர்கள் என்பது தெரிந்தும் என்னுல் என்னைக் கட்டுப்படுத்த

முடியவில்லை. இன்றைக்கு நான்உன் மீது காதல் கொண்டு விட்டேன். மக்தும்! என் மனத்தை வாட்டும் நோயை இனியும் நான் உன்னிடம் சொல்லாமல் எப்படி மறைப்பேன்? உன்னுல்தான் என் உயிரைக் காப் பாற்ற முடியும்..."

இது கேட்டதும் மக்தும் தன்னை இழந்தாள். மது அருந்தியதுபோன்ற போதை உண்டாக்கியது அவளுக் கும். புளகாங்கிதம் அடைந்தாள்.

"இது உண்மையானல் உங்கள் காதலை நான் அங்கீகரிக்கிறேன். உங் களைப் பார்த்ததிலிருந்து என் நிலை யும் அப்படித்தான் இருக்கிறது. நீங் கள் என் மனதைத் திருடிக் கொண் டீர்கள். இந்த அடிமை செய்த பாக் கியம் தான் நீங்கள் என்னை விரும்பு வது.

* * * *

இதே சமயம் ஒரு சிப்பாயின் தூக் கம் கலைந்து விட்டது. ஓர் அடிமைப் பெண்ணைக் காணவில்லை. அவன் கதி கலங்கினன். இங்கும் அங்கும் தேடினன். கடைசியில், காதலர்கள் இருவரும் கட்டி முத்தமிட்டுக்கொண் டிருந்ததைப் பார்த்து விட்டான்.

வேலையாள் ஓடோடியும் வந்து அல்ஹஜாஜின் சிப்பாய்களை எழுப்பி னன். சிப்பாய்களை அழைத்து வந்து காண்பித்த போதும் அவர்கள் இரு வரும் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு, வேறு ஏதோ உல கத்தில் இருப்பது போலத் தங்களை மறந்திருந்தனர். சிப்பாய்கள் உட னே நக்காசின் மகனை கயிறுகளா லும் இரும்புச் சங்கிலிகளாலும் பிணைத்து விட்டார்கள்.

காலையில் அவர்கள் ஒரு வாலிப னைக் கைதியாக அப்துல் மாலிக்கின் முன்பு ஆஜர் செய்தார்கள். மூன்று அழகிகளையும் அவர்கள் மாலிக்கின் முன்பு அழைத்து வந்து விட்டு, அல் ஹஜாஜ் கொடுத்த கடிதத்தையும் கொடுத்தார்கள்.

அப்துல் மாலிக் மூன்று அழகிகளை யும் பார்த்தான். மறுபடியும் அவர் களைப் பார்த்தான். கடிதத்தில் எழுதி யிருப்பது போல இருவர் அதேவனப் புடன் காணப்பட்டார்கள். ஆனல் மூன்ருவது அழகியிடம் அந்த வனப் பும், அழகும் காணப்படவில்லை. அவளிடம் ஏதோ வாட்டம் காணப் பட்டது. அல்ஹஜாஜ் கடிதத்தில் எழுதியது போன்றிருக்க வில்லை. அவளுடைய முகம்வெளுத்திருந்தது. அப்துல் மாலிக் சிப்பாய்களிடம் கேட்டான்: "இந்த அடிமைக்கு என்ன கஷ்டம்? கடிதத்தில் எழுதி யிருப்பது போல் இவள் அழகாக இல்லையே! இவளுக்கு என்ன கவலை? உருகிப்போய்க் கொண்டிருப்பதாகக் காணப் படுகிருளே! உடம்புக்கு என்ன?"

அவர்கள் பதில் சொன்னுர்கள்: "பாதுஷாவின் நம்பிக்கையைப் பெற்ற தலைவ! நாங்கள் காரணம் கூறமுடியும். ஆனல் அது உங்களு டைய பெருமைக்கு மாசுஉண்டாக்கி விடுமோ என்று அஞ்சுகிருேம். நீங் கள் சினம் கொண்டு எங்களைத் தண் டித்து விட்டால்...எங்களுக்கு உயிர் பிச்சை கொடுத்தால்......மன்னிக் கவும், சர்தார்."

"நீங்கள் உண்மையைக் கூறினல் உங்களுக்கு ஒரு தண்டனையும் கிடை யாது. பொய் சொன்னல் என்னு டைய கோபம் பொல்லாதது. உங் கள் தலையைச் சீவி விடுவேன்."

அப்துல் மாலிக் அபயம் அளித் தான். அவர்கள் நக்காசின் மகனை அவன் எதிரில் ஆஜர் செய்தார்கள். நக்காசினது மகன் பயத்தால் நடுங் கிப்போனன். இனி தன் உயிர் தங் காது என்று முடிவு செய்துவிட் டான். "சர்தார், அல்லா உங்களை அதிக நாள் வாழும்படி செய்யட்டும். நான் மண்ணில் புதைந்து விட்டிருக் கிறேன். என்னை வெளியேற்ற உதவி செய்யுங்கள், என்கழுத்துக்கு நானே சுருக்கிட்டுக் கொண்டு விட்டேன்.

அபயமளியுங்கள்'' இவ்விதம் நக்காசின் மகன் கதறினன்.

"நான் என்னுடைய குற்றத்தை ஒப்புக் கொள்கிறேன். எனக்கு நீங்கள் மரண தண்டனை விதித்தாலும் அது நான் செய்த பெரிய குற்றத்திற்கு ஏற்றதாக முடியாது!

"என்னை மன்னியுங்கள் என்று நான் எந்த வாயால் கேட்பேன். நீங்கள் என்னை மன்னித்துவிட்டால் அது உங்களுடைய பெருந்தன்மையாலும், தாராள மனசாலுமே ஆகும்...''

இதை கேட்ட அப்துல் மாலிக் சொன்னன் "வாலிபனே! உன் மனதில் இப்படிப்பட்ட எண்ணம் உதிக்கக் காரணம் என்ன? நீ எங்களை அலட்சியம் செய்தாயா? அல்லது அந்த யுவதியை உண்மையில் நீ காதலிக்கிருயா? உண்மையைக் கூறினல் நன்மையுண்டு!''

குற்றவாளியான காதலன் கூறினன். "சுல்தானின் நம்பிக்கையைப் பெற்ற பாக்கியவானே! நான் சொல்லுவதெல்லாம் உண்மையே நான் அந்த அழகியைக் காதலித்தேன். உயிரைவிட அவள் மேலானவள். ஐயா, என் குற்றத்தை மன்னியுங்கள்.''

சுல்தானின் சேனதிபதி நியாயவான். ஆகவே அவன் கூறினன்' "நீ சொல்லுவது உண்மையானல் இவள் இன்று முதல் உன்னைச் சேர்ந்தவள். இவளுக்காக நான் செய்த செலவைப் பற்றிக் கவலையில்லை. இவளுக்காக நான் தயார் செய்த பட்டாடைகளையும், நகைகளையும் இன்ப வாழ்விற்கான பொருள்களையும் நான் உனக்கு அளிக்கிறேன் போ. இவளுடன் சேர்ந்து வாழ்வை இன்பமாக நடத்து. அல்லாவின் விருப்பம் அதுவானல் நீ அவன் ஆசியுடன் புது வாழ்க்கையைத் துவக்கு. காதல் என்பது மனிதனுக்கு அல்லா அருளிய வரம். மனித வாழ்வு இன்பகரமானதாக இருக்கக் காதல் முக்கியமானது...''

அப்துல்மாலிக் இப்படிப்பட்ட தீர்ப்புகூறுவார் என்று அவனுடைய சிப்பாய்கள் கூட எதிர்ப்பார்க்கவில்லை. இதைக் கேட்டதும் அவர்கள் வியப்படைந்தனர். நக்காசின் மகனை அவர்கள் கட்டவிழ்த்து, வணங்கி விட்டுச் சென்றனர். உடனே அப்துல்மாலிக் புரோகிதரை வரவழைத்தான். அழகி மக்துனுக்கும், நக்காசின் மகனுக்கும் 'காதல் திருமணம்' மிகவும் ஆடம்பரமாக தன் முன்னிலையில் நடத்திவைத்தான். வரதட்சிணையாக எண்பதாயிரம் மொகராக்களும், நிறைய ரத்தின வைடூரியங்களும் நகைகளும் கொடுத்தான்.

நக்காசின் மகனுடைய சந்தோசத்துக்கு அளவு கூற முடியுமா? தன் ஆசைக் காதலியைத் தன்னேடு அழைத்துக் கொண்டு உடனே புறப்பட்டு விட்டான். முதல் நாள் யாத்திரை முடிந்தது. மறுதினம் இவர்கள் ஒருசாலையில் கூடாரம் அடித்துத் தங்கினர்கள்.

காலையில் எழுந்ததும் நக்காசின் மகனது சிப்பாய்கள் திடுக்கிட்டனர். அவர்கள் மீது இடி விழுந்து விட்டதாகவே கருதினர்கள். 'ஏன் இவர்கள் இன்னும் எழுந்து வெளிவரவில்லை? இவன் தன் காதலியுடன் தனியாக ஒரு கூடாரத்தில் உறங்கினனே!'

அவர்கள் அங்கே சென்று சத்தம் போட்டுக் கூப்பிட்டார்கள். உள்ளே இருந்து பதில் வரவில்லை. அப்போது அவர்களுக்குக் கவலை அதிகரித்தது. கலங்கினர்கள். என்ன செய்வது என்று தெரியவில்லை. கொஞ்சம் தயக்கத்துடன் அவர்கள் அந்தக் கூடாரத்தின் துணியைக் கிழித்தார்கள். அழகி மக்துமும், அவள் காதலனும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவிக் கொண்டு படுத்திருந்தார்கள். பார்த்த போது அவர்கள் இறந்து போயிருந்தது தெரிந்தது.

அப்துல் மார்லிக்கிடம் சிப்பாய்கள் ஓடிச்சென்று இதைத் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் அவனுக்கு ஒரே வியப்பாக இருந்தது. ★

# காவடிச் சிந்து

மு. சண்முகம் பிள்ளை

தமிழறிஞர்கள் இடைக்காலத்தில் செய்த பிரபந்தங்களைத் தொண்ணூற்றாறு வகையாக முன்பு பாகுபாடு செய்துள்ளனர். ஆனால், வரவரப் புலவர்கள் பற்பல புதிய முறைகளில், புதுப் புதுப் பொருள்களைத் தங்கள் கவிதைக்குரிய பொருளாகக்கொண்டு நூல்கள் செய்து வந்துள்ளனர். இவ்வகையான புதுமைக் கவிதை இலக்கியங்களுள் ஒன்று சிந்து எனப்படும் பிரபந்தம்.

'சிந்து' என்பது ஒருவகைப் பாடல் வகை; இசையுடன் கலந்து பாடுதற்குத் தக்க முறையில் அமைந்தது. பல்லவி, அநுபல்லவி, மூன்று கண்ணிகள் அடங்கிய சரணம் ஆக ஐந்து உறுப்புக்களைக் கொண்டு சிந்துப் பாடல்கள் பாடப் பெறும் என்பர். இவற்றுள் பல்லவியும், அநுபல்லவியும் இன்றிச் சரணங்களுக்குரிய கண்ணிகளை மட்டும் பெற்று வரும் பாடல்களும் சிந்து என்றே பெயர் பெற்றுள்ளன. இதில் பலவகையான இசையமைதிகளும் சந்தங்களும் கலந்துவரும். ஆதலால், சிந்துப் பாடல்களைப் பண்ணுடைக் கவிதை என்று சொல்லலாம். இக் கவிதைகளினாலான இலக்கியமும் 'சிந்து' என்றே பெயர் பெறும். 'காவடிச் சிந்து நூல்' கண்ணிகளால் அமைந்த சிந்துப் பிரபந்தமாகும்.

தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்குக் காரணகர்த்தாக்களாக விளங்கியவர்களில் ஒருவர் அண்ணாமலை ரெட்டியார். அவருடைய வாக்கு வளத்தையும், காதல் கற்பனைகளையும், சந்தப் பொலிவையும் அனுபவிக்க இந்தக் கட்டுரை உதவுகிறது.

சிந்துப் பாடல்கள் பஜனைப்பாடல்கள் போன்று பலரும் கூடிப் பாடுவதற்குத் தக்க இசையமைதி பொருந்தியன, 'கும்மிப் பாடல்' 'வழி நடைப் பதம்' என்னும் பாடல்களை ஒத்துள்ளன இச் சிந்துப் பாடல்களும். சிந்து நூல்களில் நொண்டிச்சிந்து, காவடிச் சிந்து எனப் பலவகைகள் உள்ளன. இவற்றுள் காவடிச்சிந்து நூல் வகையைக் குறித்து மட்டும் இப்பொழுது பார்க்கலாம்.

முருகக் கடவுளிடம் பக்தி செலுத்தும் அன்பர்கள் அப்பெருமானுக்குப் பலவகையாகப் பிரார்த்தனை செய்து கொள்வது முண்டு. காவடி எடுத்தல் பக்தர்கள் செய்துவரும் பிரார்த்தனைகளில் மிக முக்கியமானது. திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, திருத்தணிகை முதலிய நகரங்களிலுள்ள முருகப் பெருமான் கோவில்களில், பிரார்த்தனைக்காரர்கள் காவடி எடுத்துச் செல்வதை இப்பொழுதும் காணலாம். காவடி எடுத்துச் செல்லும் போது, காவடி தூக்கிச் செல்பவரைச் சூழ்ந்து பலர் கூடவே இசைக் கருவிகளை ஒலித்தும், இசையுடன் உற்சாகமாகப் பாடியும் செல்லுவர். இங்ஙனம் காவடி எடுத்துச் செல்லும் போது பாடப்படுவதுபற்றி 'காவடிச் சிந்து' என்று வழங்கலாயினர்.

இக்காவடிச் சிந்து நூல் வகையை முதன் முதல் பாடியவர் அண்ணாமலை ரெட்டியார் என்று சொல்லலாம். இவர் திருநெல்வேலி ஜில்லா சங்கரநயினார் கோயில் தாலூகாவைச் சேர்ந்த சென்னிகுளம் என்ற ஊரில் கி. பி. 19–ம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் பிறந்தார்.

'சென்னிகுளநகர் வாசன் தமிழ் தேறும் அண்ணாமலை தாசன்'

என்று காவடிச்சிந்தில் இக்கவிஞரே தமது ஊர்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தமிழறிஞர் பலரும் இவ்வூர்ப் பெயரையும் கூட்டி, சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் என்றே இவரைக் குறிப்பிடுவது வழக்கம்,

மிக்க இளம் பருவத்திலேயே தமது தாய் மொழியிடம் இவருக்கு அளவிட முடியாத பக்தி உண்டு. தமிழில் சிறந்த கல்வி பெறுவதற்குத் தக்க நல்லாசிரியரை இவர் தேடினர். அக்காலத்தில் திருநெல்வேலி ஜில்லா சேற்றூர் சமஸ்தானத்தில் இராமசாமிக்கவிராயர் என்பவர் சிறந்த புலவராக இருந்தார். ரெட்டியார் கவிராயரை அடுத்துத் தமிழ்க் கல்வியை முறையாகப் பயின்றார். தமிழில் நல்ல தேர்ச்சியும் பெற்றார். இளமையிலேயே வளமுறக் கவி பாடும் ஆற்றலும் இவருக்கு உண்டாயிற்று. எனவே, இவரும் கவிதை உலகில் சிறந்த இடத்தைச் சீக்கிரமே பெற்றுவிட்டார். அறிஞர் பலரும் இவரது கவிதைகளைக்கேட்டு மகிழ்ந்து கொண்டாடினர்.

திருநெல்வேலிச் சீமையில் அக்காலத்து விளங்கிய ஜமீன் சமஸ்தானாதிபதிகளெல்லாம் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தனர். ஒவ்வொரு சமஸ்தானங்களிலும் தமிழறிஞர்களும் கவிஞர்களுமாகப் பலர் இருந்தனர்; அங்கே ஊற்றுமலை ஜமீனில் இருதாலய மருதப்பத் தேவர் என்பவர் அப்பொழுது புகழுடன் விளங்கினர். தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதில் இவர் முன்னணியில் நின்றார். இவருடைய சமஸ்தான வித்வானாக அண்ணாமலை ரெட்டியார் இடம் பெற்றார். இவரை அண்ணாமலைக் கவிராயர் என்றே பலரும் அழைத்து வந்தனர்.

தென் தமிழ் நாட்டில் அண்ணாமலை ரெட்டியார் மிகவும் புகழ் படைத்து விளங்கினர். அங்கே இவரைக் கொண்டாடாத வித்வான்களும் ஜமீன்தார்களும் இல்லை என்றே சொல்லலாம். திருநெல்வேலிச் சீமையில் இவர் காலத்தில் புகழுடன் விளங்கிய புலவர்கள் பலர். இவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள் திருநெல்வேலி நெல்லையப்பக் கவிராயர், வன்னியப்ப பிள்ளை, அழகிய சொக்கநாதபிள்ளை முதலியோர்களாவர். இவர்களும் அண்ணாமலை ரெட்டியாரிடம் மிகவும் மதிப்பு வைத்துப் பாராட்டினர்.

அக்காலத்தில் தஞ்சை ஜில்லாவிலுள்ள திருவாவடுதுறை மடத்தார் கல்வியாளர்களை ஆதரித்துப் பாராட்டுவதில் மிக முன்னணியில் நின்றவர்களாவர். அப்பொழுது அங்கே பண்டார சந்நிதிகளாக விளங்கியிருந்தவர் மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிகர். இவர் அண்ணாமலை ரெட்டியாரிடம் மிக்க அன்பும் மதிப்பும் கொண்டவர். ஒரு சமயம் ரெட்டியார் ஸ்ரீ சுப்ரமணிய தேசிகரோடு அளவளாவிக் கொண்டிருந்தார். அப்பொழுது அண்ணாமலை ரெட்டியார் தேசிகர்மேல் சில பாடல்கள் பாடினர். கல்வியில் வல்ல தேசிகருக்கும் அதில் ஒரு பாடற் பகுதிக்குப் பொருள் விளங்கவில்லை. அச்சமயம் அவரது குறிப்பறிந்து ரெட்டியார், பாட்டின் பொருளை விளக்கிக் கூறினராம். அப்போது மிக மகிழ்ச்சியடைந்த தேசிகர், இவரது கல்விப் புலமையை மிக வியந்து பாராட்டி 'நீர் ஜாதியிலும் ரெட்டி; புத்தியிலும் இரட்டி' என்று சொல்லிக் கொண்டாடினராம்.

இங்ஙனமாக அக்காலத்தில் பலராலும் கொண்டாடப் பெற்ற இவர் ஊற்றுமலை ஜமீன்தாரின் அவையை அலங்கரித்து வாழ்ந்திருந்தார். இவர் அக்காலத்துப் பாடிய பாடல்கள் பலவற்றை ஊற்றுமலைத் தனிப் பாடல் திரட்டு என்ற நூலில் காணலாம். இவற்றில் இவர் இருதாலய மருதப்பத் தேவர்க்கும், சுப்பிரமணிய தேசிகருக்கும் எழுதிய சீட்டுக் கவிகளும் காணப்படுகின்றன.

சீட்டுக் கவிப் பாடல்களில் தம்மைப் புரந்த ஜமீன்தாரின் புகழையும், தமக்கு வேண்டும் உதவிகளையும் கவிஞர் குறிப்பிட்டிருக்கிறார். இவரால் இவர் குடும்பத்திற்கு வேண்டும் பொருளுதவிகள் செய்து வந்தவர் மேற்கூறிய ஜமீன்தாரே யாவர் என்று தெரியவருகிறது. இக்கவிஞர் அதிக வயது வாழ்ந்து கவிதைகள் செய்யும்பேறு தமிழ்நாடு பெறவில்லை. மிக இள வயதிலேயே, அதாவது தமது முப்பதாவது வயது முடிவதற்குள்ளாகவே கி. பி. 1891ல் காலமாகிவிட்டார், இதனால் ஒரு சிறந்த கவிஞரது பெருமை முழுதும் நமக்குத் தெரிய இடமில்லாமற் போய் விட்டது.

ஒரு சமயம் ஊற்றுமலை ஜமீன்தார் கழுகுமலைக்குக் காவடி எடுக்கப் பிரார்த்தனை செய்திருந்தார். கழுகுமலை திருநெல்வேலி ஜில்லாவிலே முருகப்பெருமான் கோயில் கொண்டுள்ள புகழ்பெற்ற ஊர்களில் ஒன்று. காவடி எடுத்துச் செல்லுவோர் கால் நடையாகவே செல்லுவது வழக்கம். ஜமீன்தாரோடுகூட அண்ணாமலை ரெட்டியாரும் சென்றார். அப்போது வழி வருத்தம் தோன்றாமலிருக்கும் பொருட்டு இக் காவடிச் சிந்து பாடல்களை ரெட்டியார் பாடிச் சென்றாராம். இப்பாடல்களை எல்லோரும் பாடிக் குதூகலமாகச் செல்லவே, அவர்களுக்கு வழி நடை வருத்தம் சிறிதுகூடத் தோன்றவில்லை. படிப்பதற்கும் கேட்பதற்கும் அத்தனை இனிமையாக அமைந்தன இவரது காவடிச் சிந்துப் பாடல்கள்.

இந்நூலிலுள்ள சிந்துப்பாடல்களில் இப்போது கிடைப்பன இருபத்திரண்டே தான்.*

விநாயகர்துதியோடுநூல்தொடங்குகின்றது. இந்நூற்பாடல்களெல்லாம் முருகப் பெருமான் மேல் பாடிய அன்புப்பாடல்கள். இவற்றில் கழுகுமலைநகர், கழுகுமலை வளங்களையும் முருகப் பெருமானது கோயில் குளங்களின் அழகுகளையும் நான்கு பாடல்கள் தெரிவிக்கின்றன. மற்றப் பாடல்களெல்லாம் முருகனை நாயகனாகக் கொண்டு ஒரு நாயகி தனது காதலை வெளியிடும் முறையில் அமைந்துள்ளன.

முதலில் கழுகுமலை நகர்வளம் சொன்ன கவிதையைப் பார்ப்போம். கழுகுமலை நகரம் பல உயர்ந்த மாட மாளிகைகள் நிறைந்துள்ளதாம். அம்மாடங்களில் எல்லாம் கொடிகள் கட்டியிருக்கிறார்களாம். இக்கொடிகள் சூரிய மண்டலம் வரையிலும் எட்டிவிட்டது என்று கவிஞர் கற்பனை செய்கிறார். அத்தனை உயரமுடைய மாளிகைகள் அங்கு உள்ளன என்கிறார். அவ்வூர் வீதிகளில் எல்லாம் நான்மறைகளை அந்தணர் ஓதுகின்றார்களாம். அதைக் கேட்டுச் சோலைகளிலுள்ள கிளி, பூவை என்னும் பறவைகளும் அவ்வேதத்தின் ஓசையைச் செய்கின்றனவாம். கவிஞரின் வாக்கு பின்வருமாறு;

வெள்ளி மலை யொத்த பல மேடை முடி
 மீதினிலே கட்டுகொடி யாடை அந்த
வெய்யவன் நடத்திவரு துய்ய விரதப்
 பரியும்
 விலகும் படியிலகும்.
வீதிதொரு மாதி மறை வேதம் சிவ
 வேதியர்க ளோது சாமகீதம் அதை
மின்னுமலர்க் காவதனிற் றுன்னுமடப்
 பூவையுடன்
 விள்ளும் கிள்ளைப் புள்ளும்.

அவ்வூரின் கடைத்தெரு முதலியன எவ்வாறு விளங்குகின்றன தெரியுமா?

---

*இவற்றோடு மேலும் இரண்டு சிந்துகள்புதிதாக ஏட்டுப் பிரதிகளிலிருந்து கிடைத்துள்ளதாக ஸ்ரீ கு. அழகிரிசாமி அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் தயார் செய்து வைத்திருக்கும் சிந்து நூல் இன்னும் வெளிவரவில்லை. சமீபத்தில் சக்தி வெளியீடாக அவரது பதிப்பு வெளிவரும் என்று தெரிகிறது.

கத்து கட லொத்தகடை வீதி முன்பு
கட்டு தரளப் பந்தலின் சோதி எங்கும்
காட்டுவதா லிரண்டு கோட்டு மத யானை யிற்பல்
களிறும் நிறம் வெளிறும்.
முத்தமிழ் சேர் வித்வ ஜனக் கூட்டம் கலை
முற்றிலு முணர்ந்திடு கொண்டாட்டம் நெஞ்சின்
முன்னுகின்ற போதுதோறுந் தென்மலையில் மேவுகுறு
முனிக்கும் அச்சம் செனிக்கும்.

கடை வீதிகளில் கடலொலிபோல் எப்பொழுதும் பொருள்களைக் கொள்வோர் கொடுப்போர்களின் ஓசைகள் நிரம்பி யிருக்கின்றன. கடைகளின் முன்பு முத்துப் பந்தல்கள் இடப்பட்டுள்ளன. அவ்வூரில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழிலும் வல்ல வித்வான்கள் கூட்டங் கூட்டமாக இருக்கிறார்களாம். இவர்கள் தமிழ் வளர்த்த அகத்தியரிலும் மிகுந்த புலமை யுடையவர்களாம்.

இனிக் கழுகு மலையின் அழகு பற்றிக் கூறிய செய்யுளில் ஒரு காட்சி. கழுகு மலையிலுள்ள சோலைகளிலெல்லாம் வண்டுகள் தேனை உண்டு, பெடைகளோடு கூடி இசையொலி செய்கின்றன. கடல் நீரை உண்டு மேலெழுந்த மேகங்கள் அந்த மலையின் சிகரங்களை யெல்லாம் மூடியிருக்கின்றன. அதைக் கண்ட மயிற் கூட்டங்கள் தோகை விரித்து ஆடுகின்றன.

முசு வண்டு வாசமண்டு காவில் மொண்டு தேனை உண்டு
மோகன முகாரி ராகம் பாடுமே மைய
லாகவே பேடை யுடனே கூடுமே அலை
மோது வாரிதி நீரைவாரி விண்மீதுலாவிய சீதளாகர
முகில்பெருஞ் சிகரமுற்றும் மூடுமே கண்டு
மயிலினஞ் சிறகை விரித்தாடுமே.

என்பது கவிஞன் காட்டும் அபூர்வச் சொற் சித்திரம்.

இவ்வாறு கண்ணுக்கினிய காட்சிகள் மிகுந்த மலையிலே முருகப் பெருமானது கோயில் பேரழகுடன் திகழ்கின்றது. அங்கே பக்தர்கள் அருணகிரி நாதரது திருப்புகழைப் பாடுகின்றார்களாம். அவ்வோசை தேவலோகத்திலுள்ள தேவர்களுடைய செவிக்கும் எட்டுகின்றதாம். அன்றியும் பக்தர்கள் காவடியுடன் வந்து கருணை முருகனைப் போற்றித் துதிக்கிறார்களாம்.

அருணகிரி நாவிற் பழக்கம் தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம் பல
அடியார்கண மொழி போதினில் அமராவதி யிமையோர் செவி
அடைக்கும் அண்டம் உடைக்கும்.
கருணை முருகனைப் போற்றித் தங்கக்
காவடி தோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறிய மெழுகாய் வருபவரேவரும் இகமேகதி
காண்பார் இன்பம் பூண்பார்.

என்னும் இவ்வடிகள் பக்தியின் ஈடுபாட்டை இனிது விளக்குதல் காணலாம்.

இங்குக் கோயில் கொண்ட முருகப் பெருமானைத் துதித்துப் பல வகையாக இக்கவிஞர் பாடுகின்றார். பல்வகைச் சந்தங்களில் அமைந்த இப்பாடல்களைப் படிக்கும் போது மிக்க மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. அவற்றுள் சிற்சில பகுதிகளை அங்கொன்று இங்கொன்றாகப் பார்க்கலாம்.

செந்நில் மா நகரந் தனில் மேவிய
தேசி கனு முருகேசன் மயில்
வாசியி லேறுமுல் லாசன்

என்றும்,

செந்நில் மாநகர் வாழ் கந்த நாதனிரு
செய்ய பாத கஞ்சமே நமக்
குய்ய மேவு தஞ்சமே,

என்றும்,

அவுணப் பகையை முடித்தோனே புனிய
வானே கதி
யாருமே தருவாரு மிங்கிலே யாதலா
லருள் வாயினம் புரி
யாதே பண்ணும் தூதே.

என்றும்,

சந்தவரை வந்தகுக் நாதா பரை
யந்தரிம னேன்மணியா மாதா தந்த
சண்முகச டாட்சரவி நோதா
குழைக் காதா சூர் வாதாவ
சஞ்சரி வென் குஞ்சரி சமேதா

என்றும், பல படியாக இப்பாடல்கள் ஓசை நயம் வாய்ந்து விளங்குகின்றன. அகப் பொருள் துறையில் அமைந்த இந்தப் பாடல்கள் ஒப்பற்ற கற்சித்திரங்களாகக் காட்சி அளிக்கின்றன.

அண்ணாமலை ரெட்டியாரது காவடிச் சிந்துப் பாடல்கள் பண்டிதர், பாமரர் எல்லாரிடையிலும் சொற்ப காலத்திற்குள் பரவிவிட்டன. தமிழக முழுவதும் அத்தனை விரைவாகப்பரவிய பாடல் வேறெதுவும் இல்லை எனலாம். இவரது பாடல் முறையைப் பின்பற்றி வேறு பலரும், காவடிச் சிந்துப் பாடல்கள் பின்பு பாடியுள்ளனர். எனினும் காவடிச் சிந்திற்கு அண்ணாமலை ரெட்டியார் என்னும் புகழை, பெற்றுவிட்டார். இவரது சிந்துப் பாடல்கள் பாடப்பாட இன்பம் மிகுவனவாகும். இம்மாதிரியான பண்ணுடைக் கவிதைகளை நாம் என்றும் மறவாது போற்றுதல் மிகவும் அவசிய மாகும்.

★

## வீடு காலியில்லை

'நொபோரு கொபயாசி' ஒரு ஜப்பானிய அனுதை. வீடு வாசல் கிடையாது அவனுக்கு. கடுங் குளிர்காலமோ வெகு விரைவில் வர இருக்கிறது. தெருத் திண்ணையிலோ, நடைபாதையிலோ இரவைக் கழிப்பது என்பது நடவாத காரியம். ஆகவே அவன் சிறைக்குச் சென்று விடுவதென்று தீர்மானித்துவிட்டான், அங்கே தான் குளிருக்கு அடக்கமாக இருக்கலாம். வேளா வேளைக்கு உணவும் கிடைக்கும். ஜெயிலுக்குப் போக வழிமுறைகளை அவன் ஆராய்ந்தான்.

'இக்கே புக்ரோ' என்ற நகரத்தில் இருந்த டீ கடைக்குச் சென்றான். வயிறு புடைக்கச் சாப்பிட்டான். பிறகு தன்னிடம் காசில்லை என்று டீ கடைக்காரனிடம் தெரிவித்தான். உடனே அவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றார்கள்.

போலீசார் கடுமையாக எச்சரித்து விட்டுவிட்டார்கள்,

அடுத்தபடியாக ஒரு புகையிலைக் கடையில் இரண்டு பாக்கட் புகையிலையைத் திருடினன். மீண்டும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். அவன் யோகம் இம்முறையும் விடுதலை செய்யப்பட்டு விட்டான். அந்தப் புகையிலை வியாபாரி புகையிலைப் பாக்கட்டை அவனுக்கு இனமாகவே கொடுத்து விடுவதாகச் சொல்லிவிட்டான்,

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. கடைசி முயற்சியாக நேரடியாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கே சென்றான். தன்னைச் சிறையில் போடவேண்டும என்று போலீசாரைக் கேட்டுப் பார்த்தான். மன்றாடினன்.

பலன் பூஜ்யம் தான்' போலீசார் முடியாது என்று கூறிவிட்டனர். விரக்தியடைந்து இரவினூடே நடந்து சென்றான். மேற்கொண்டு அவனிடமிருந்து தகவல் ஏதுமில்லை.

—ஜப்பான் நியூஸ்

விவசாயம்

# புறணி வகைத் தாவரங்களும் புது வாழ்வும்

**எஸ். சுந்தரம்**

> நமக்குத் தேவையான சில வெளிநாட்டுத் தாவரங்களை இந்நாட்டில் பயிர் செய்யும் முறைகளை விளக்குகிறது இந்தக் கட்டுரை.

ஒரு நாட்டின் வேளாண்மை விருத்தியடைய வேண்டுமானால் உள்நாட்டிலுள்ள தாவரங்களையே நம்பியிருக்க முடியாது. புறணி வகைத் தாவரங்களைத் தருவித்து பொருத்தமான பயிர் வகைகளை வளர்த்தல் அவசியமாகும். முன்னூறு வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவில் கோதுமையே கிடையாது. இன்று ஏனைய நாடுகளுக்கு ஏராளமாகக் கோதுமையை ஏற்றுமதி செய்யும் நாடு அமெரிக்காவே. அமெரிக்கர்கள் தங்கள் நாட்டிலுள்ள பயிர்களையே நம்பியிருந்தால் இன்று அமெரிக்காவில் சர்க்கரை, காபி, தேயிலை, சில பழ வகைகள் சில காய்கறி வகைகள் முதலியன அரிதாயிருக்கும். பதினேழாம் நூற்றாண்டில்தான் கிழக்கு நாடுகளிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளுக்கு கரும்பு கொண்டு வரப்பட்டு சாகுபடியாயிற்று. அதுவரையில் மேனாட்டினருக்கு கரும்புச் சர்க்கரை மருந்துக்குக்கூட கிடையாது. ஐரோப்பிய நாடுகளிலும் பிரிட்டனிலும் பதினாறாவது நூற்றாண்டு வரையில் உருளைக்கிழங்கைப் பற்றி அறிந்திருக்கவில்லை. இந்தியாவிற்கு உருளைக் கிழங்கு கொண்டுவரப்பட்டு சுமார் 200 வருடங்களே ஆயின. இன்று நம் நாட்டில் பயிராகும் உருளைக் கிழங்கு, மக்காச்சோளம் புகையிலை மிளகாய் தக்காளி போன்றவைகளும் இன்னும் கைத்தொழில்களுக்குப் பயன்படும் சில தாவர வகைகளும் அமெரிக்காவையே தாயகமாகக் கொண்டவை.

## புதிய பயிர் வகைகளைத் தருவித்தல்

ஒரு நாட்டிலுள்ள பயிர் வகைகளை மற்றொரு நாட்டிற்குத் தருவித்தல் அந்நாடுகளின் நாகரிக வளர்ச்சியைச் சார்ந்தது. புராதன மனிதன் சில செடி வகைகளைக் கவனத்துடன் பயிர் செய்ததால் அவைகளிலிருந்து புதிய வகைகள் பொறுக்கி எடுக்கவும் சாகுபடி செய்யவும் இயன்றது. பழைய உலகத்திலிருக்கும் தாவரங்கள் சுமார் 4000 வருடங்களாகப் பயிரிடப்பட்டு வருவதாகக் கருதுகிறார்கள் தாவர நிபுணர்கள். இந்த நூற்றாண்டில் போக்குவரவு முன்னேற்றம் அதிகமாக ஏற்பட்டதால் ஒரு நாட்டிலுள்ள பணப் பயிர் வகைகள் ஏனைய நாட்டிற்குப் பரவ முடிந்தது. இதன் விளைவாக ஒரு நாட்டில் சாதாரணமாகக் காணப்படும் பயிரின் வரலாற்றைக் கண்டுபிடிப்பது சிக்கலாகவே இருக்கிறது. ருஷ்யாவிலுள்ள தாவர நிபுணர்கள் தாவரங்களின் வரலாற்றைப் பற்றிய இருளை நீக்கி யிருக்கிறார்களென்றே சொல்ல வேண்டும். ரொட்டி செய்யும் கோதுமை பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிலுள்ள மலைகளில் தான் முதல் முதல் பயிரானதாகத் தெரிகிறது.

### பழைய செடிகளுக்குப் பதில் புதிய செடிகள்

புதிய பயிர்களைத்தான் முதன் முதலில் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குத் தருவித்தல் வழக்கம். அமெரிக்காவில் சோயாபீனும், இந்தியாவில் பெர்சீம் நிலக்கடலை முதலிய வகைகளும் விளைவித்தது அவைகளை அயல் நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பின்பே தான். நன்மதிப்புள்ள பல தாவர வகைகளை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற் இன்னும் கொண்டுவரவில்லை. தவிர, பல தாவர வகைகளிலிருந்து பயன்படும் வகைகளை இன்றும் கண்டு பிடிக்கவில்லையென்றே சொல்ல வேண்டும். தாவர அபிவிருத்தியாளர்கள் பழைய வகைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக புதிய வகைகளைப் பெறுதல் லாபமெனவே கருதுவார்கள். கோயம்புத்தூர் 281– வகைக் கரும்பு தென்னாப்பிரிக்காவில் பிரபலமாயிருக்கிறதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. புறணி வகைத் தாவரங்களை உள்நாட்டு தினுசுகளுடன் பயிர் செய்து இன விருத்தி செய்தலும் தாவர ஆராய்ச்சியாளர்களின் பணியாகும். புறணி வகைகளைத் துணைக்கொண்டு உள்நாட்டு வகைகளில் நோய் அணுகாத பொருக்கு வகைகளை அபிவிருத்தி செய்துள்ளார்கள். காட்டுச் செடி இனத்தைச் சேர்ந்த காட்டுச் செடிகளும் தாவர இனவிருத்திக்குத் துணை புரிகின்றன. எடுத்துக்காட்டாக, கோயம்புத்தூர் கரும்பு வகைகள் உலகப் பிரசித்தமானதற்குக் காரணம் ஒரு காட்டுச் செடியின் பணியேயாகும்.

அமெரிக்காவும், ருஷியாவும் தாவர இனவிருத்தித் துறையில் முன்னணியில் இருப்பதற்குக் காரணம் தக்க விஞ்ஞான ஸ்தாபனங்கள் தொண்டாற்றுவதாகும். ஆர்ஜின்தீனவும் ஆஸ்திரேலியாவும் இந்தத் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. உலக விவசாய இயக்கம் ஒன்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைச் சார்ந்தது. இந்த இயக்கம் பல நாடுகளிலுள்ள தாவர இனவிருத்திப் பிரச்னைகளைத் தீர்க்க உதவி புரிந்து வருகின்றது. இதற்கு தாவர அபிவிருத்தியாளர்கள் சங்கங்களுடைய ஆதரவுதேவையாகும்.

### இந்தியாவில்

இந்தியாவிலுள்ள மண் வகைகளும் வெப்ப தட்ப நிலைமைகளும் இந்நாட்டின் பழைமையை வலியுறுத்துகின்றன. நம் நாட்டிலுள்ள பல தாவர வகைகள் தொன்று தொட்டு காணப்படுகின்றன. கோதுமை, நெல், பயறு வகைகள். கடுகு, பருத்தி, எள்ளு முதலியன புராதனமான பயிர்களே. சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்தான் சீனாவிலிருந்து தேயிலை, சபோடா முதலியவைகள் இங்கு கொண்டு வரப்பட்டு, பயிர் செய்யப்பட்டு வருகின்றன. அரேபியாவிலிருந்து உருளைக் கிழங்கு, நிலக்கடலை, கொய்யா, பப்பாளி, சின்கோனா (கொயினா மரம்) முதலியவைகள் கொண்டு வரப்பட்டு பயிராகி வருகின்றன.

நீண்ட இழை கொண்ட அமெரிக்கன் பருத்தியும் பெர்சீம் என்ற எகிப்து தேசத்து அவரை இனப் பயிரும் இந்தியாவில் பிரபலமாயிருப்பது விவசாய நிபுணர்களின் சாதனையாகும். பூங்காவனங்களில் காணப்படும் ரம்மியமான பல பூச்செடிகள் தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், ஜாவா முதலிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டவை.

### ஒரு ஸ்தாபனம்

பண வசதி யில்லாததால் டில்லி அரசாங்கத்தார் புறணி வகைத் தாவர அபிவிருத்திக்காகப் பெரிய ஸ்தாபனம் ஒன்று அமைக்கவில்லை. ஆனால் இந்திய விவசாய ஆராய்ச்சி கழகத்தின் ஒரு பகுதி இவ்வேலையைச் செய்து வருகின்றது. இது வரையில் பயிர்கள், கிழங்குகள்,

காய்கறிகள், புற்கள், மாட்டுத் தீவனத்திற்கும் மண் பாதுகாப்புக்கும் ஏற்ற அவரை இனப் பயிர்கள், பசுந்தாள் உரப் பயிர்கள், மருந்துச் செடிகள் முதலியவைகளைச் சேர்ந்த சுமார் 3000 மாதிரிச் செடிகளும் மாதிரி வித்துக்களும் அயல் நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு இன விருத்தி வேலை நடந்துவருகின்றது.

## தாவர சாஸ்திரியின் பணி

நூதனமான செடிகளின் வித்துக்களோ அல்லது விதைக்கிழங்குகளோ அல்லது பதியங்களோ தருவிப்பது ஆராய்ச்சியாளர்களின் பணியாகும். வித்துக்களை முளைக்கப்போட்டு பரீட்சை செய்தல்வேண்டும். பரிசோதனை நிகழ்த்துவோர்கள் வித்துக்களைத் துளை செய்தோ வெட்டுப் போட்டோ அவைகள் தண்ணீரை கிரகித்து சீக்கிரம் முளைக்குமாறு செய்வதுண்டு. செடிகள் கிடைத்த பிறகு அவைகளை சிறு பாத்திகளில் வளர்த்து கைவசமுள்ள உள்நாட்டுப் பொறுக்கு வகைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் தாவர நிபுணரின் கடமையாகும். மகசூல், வித்துக்களின் நயம், நோயை சமாளித்தல் முதலிய பல்வேறு குணங்களை நிர்ணயம் செய்ய பல நூற்றுக் கணக்கான வகைச் செடிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் நேரிடும். ஆகையால் ஆராய்ச்சியாளரின் பணி மிகப் பெரிதென்பதை மறுக்க முடியாது. எனவே ஒன்றிரண்டு புதிய வகைச் செடிகளைப் பொறுக்கியெடுத்து விடுதல் ஒரு சாதனையே. ஆனால் புதிய பொறுக்கு வகைகளைப் புதிய நோய்களும் புதிய பூச்சிகளும் தாக்குதல் இயற்கையாதலால் புதிய செடி தினுசுகள் கண்டுபிடிப்பது கடினமானதுதான். அந்தந்த வட்டாரங்களுக்குப் பொருத்தமான தாவர வகைகளை நிர்ணயித்தல் தாவர சாஸ்திரியின் வேலைகளிலொன்றாகும். சாகுபடியாகும் பயிர்களின் மாதிரிகளும் காட்டுச் செடிகளின் மாதிரிகளும் ஆராய்ச்சிக் கழகங்களில் வைத்திருப்பதுண்டு.

சர்க்கரைவள்ளிக் கிழங்கு, காய்கறிவகைகள், காராமணி, பட்டாணி, தக்காளி முதலிய பயிர்களின் பொறுக்கு தினுசுகளை ஆராய்ச்சிக் கழகத்தினர் கண்டு பிடித்திருப்பது ஒரு பெரிய சாதனையாகும்.

## காய்கறி வகைகள்

சீக்கிரம் பலன் கொடுக்கக்கூடிய காய்கறி வகைகளையே காய்கறித் தோட்ட விவசாயிகளும், குடித்தனக்காரர்களும் விரும்புவது இயல்பு. மாரிக்காலக் காய்கறி தினுசுகள் மார்க்கெட்டுக்கு வருமுன் காராமணிக்கு கிராக்கி உண்டு. விவசாய ஆராய்ச்சியாளர்கள் பிலிப்பைன் தீவு ரகத்தைச் சேர்ந்த காராமணி தினுசு ஒன்றைப் பொறுக்கியெடுத்துள்ளார்கள். அந்தத் தினுசு டில்லி சூழ்நிலையில் 35 நாட்களில் பூ விடுகின்றது. அதை ஜூன் மாதம் மூன்றுவது வாரத்தில் விதைத்து 10 அங்குல நீளமுள்ள காராமணிக் காய்கள் பறிக்கின்றார்கள். அமெரிக்கப் பட்டாணி வகையொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'எர்லி பாட்ஜர்' என்று சொல்லப்படும் அந்த தினுசு 70 நாட்களில் காய்கள் விடுகின்றன. பட்டாணி தட்டான காலத்தில் அப்பட்டாணி வகை மக்களுக்குக் கிடைக்கின்றது.

ஆராய்ச்சியாளர்கள் சுமார் 200 அயல் நாட்டுத் தக்காளி தினுசுகளைப் பயிர் செய்து பரிசோதனைகள் நிகழ்த்தி, தக்க கோடை, மாரிக்கால தினுசுகளைப் பொறுக்கியெடுத்திருக்கிறார்கள். வெப்பத்தை சமாளிக்கும் பொறுக்கு தினுசுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## மாட்டுத் தீவனம்

கால் நடைகளின் தீவனம் நம் நாட்டில் தட்டுப்பாடாயிருக்கின்றது. மேய்ச்சல் தரைகளையும் தீவனப் பயிர்களின் குணங்களையும் விருத்தி செய்தல் இன்றியமையாதது. புற்கள், அவரை இனப் பயிர்கள் முதலியவைகள் கால் நடைகளின்

பராமரிப்புக்கு அவசியமானவை. ஆராய்ச்சிக் கழகத்தினர் சுமார் 100 புல் தினுசுகளைப் பற்றியும், 200 அவரை இனப் பயிர்களைப் பற்றியும் பரிசோதனைகள் நிகழ்த்தி, பொருத்தமான வகைகளைப் பொறுக்கியெடுத்திருக்கிறார்கள். கோயம்புத்தூரிலுள்ள சர்க்கார் தாவர நிபுணர்கள் இத்துறையில் அரிய சேவை செய்திருக்கிறார்கள். அதிக் பலன் கொடுக்கும் புறணி வகைப் புல் தினுசுகளும் தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்கும் புதிய புல் தினுசுகளும் கண்டு பிடித்திருக்கிறார்கள். கண்டுபிடிக்கப் பட்ட புல் வகைகள் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா தேசங்களையும் அவரை இனங்கள் சீனா, இலங்கை, அமெரிக்கா பிரேசில் முதலிய நாடுகளையும் சார்ந்தவை.

### மண் அரிப்புத் தடை

புல் வகைகளும் அவரை இனப் பயிர்களும் மண்ணை பாதுகாக்கவும் மண் அரிப்பைக் தடுக்கவும் பயன் படுகின்றன. காற்றாலும் மழையாலும் ஏற்படும் மண் அரிப்பு நம் நாட்டின் பெரிய பிரச்னையாகிவிட்டது. மண் கரைப்பால் விளைநிலங்கள் தரிசாவதுடன் மண் வளமும் கெட்டுவிடுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளில் மண் அரிப்புத் தடை செய்து பெரிய சாதனைகள் செய்திருக்கின்றார்கள். பல புறணி வகைப் புற்களை ஆராய்ச்சியாளர்கள் பொறுக்கியெடுத்து மண் அரிப்பைத் தடை செய்ய உதவி செய்கிறார்கள். இந்தப் புல் வகைகள் மாட்டுத் தீவனமாகவும் பயன்படுகின்றன.

சில அவரை இனப் பயிர்கள் மண்ணைப் பிடித்துக் கொள்வதால் மண் கரைப்பு ஏற்படுவதில்லை. சோயாபீன்ஸ், காராமணி, துவரை முதலியவைகளில் சில குறுகியகால தினுசுகள் பொறுக்கி யெடுத்திருக்கிறார்கள். இவைகளும் மண்ணை இறுக்கிப் பிடிக்கும் தன்மையுடையன. கானடா தேசத்து சூரிய காந்தி வகை ஒன்று இங்கு குறிப்பிடத் தக்கது. அட்வான்ஸ் ஹைபிரிட் என்பது உணவுக்குப் பயன் படும் எண்ணெய் கொடுக்கக்கூடிய வகை .இப்பயிரின் பெரிய கதிர்களிலிருந்து நிறைய வித்துக்கள் கிடைக்கின்றன. இவைகளில் 32 சதவிகிதம் எண்ணெய் உண்டு. மௌண்டன் மின்ட் என்னும் அமெரிக்காச் செடி தேனீ வளர்ப்பவர்களுக்குப் பயன்படுகின்றது. இச்செடி கோடைக் காலத்தில் ஏராளமான வெள்ளைப் பூக்களை விடுவதால் தேனீக்கள் ஏராளமாகத் தேன் சேகரிக்க இயலும். இதை வருடா வருடம் பயிர் செய்ய வேண்டியதில்லை. தோட்டங்களில் ஒரு தடவை பயிர் செய்தால் பல வருடங்கள் தட்டாது பூக்கள் விடும். ஆப்பிரிக்கா போன்ற தேசங்களிலிருந்து பல வர்ணச் செடிகளைத் தருவித்து நம் நாட்டில் வளர்த்து வருகிறார்கள் தாவர நிபுணர்கள்.

★

பிறருக்கு மனம் நோகும்படி நடப்பதைவிட வெட்கம் தரும்படி நடவாதிருப்பதே முதலில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடமாகும்.

—வேர்ட்ஸ் வொர்த்

ஒரு அரசாங்கத்தை ஸ்தாபிக்க ஆயிரம் வருஷங்கள்கூடப் போதாது. ஆனால் அந்த அரசாங்கம் மண்ணோடு மண்ணாக ஒரு மணி நேரம் போதும்.

—பைரன்

# புத்தகம்

**பஞ்சும் பசியும்** [ஆசிரியர் ரகுநாதன் 325 பக்கம் விலை ரூ. 3-8-0 ஸ்டார் பிரசுரம் த. பெ. 423. திருவல்லிக்கேணி, சென்னை-5.]

தமிழ் நாட்டு கிராமங்களிலும் நகரங்களிலுமுள்ள சாதாரண மக்களையே கதாபாத்திரங்களாகக் கொண்டு,நம் மக்களின் வாழ்க்கைப் பிரச்னைகளையும், அனுபவங்களையும் போராட்டங்களையும் பிரதிபலிக்கும் தமிழ் நாவல்கள் இல்லையே என ஏங்கியவர்கள் யாவருக்கும் திரு ரகுநாதனின் புதிய நாவல் அரியதொரு விருந்தாகும். "பஞ்சும் பசியும்" என்ற இந்நாவல் பல்லாயிரக்கணக்கான மக்களை பசிக்கும் பட்டினிச் சாவிற்கும் பலியிட்டுவரும் கைநெசவாளர் பிரச்னையை மையமாகக்கொண்டு உருவாகியுள்ளது.

குடிசைத் தொழில்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கே அவதரித்துள்ளோமெனக் கூறி வந்துள்ள காங்கிரஸ் தலைவர்களின் ஆட்சியில் நம் பிரதான குடிசைத் தொழிலான கைத்தறி நெசவுத் தொழில் என்றுமே கண்டிராத மிகக் கொடிய நெருக்கடியில் சிக்கி மடிந்துகொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான கைநெசவுத் தொழிலாளர் குடும்பங்கள் வேலையின்றி, வாழ வழியின்றி ஊர் ஊராகத் திரிந்து மடிந்துகொண்டிருக்கின்றன.

கைநெசவாளர்களின் சித்தரிக்க முடியாத, பயங்கரமான கொடுந்துயரங்களை இந்த நாவல் மிகவும் உருக்கமான முறையில் விளக்குகிறது. இந்தக் கதைச் சித்திரம் படிப்பவர் மனதைக் கவரும் சக்தி பெற்று விளங்குகிறது. நம் மக்களின் துன்ப துயரங்களையும் அனுபவங்களையும், இந்த அனுபவங்களின் வாயிலாக அவர்கள் பெற்று வரும் புத்தணர்வையும் வளர்ச்சியையும் ஸ்தூலமான முறையில் விவரிக்கிறது.

தாமிர பரணி நதியின் தலைப் பகுதியிலுள்ள அம்பாசமுத்திர கைநெசவாளர்களின் அனுபவத்தை, வளர்ச்சி வரலாற்றை ஆசிரியர் ரகுநாதன் இந்த நாவலில் சுருக்கமாகவும் அழகாகவும் விளங்க வைக்கிறார். சாதாரண கைத்தறி நெசவாளியான வடிவேலு முதலியாரின் முன்முயற்சியின் கீழ் அம்பை நெசவாளர்கள் ஒன்றுபட முற்படுகின்றனர், கிராம மக்களை நாசப் படுகுழியில் தள்ளிவரும் நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்குமார்க்கமென்னவென்பதைச் சிறிது சிறிதாக கற்றுணருகிறார்கள். தங்களூரில் ஆதிக்கம் புரியும் நிலப் பிரபுக்களையும் கள்ளமார்க்கெட்காரர்களையும் எதிர்த்து நின்று வெற்றி காணும் பாதையில் முன்னேறுகிறார்கள்.

அம்பையின் பெரிய முதலாளி என்று அழைக்கப்படும் லட்சாதிபதி தாதுலிங்க முதலியாரின் அட்டகாசத்தை எதிர்த்து சாதாரண மக்கள் மட்டுமின்றி அவருடைய மகன் சங்கரும், மகள் கமலாவுங் கூடக் கிளம்பிவிடுகிறார்கள். பண வெறி பிடித்த தங்கள் தகப்பனை உதறித் தள்ளிவிட்டு சங்கரும் கமலாவும் இறுதியில் கிராம மக்களுடன் ஒன்று கலந்துவிடுகிறார்கள்.

கல்லூரி படிப்பும் கமலாவின் நட்பையுமின்றி வேறொன்றையும்பற்றி

அறியாத, கவலைப்படாத மணி வாழ்க்கையின் சுழலில் அகப்பட்டுத் தத்தளித்து போதம் பெறுகிறான். வேலை கிடைக்காமல் திரிந்து இறுதியில் மதுரை மாநகரில் மக்களின் நல்வாழ்வுப் போராட்டம் பற்றிய உணர்வு பெறுகின்றான். மதுரையில் மில் தொழிலாளியாக இருந்து பழிவாங்கப்பட்டு கைநெசவாளர் சங்கச் செயலாளராக வளர்ச்சி பெற்ற ராஜா என்னும் இளைஞனிடமிருந்தும், மதுரை நெசவாளர்களின் போராட்டங்களிலிருந்தும் மணி புது அனுபவம் பெறுகிறான். நெசவாளர்களின் நம்பகமான ஊழியனாக மாறுகிறான். இறுதியில் தான் பிறந்து வளர்ந்த அம்பை வந்தடைகிறான். அங்கு கமலாவுடன் சேர்ந்து நெசவாளி மக்கள் குடும்பத்தில் ஒன்று கலந்துவிடுகிறான்.

மக்களின் வாழ்க்கையையும் அனுபவங்களையும் அவர்களுடைய அபிலாஷைகளையும் அடிப்படையாகக் கொண்டு யதார்த்த நிலைமையை பிரதிபலிக்கும் நாவலை நமக்களிக்கும் முயற்சியில் ஆசிரியர் ரகுநாதன் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருக்கிறார். அவருடைய முயற்சி தமிழ் நாவலின் சரிதத்தில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாவதற்கு உதவி புரியும் என்பதில் சந்தேகமில்லை.

திரு. ரகுநாதனின் புதிய நாவலை ஆர்வமுடன் வரவேற்பதுடன் கூடவே, அதனிடம் காணப்படும் சில குறைபாடுகள் பற்றி குறிப்பிடுவதும் அவசியமாகும். நெசவாளர்களின் சகிக்க முடியாத துயரங்களையும் வடிவேலு முதலியார் போன்ற சாதாரண நெசவாளிகளின் அன்றாட வாழ்க்கை பற்றியும் ஆசிரியர் நேரடியாக சித்தரித்துக் காட்டுவதற்குப் போதிய முயற்சி எடுக்கவில்லை. நெசவாளர்களின் இன்னல்கள் பெரும்பாலும் பத்திரிகை செய்திகளை கதாபாத்திரங்கள் ஒருவருக்கொருவர் படித்துக் காட்டுவதின் மூலமும், அச்செய்திகள் பற்றி பேசிக் கொள்வதின் மூலமுமே விவரிக்கப்படுகின்றன. வடிவேலு முதலியாரைப் பற்றி, அவர் குடும்ப வாழ்க்கை பற்றி, இன்னும் விளக்கமான சித்திரம் தீட்டியிருந்தால் இந்த நிலைமையைத் தவிர்த்திருக்கக்கூடும்.

செல்வந்தர் வீட்டுப் பிள்ளைகளான சங்கரையும் கமலாவையும் அவர்கள் வீட்டு வாழ்க்கையையும் விபரமாக சித்தரித்துக் காட்டிவிட்டு, நாவலின் பிரதான விஷயமான நெசவாளர் வாழ்க்கையைப் பற்றியும் அவர்கள் குடும்பங்கள் பற்றியும் வாசகர்களுக்கு நேரடியான சம்பவங்கள் வாயிலாக விளக்கத் தவறியிருப்பது முக்கிய குறைபாடாகத் தென்படுகிறது.

நெசவாளர்கள் உள்பட கிராம மக்கள் இன்று பசிக்கும் பட்டினிக்கும் வேலையில்லாக் கொடுமைக்கும் பலியாகி வருவதற்கு, மிகப் பெரும் பகுதி நிலங்களை தங்கள் ஏகபோக உடைமையாக வைத்துக் கொண்டுள்ள நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் ஒரு அடிப்படையான காரணமென்பதைத் தெளிவாக விளக்குவதற்கு ஆசிரியர் போதிய கவனம் செலுத்தவில்லை. விவசாயிகளுக்கு நிலம் இல்லாமல், விவசாயம் சீரழிந்து, சாதாரண மக்களின் வருமானமும் வாங்கும் சக்தியும் சரிந்து வீழ்ந்து வரும் வரையில், கை நெசவு போன்ற குடிசைத் தொழில்கள் நெருக்கடியிலிருந்து மீளமுடியாதென்னும் உண்மை வலியுறுத்தப்படவில்லை.

இது போன்ற சில குறைபாடுகளிருப்பினும், "பஞ்சும் பசியும்" என்னும் இந்த நாவல் தமிழன்பர்கள் அனைவராலும் வரவேற்கத்தக்கதொரு இலக்கிய சிருஷ்டியாகும். உயிர் துடிப்புள்ள தமிழ் நடையும் கலையழகுடன் புனையப்பட்டுள்ள கதாபாத்திரங்களையும் பெற்றிருக்கிறது. மக்களுடைய சக்தியை எவராலும் மாய்த்துவிட முடியாது, அது வெற்றியைப் பெற்றே தீருமென்னும் பேருண்மையை நிலைநாட்டுகிறது. ★

சக்தி

# கள்வனின் காதலி

## நாடக விமர்சனம்

திறமையான நடிப்பின் மூலம் ஒரு சாதாரணக் கதையைக் கூடக் காண்பவர்கள் ரஸிக்கும் வகையில் நாடகமாக நடத்திக் காட்ட முடியுமென்றால் அது ஒரு சாதனையே. இதற்குத் திறமை வேண்டும். சென்னை ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இந்தத் திறமையிருக்கிறது என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லலாம். 'கள்வனின் காதலி' போன்ற, கருத்தாழமோ வாழ்க்கையோடு எந்த விதமான தொடர்போ அற்ற ஒரு கதையை வைத்துக்கொண்டு ஒரு நாடகம் தயாரித்து, அந்த நாடகத்தைப் பொதுமக்கள் முன் நடத்திக் காட்டி கரகோஷம் வாங்குவதென்றால் அதற்குத் திறமைதானே வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமையன்று இந்த நாடகம் அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது. தொழில் நடிகர்களே பிரமிக்கும் வகையில் அதி உன்னதமாக மாணவர்கள் நடித்து எல்லோருடைய ஏகோபித்த பாராட்டுதல்களையும் பெற்றனர்.



அபிராமியாக நடித்த எஸ். கல்யாணி, சப்-இன்ஸ்பெக்டர் மனைவியாக நடித்த எஸ். லக்ஷ்மிகாந்தம், கல்யாணியாக நடித்த ஜி. ஜானகி, கதாநாயகன் முத்தையன் பாத்திரத்தில் வந்த ஆர். வெங்கடசாமி, பண்ணையார் பஞ்சநதம் பிள்ளையாக வந்த என். எம். முத்தையன், குரவன் சொக்கனை நடித்த டாக்டர் கிஷோர் அகம்மத், சப்-இன்ஸ்பெக்டர் பாகமேற்ற ஆர். ராமமூர்த்தி, சங்குப் பிள்ளையாக நடித்த டாக்டர் என். ராமலிங்கம் முதலியவர்கள் நடிப்பு உயர்தரமாக அமைந்திருந்தது. அபிராமியாக நடித்த எஸ். கல்யாணி தனது நடிப்பால் மட்டுமல்லாமல், தனது இனிமையான பாடல்கள் மூலமும் நமது பாராட்டுகளுக்கு உரியவர் ஆகிறார்.

இந்த நாடகம் சிறந்து விளங்கினதற்கு காட்சி ஜோடனைகளும், ஒரு காரணம். ஒளியைக் கட்டுப்படுத்தி இயற்கையான சூழ்நிலையை நாடகம் நெடுகிலும் சிருஷ்டித்தனர். மெல்ல மெல்ல தவழ்ந்து செல்லும் மேகங்கள், நிலவின் அமைதியான ஒளி,

இவைகளைத் தத்ரூபமாகக் காட்டினர் நாடகத்தில். மாணவ மாணவிகள் இந்த நாடகத்திற்குப் பதில் வேறு ஒரு முற்போக்கான, யாதார்த்த வாழ்வோடுஒட்டியநாடகத்தை தயாரித்து நடித்திருந்தால் இன்னும் அதிகமாகச் சோபித்திருக்கும் இந்தக் குறைதான் எனக்கு.



இவர்களைப் பாராட்டுகிறோம். இவர்கள்ஆர்வத்தைவரவேற்கிறோம். இத்துடன் நில்லாமல் வாழ்வோடு ஒட்டிய கதைகளைத் தேர்ந்தெடுத்து நாடகமாக நடிப்பதில் தங்களது திறமையைக்காட்ட வேண்டுமென்று மாணவ மாணவிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—வி. ரோஹிணி



# எங்கள் புத்தகக் கடை

**மைலாப்பூர் லஸ், கச்சேரித் தெரு, 62-A எண்ணுள்ள கட்டிடத்தில் நடைபெறுகிறது**

**அங்கு எல்லா வகையான தமிழ், ஆங்கிலப் புத்தகங்களும் கிடைக்கும்.**

**சக்தி காரியாலயம்,**
**சென்னை-14.**



செந்தமிழ்நாட்டின் பைந்தமிழ் மொழியின் பேரிகை!
தமிழக இலக்கிய வானிலே தகதகக்கும் தாரகை!

## தமிழன்

**தமிழ் இலக்கிய மாத இதழ்**

**ஆசிரியர்: மாஜினி**

- எழுத்துலகச் சிற்பிகளின் கருத்தோவியங்கள்!
- வண்ண நடையிலே திகழும் எண்ணக் குவியல்கள்!
- கலைமணம், காவிய குணம் கமழும் கதைகள், கவிதைகள்!
- கார்க்கி, செகாவ், மாப்பஸான், பால்ஸாக், ஹியூகோ, எமிலிஜோலா, ஜேக்லண்டன், ஹோவர்ட் பாஸ்ட், முல்க்ராஜ், கிஷன்சந்த, காண்டேகர், முதலிய அகில உலக அறிஞர்களின் பிற மொழிப்படையல்கள்!
- சினிமா, விஞ்ஞானப் பகுதிகள்!
- ஐந்து கலர் ஆர்ட் அட்டை, அழகான அமைப்பு!

**தனிப்பிரதி விலை அணா 4**

எஜன்ஸி வேண்டுவோர் எழுதுக:

**தமிழன் காரியாலயம்**

66, மேலக்கோபுரத்தெரு. மதுரை.

# அரிய நூல்கள்

●

## அரசியல்

| | | | |
|---|---|---|---|
| அபேதவர்தம் | ராஜாஜி ரூ. | 1 | 0 |
| அரசியல் விமோசனம் | ,, | 0 | 8 |
| மார்க்ஸீசம் என்றால் என்ன? | எமிலி பேர்ன்ஸ் | 1 | 0 |
| பூலோக யாத்திரை | இலின் | 0 | 4 |
| இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்பு | ந. வேங்கடராமன் | 3 | 0 |
| ராஜ்யம் | க. சந்தானம் | 1 | 0 |
| காஷ்மீர் பிரச்னை | எஸ். ராமகிருஷ்ணன் | 0 | 6 |

## சரித்திரம்:

| | | | |
|---|---|---|---|
| எரிமலை | வீர சாவர்க்கர் | 5 | 0 |
| ஹிந்துபத பாதுஷாஹி | ,, | 3 | 12 |
| புதிய சீனாவிலே | எஸ். ராமகிருஷ்ணன் | 1 | 12 |

## பொருளாதாரம்:

| | | | |
|---|---|---|---|
| பணம் | எமிலி பேர்ன்ஸ் | 1 | 8 |
| செல்வம் | க. சந்தானம் | 1 | 8 |
| உணவுப் பஞ்சம் | மு. அருணாசலம் | 1 | 8 |

## சயன்ஸ்:

| | | | |
|---|---|---|---|
| உலோகங்களும் நாமும் | மு. அருணாசலம் | 5 | 0 |
| ஆணா? பெண்ணா? | ரகுநாதன் | 2 | 8 |
| அணுவை அறிக | நா. கி. நாகராஜன் | 1 | 8 |
| சூரிய நமஸ்காரம் | திருவேதி | 1 | 0 |

தபால் செலவு ஒவ்வொரு புத்தகத்திற்கும் ஆறணா சேர்த்து மணியார்டரில் அனுப்ப வேண்டும். வி. பி.யில் அனுப்புவதனால் ஒரு ரூபாய் தபால் செலவாகும்.

## இவை சக்தி வெளியீடுகள்

●

# சக்தி காரியாலயம்

115E மோபரிஸ் ரோடு, சென்னை-14.

Edited and Published by Vai Govindan, SHAKTI Karyalayam 115E Mowbray's Road, Madras, 14. Printed by A. Ganapathy at Asian Printers, 4, Venkatesa Naicken St., Chepauk, Madras-5.

# சக்தி வெளியீடுகள்

**பணம்** எமிலி பேர்ன்ஸ்

பணம் என்ருல் என்ன? அதன் தன்மை என்ன? அதன் பூர்வீகம் என்ன? இன்றைய சமுதாயத்தில் அதன் இடம் என்ன? அதன் எதிர்காலம் என்ன? என்ற விஷயங்களை அலசி ஆராய்ந்திருக்கிருர் ஆசிரியர். வெ. ராமசாமியின் ஆற்ெருழுக்குப்போன்ற தமிழ் மொழி பெயர்ப்பு ரூ. ஒன்றரை

தபால் செலவுடன் ரூ. 1—10

**அணுவை அறிக** நா. கி. நாகராசன்

அணுவைப்பற்றிய அறிவு தற்கால பௌதிகத் திற்கே அடிப்படையானது. பொருளின் அமைப்பு, மின்சாரத்தின் தன்மை, ஒளியின் பண்பு, அணு குண்டின் பேயாற்றல், முதலிய விஞ்ஞான உண்மை களை உணர அணுவின் தன்மை அறியவேண்டும் பழங் கால இந்தியத் தத்துவ ஞானிகளது கற்பனையிலிருந்து ஹைடிரஜன் குண்டு பற்றிய ஆராய்ச்சிவரை இந்த புத்தகத்தில் ஆசிரியர் விளக்கி இருக்கிருர். ரூ. ஒன்றரை

தபால் செலவுடன் ரூ. 1—10

**நான்கு முட்டாள்கள்** அணில் அண்ணன்

வேடிக்கையான கதை விறுவிறுப்பான கதை. குழந்தைகள் கதையைப் படித்தால் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். பெரியவர்களும் படிக்கலாம். இது குழந் தைக் கதைப் புத்தகம். அணு 4

தபால் செலவுடன் அணு 5

## சக்தி காரியாலயம் சென்னை-14.

மு. அருணாசலம் எழுதிய

# காய்கறித் தோட்டம்



மூன்றும் பதிப்பு — 300 பக்கம் — காலிகோ எ
விலை ரூ. ஐந்து. ★ தபால் செலவு ரூ. ஒன்

## சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை, சென்னை-14

ASIAN PRINTERS, MADRAS-5.